வெளியீடு: 7-7-2008 Issued: 7-7-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 26, 2008—தொகுதி 42—எண் 3

Wednesday the 26th March, 2008—Volume 42—No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V2 11, 31'P08
P08.42.3
228400

26–3–2008

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்-I) | 89-154 |
| **2. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 32–ஐத் தளர்த்துதல் | 155 |
| **3. அறிவிப்பு—** | |
| மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 155-156 |
| **4. தகவல் கோரல்—** | |
| தென் மாவட்டங்களில் பலத்த மழையால் ஏற்பட்ட சேதங்கள்—அரசு நிவாரணம் | 156-186 |
| திரு. கு. செல்வம் | 156 |
| திரு. மு. கண்ணப்பன் | 157-158 |
| திரு. விஜயகாந்த் | 158-159 |
| *திரு. எஸ். இராசசேகரன் | 159 |
| திரு. சி. கோவிந்தசாமி | 160-162 |
| *திரு. ஜி.கே. மணி | 162-170, 173-174, 184-185 |
| *திரு. பா. வேல்துரை | 170-173 |
| திரு. ஓ. பன்னீர்செல்வம் | 174-178,186 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 178-183 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. முன்பண மானியக் கோரிக்கைகள், 2008–2009, அளித்தல்—** | 186-192 |
| * மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 186 |
| **6. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2007–2008, அளித்தல்—** | 192-199 |
| * மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 192-194 |
| **7. வரவு–செலவுத் திட்டம், 2008–2009, பொது விவாதம்—** | 199-287 |
| *திரு கோ. அரி | 199-208 |
| திரு. ஆர். எஸ். ராஜ கண்ணப்பன் | 209-226 |
| திருமதி டி. யசோதா | 226-240 |
| *திரு. கோ. எதிரொலி மணியன் | 240-251 |
| *திரு. கே. மகேந்திரன் | 251-264 |
| *திரு. எஸ். இராசசேகரன் | 264-270 |
| *திரு. நா. இராமகிருஷ்ணன் | 270-275 |
| *திரு. விடியல் எஸ். சேகர் | 275-278 |
| *திரு. ஆ. அருண்மொழிதேவன் | 278-287 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 288-289 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 13

## 2008 மார்ச் 26, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு"

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் அரசுக்குரிய தகுதிகளாகும்.

### 1. வினாக்கள்–விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்**

**பட்டியல்-1 @**

**1—**

**கள்ளச்சாராயம்**

**வினா எண் 2487—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் விற்றவர்கள் எவ்வளவு பேர் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டார்கள்?

(ஆ) இவர்கள் வேறு தொழில் செய்ய அரசு உதவி புரிந்துள்ளதா?

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2008 மார்ச் 26

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 2005 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் விற்ற குற்றத்திற்காக மொத்தம் 6,324 பேர் கைது செய்யப்பட்டனர்.*

*(ஆ) வேறு தொழில் செய்ய, 10 நபர்களுக்கு தலா ரூ.10,000/- வீதம் ரூ.1 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.*

**2—**

**மதுக்கடை**

**வினா எண் 13198—திரு. டி. மூர்த்தி:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்போரூர் தொகுதி-மாம்பாக்கம் பள்ளி, அருகில் அமைந்துள்ள மதுக்கடை வேறு இடத்திற்கு மாற்றப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், வண்டலூர் கேளம்பாக்கம் சாலையில் மாம்பாக்கம் கிராமத்தில் மதுபானக் கடை (எண் 4316) வண்டலூர்-கேளம்பாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்திருந்தது. இக்கடைக்கு 100 மீட்டருக்கு அப்பால் பள்ளி அமைந்துள்ளது. இருப்பினும் பள்ளி மாணவ மாணவிகள் இக்கடையை கடந்து செல்லவேண்டியுள்ளதால் இவர்களின் நலன் கருதி மேற்படி மதுபானக்கடை 25-12-2006 முதல் வேறு இடத்திற்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.*

**3—**

**தொழிற்சாலை**

**வினா எண் 26040—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
2284.00
சென்னை-600 008



2008 மார்ச் 26]

*(அ) மானாமதுரை, சிப்காட் வளாகத்தில் துடைப்பான்கள் (brush) தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இதுபோன்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**4—**

**தொழிற்சாலை**

**வினா எண் 26046—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை, சிப்காட் வளாகத்தில் யூக்லிப்டெஸிலிருந்து வாசனைத் திரவியம் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம், எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இதுபோன்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**5—**

**முழுநேர மின்சாரம்**

**வினா எண் 11443—திரு. அ. தமிழரசு:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி, வேப்பிலை, டேனிஷ்பேட்டை ஆகிய ஊராட்சி விவசாயிகளுக்கு முழு நேர மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி, வேப்பிலை, டேனிஷ்பேட்டை ஆகிய ஊராட்சி விவசாயிகளுக்கு, வாரிய விதிகளின்படி நகரிய மின்பாதையில் உள்ள மின் இணைப்புகளுக்கு 24 மணி நேரம் மும்முனை மின்சாரமும், கிராமிய மின்பாதையில் உள்ள மின் இணைப்புகளுக்கு பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. கிராமிய மின் பாதைமூலம் வழங்கப்படும் 14 மணி நேர மும்முனை மின்சாரத்தை முழு நேர மின்சாரமாக வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

**6—**

**மின் வசதி**

**வினா எண் 12269—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சிப்காட் கலைக்கூத்து நகருக்கு மின்வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, சிப்காட் கலைக்கூத்து நகருக்கு மின்வசதி செய்வதற்கு ரூ.36,180/- மதிப்பீட்டில் 6 எண்ணம் மின் கம்பங்கள் ஊன்றி, மின்கம்பி இழுத்து 11-4-2007 அன்று மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டது.

**7—**

**மின் வசதி**

**வினா எண் 14107—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், மேலபாதி ஊராட்சியிலிருந்து கருவாழைக்கரை ஊராட்சி வரை காவிரிப் படுகையின் ஓரம் மின் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், மேலபாதி ஊராட்சியிலிருந்து கருவாழைக்கரை ஊராட்சி வரை காவிரிப் படுகையின் ஓரம் தெருவிளக்குகள் அமைக்க விண்ணப்பம் எதுவும் இதுவரை மின் வாரியத்தில் பெறப்படவில்லை. உரிய விண்ணப்பம் பெறப்பட்டால் தெருவிளக்குகள் அமைக்க மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**8—**

**மின்சார உற்பத்தி**

**வினா எண் 15218—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தேவையான மின்சாரம் உற்பத்தி செய்ய அரசிடம் புதிய திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

ஆம்.

(அ) பவானி தடுப்பு அணை 1 மற்றும் 2 நீர் மின் திட்டங்கள் (ஒவ்வொன்றும் 2 x 5 மெகாவாட்) அரசின் ஒப்புதல் பெற்று திட்டப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) பில்லூர் தடுப்பு அணை நீர் மின் திட்டங்கள் (4 x 10 மெகாவாட்) வனத் துறையின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

[2008 மார்ச் 26

(இ) சிறுவானி நீர் மின் திட்டம் (1 x 3 மெகாவாட்) கேரள அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**9—**

## புதிய கம்பிவடம் பதித்தல்

**வினா எண் 19989—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 16-இல் பீ. பம்பிங் ஸ்டேஷன் சாலை, ராஜகோபால் தெரு, ஆதம் தெரு, பாஷ்யம் தெரு, சீனிவாசலு தெரு. ஆளவந்தார் தெரு, ராஜவேலு தெரு, வெங்கடபதி தெரு, வெங்கடராமானுஜலு தெரு, வீராசாமி தெரு, தாண்டவராயன் தெருவில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 16-ல் எல்லா இடங்களிலுமே மின்பாதைகள், ஏற்கெனவே புதைவடமாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் மேல்நிலை மின்பாதைகள் ஏதுமில்லை. பம்பிங் ஸ்டேஷன் சாலை, ராஜகோபால் தெரு, பாஷ்யம் தெரு, சீனிவாசலு தெரு, ஆளவந்தார் தெரு, வெங்கடபதி தெரு, வெங்கடராமானுஜலு தெரு, வீராசாமி தெரு மற்றும் தாண்டவராயன் தெரு, மற்றும் ஆதம் தெரு ஆகிய பகுதிகளில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. ராஜவேலு தெருவில் புதைவடம் மற்றும் மினி பில்லர் ஒன்றும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது.

**10—**

## புதிய கம்பி வடம்

**வினா எண் 20014—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 மார்ச் 26]

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17-ல் உள்ள சூரிய நாராயணன் தெரு, ஏ.ஜே. காலனி பிரதான சாலையில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி வட்டம் எண் 17-ல் உள்ள சூரிய நாராயணன் தெரு, ஏ.ஜே. காலனியில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**11—**

## மின் இணைப்பு

**வினா எண் 28966—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வெள்ளாள விடுதி ஊராட்சியில் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, வெள்ளாள விடுதி ஊராட்சியில் மொத்தம் உள்ள 221 குடிசைகளில் 68 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மின் விளக்கு வேண்டி மின் இணைப்பு வழங்க விண்ணப்பம் அளித்துள்ள 66 நபர்களுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 87 குடிசைகளுக்கு விண்ணப்பம் பெறப்பட்டவுடன், மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**12—**

## குறைந்த மின் அழுத்தம்

**வினா எண் 30176—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மார்ச் 26

(அ) சிங்காநல்லூர் தொகுதி, இடிகரை பேரூராட்சியிலுள்ள குறைந்த மின் அழுத்தத்தினை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதி, இடிகரை பேரூராட்சிப் பகுதிகளுக்கு இடிகரை மின்னூட்டிமூலமாக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. இம்மின்னூட்டியில் நிலவி வந்த குறைந்த மின்னழுத்தம் சீராகி, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

**13—**

## சூரிய சக்தி விளக்குகள்

**வினா எண் 30605—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் அனைத்து கிராம மயானங்களில் சூரிய சக்தி விளக்குகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் உள்ள அனைத்து கிராம மயானங்களிலும் சூரிய ஒளி தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுவிட்டன.

**14—**

## பூமிக்கடியில் மின் கம்பிகள் பதித்தல்

**வினா எண் 31460—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராமங்கலம் தொகுதி, தாராமங்கலம், மேச்சேரி பேரூராட்சியில் பூமிக்கடியில் மின் கம்பிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2008 மார்ச் 26]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாராமங்கலம் தொகுதி, தாராமங்கலம், மேச்சேரி பேரூராட்சியில் உள்ள மேல்நிலை மின்பாதைகளை புதைவடமாக மாற்றும் கருத்துரு தற்போது இல்லை.

**15—**

## மின் வசதி

**வினா எண் 31484—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகராட்சி, பகுதிகளிலுள்ள மின் கம்பிகளை பூமிக்கடியில் புதைத்து, மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

மதுரை, திருநெல்வேலி, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து மாநகராட்சிகளில் உள்ள மேல்நிலை மின்பாதைகளை புதைவடமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பட்டுக்கோட்டை நகராட்சி பகுதிகளிலுள்ள மேல்நிலை மின்பாதைகளை புதைவடமாக மாற்றும் கருத்துரு தற்போது இல்லை.

**16—**

## மின் மாற்றிகள்

**வினா எண் 32857—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதியில் மின் மாற்றிகளை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

[2008 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

கலசப்பாக்கம் தொகுதியிலுள்ள பழுதடைந்த மின்மாற்றிகள் திருவண்ணாமலையில் உள்ள சிறப்பு பராமரிப்புக் கூடத்தில் பழுது பார்க்கப்படுகின்றன. மேலும் பழுதடையும் மின்மாற்றிகள் உடனுக்குடன் மாற்றப்பட்டு வேறு மின்மாற்றிகள் நிறுவப்பட்டு மின்சாரம் வழங்கப்படுகின்றது.

**17—**

## மின் விளக்குகள்

**வினா எண் 33470—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், குமரன்கோயில் தெற்கு வீதியில் மின் கம்பங்கள் அமைத்து, மின் விளக்குகள் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், குமரன் கோயில் தெற்கு வீதியில் ஏற்கெனவே மூன்று குழல் விளக்குகள் உள்ளன. இந்த தெருவில் மின் கம்பம் நட்டு, மின் விளக்குகள் பொருத்த விண்ணப்பம் ஏதும் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பெறப்படவில்லை. அவ்வாறு தெருவிளக்கு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**18—**

## சீரான மின்சாரம்

**வினா எண் 34487—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 மார்ச் 26]

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**19—**

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 34573—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், செங்கோட்டை ஆதி திராவிடர் காலனியில் கூடுதலாக மின் கம்பம் அமைத்து தெரு விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், செங்கோட்டை ஆதி திராவிடர் காலனியில் ஏற்கெனவே 4 எண்ணம் தெருவிளக்குகள் உள்ளன. மேற்கண்ட பகுதிகளில் தெருவிளக்கு கோரி விண்ணப்பம் பெறப்படும் பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு தெருவிளக்குகள் அமைக்கப்படும்.

**20—**

## கூடுதல் தெருவிளக்கு

**வினா எண் 34900—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மார்ச் 26

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், சொக்கனாதிருப்பு பெரியகோட்டையிலுள்ள ஆதி திராவிடர் காலனியில் கூடுதலாக தெருவிளக்கு வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் சொக்கனாதிருப்பு கிராமத்தில் 12 தெருவிளக்குகள் உள்ளன. பெரியகோட்டையிலுள்ள ஆதி திராவிடர் காலனியில் 10 எண்ணம் தெருவிளக்குகள் உள்ளன. மேற்கண்ட பகுதிகளில் மேலும் தெருவிளக்கு அமைக்கக் கோரி விண்ணப்பம் பெறப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்பட்டு தெருவிளக்கு அமைக்கப்படும்.

**21—**

### மின் விளக்குகள்

**வினா எண் 35815—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், நல்லாடை நெட்டி குளத்திலிருந்து நல்லாத்தூர் பாலம் வரை மின்கம்பங்கள் நட்டு, மின் விளக்குகள் பொருத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், நல்லாடை நெட்டி குளத்திலிருந்து நல்லாத்தூர் பாலம் வரை மின்கம்பங்கள் நட்டு, மின் விளக்குகள் பொருத்த விண்ணப்பம் ஏதும் ஊராட்சி மன்றத்திலிருந்து பெறப்படவில்லை. மேலும், இந்தப் பகுதியில் தெரு மின் விளக்குகள் ஏதும் இல்லை. மேற்கண்ட பகுதிகளில் தெருவிளக்கு வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், தெருவிளக்கு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 மார்ச் 26]

**22—**

### மின் கம்பிகள் பதித்தல்

**வினா எண் 36013—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரில் பூமிக்கடியில் மின் கம்பிகள் பதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை நகரில் உள்ள மேல்நிலை மின் பாதைகளை புதைவடமாக மாற்றும் கருத்துரு தற்போது இல்லை.

**23—**

### மின் கம்பிகளை மாற்றுதல்

**வினா எண் 36658—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மிளகனூரில் பழுதுபட்டுள்ள மின்கம்பிகளை புதிய மின் கம்பிகளாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மிளகனூரில் உள்ள ஏ.சி.எஸ்.ஆர். 7/2.11 எம்.எம். தாழ்வழுத்த மின் கம்பிகளில் பழுதான 0.7 கி.மீ. மின் கம்பிகள் ஏ.சி.எஸ்.ஆர். 7/259 எம்.எம். மின் கம்பிகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய [illegible] உள்ளன.

**24—**

### சீரான மி[illegible]சாரம்

228 400
சென்னை-600 008

**வினா எண் 38491—திரு. மு. அப்[illegible]:** மாண்புமிகு [illegible]சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு [illegible]

[2008 மார்ச் 26

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்காபுரம் தெற்கு காலனி, சமூகரெங்காபுரம் ஊராட்சி, துரைகுடியிருப்பு கிராமத்தில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்காபுரம் தெற்கு காலனி, சமூக ரெங்காபுரம் ஊராட்சி, துரைகுடியிருப்பு பகுதியில் ஒரு புதிய மின்மாற்றி நிறுவப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**25—**

**ரேஷன் கடை மாற்றம்**

**வினா எண் 4198—திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவல்லிக்கேணி தொகுதி, வார்டு எண் 95-ல் தற்பொழுது இயங்கி வரும் ரேஷன் கடையை வேறு இடத்திற்கு மாற்றித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவல்லிக்கேணி தொகுதி, வார்டு எண் 95-ல் இயங்கி வந்த டி.யு.சி.எஸ். ஆழ்வார்பேட்டை கிளை எண் 4 என்ற நியாயவிலைக் கடை பழுதடைந்த கட்டடத்தில் இயங்கிவந்ததால், இக்கடையில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளில் 321 அட்டைதாரர்களை டி.யு.சி.எஸ். விவேகானந்தபுரம் அங்காடியில் இணைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 567 குடும்ப அட்டைகளுடன் டி.யு.சி.எஸ். என்ற நியாயவிலைக் கடை, இராயப்பேட்டை லட்சுமிபுரம் தெருவில் தனி கவுண்டராக 16-2-2007 முதல் செயல்படுகிறது.



2008 மார்ச் 26]

**26—**

**நியாயவிலைக் கடை**

**வினா எண் 5125—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் ஒன்றியம், பாப்பம்பாடி ஊராட்சி கொண்டக்காரனூரில் புதியதாக கட்டப்பட்ட நியாயவிலைக் கடையை உடன் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் ஒன்றியம், பாப்பம்பாடி ஊராட்சி, கொண்டக்காரனூரில் செயல்படும் முழுநேர நியாயவிலைக் கடைக்கு அரசு சார்பில் புதியதாக கட்டடம் ஏதும் கட்டித்தரப்படவில்லை. இந்நியாயவிலைக் கடை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாயவிலைக் கடைக்கு அரசு கட்டடம் ஏதும் இல்லாத நிலையில் கொண்டக்காரனூரில் புதியதாக கட்டப்பட்ட நியாயவிலைக் கடை கட்டடத்தைத் திறக்க நடவடிக்கை எடுக்கும் வினா எழவில்லை.

**27—**

**சொந்தக் கட்டடம்**

**வினா எண் 6785—திரு. கு.ப. வேலுமணி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், போரூர் தொகுதி, ரொட்டிக்கவுண்டனூர் திருமலையம் பகுதியிலுள்ள நியாயவிலைக் கடைக்கு சொந்தமாகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், போரூர் தொகுதி, ரொட்டிக்கவுண்டனூர் திருமலையம் பகுதியிலுள்ள திருமலையம்பாளையம் நியாயவிலைக் கடை முழுநேரக் கடையாக 1,167 குடும்ப அட்டைகளுடன் கோவை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கக் கட்டுப்பாட்டின் கீழ் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணியினை சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**28—**

**பகுதிநேர நியாயவிலைக் கடை**

**வினா எண் 6790—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி, மேட்டுத் தெரு, பட்டக்காரன் வளவு பகுதி, கவுண்டனேரி, கட்டப்புளியங்காடு, சின்னமுத்தான்காடு பகுதி, வைகுந்தம் கிராமம், ரங்கன் வளைவு, வேடிச்சக்காடு, பள்ளிக் கொண்டான் வளவு, நாயக்கன் வளவு, வெள்ளையம் பாளையம் பகுதி, வேடிச்சிக்காடு ஆகிய பகுதிகளுக்குத் தனியாக பகுதி நேர நியாயவிலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி, மேட்டுத் தெரு, பட்டக்காரன் வளவு பகுதி, கவுண்டனேரி, கட்டப்புளியங்காடு, சின்னமுத்தான் ஆகிய பகுதிகளில் முறையே 126, 178 மற்றும் 30 ஆக மொத்தம் 334 குடும்ப அட்டைகளே



உள்ளன. இப்பகுதி மக்கள் எர்ணாபுரம்-2 நியாயவிலைக் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இப்பகுதிகளுக்கும், எர்ணாபுரம்-2 நியாயவிலைக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 1½ கி.மீட்டருக்கும் மேல் உள்ளது. எனினும் தற்போது நடைமுறையிலுள்ள அரசாணைகளில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி புதிய பகுதி நேரக் கடை அமைக்க அப்பகுதியில் இலவசக் கட்டடம் தர யாரும் முன்வரவில்லையாதலால், இப்பகுதிகளுக்கு புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

வைகுந்தம் கிராமத்திலுள்ள, ரங்கன் வளைவு, வேடிச்சகாடு, நாய்க்கன்வளவு மற்றும் வெள்ளையம்பாளையம் பகுதிகளில் முறையே 90, 30, 30, 100 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இக்குடும்ப அட்டைதாரர்கள் இப்பகுதிகளிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள கலைச்சிப்பாளையம் நியாயவிலைக் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருவதால், இப்பகுதிகளுக்கும் புதிய பகுதி நேரக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும், சங்ககிரி வட்டம், வைகுந்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்பட்டுவரும் கணக்கச்சிபாளையம் நியாயவிலைக் கடை வெள்ளையம்பாளையம் பகுதியில் உள்ள 163 குடும்ப அட்டைகளைப் பிரித்து அ.தாழையூர் நியாயவிலைக் கடையுடன் இணைப்பதற்காக ஆணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

**29—**

**நியாயவிலைக் கடை**

**வினா எண் 7818—திரு. கோ. அரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாலங்காடு ஒன்றியம், முத்துகொண்டாபுரம் கிராமத்தில் நியாயவிலைக் கடை ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம் முத்துகொண்டாபுரம் கிராமத்தில் ஒரு முழுநேர நியாயவிலைக் கடை,

கனகம்மா சத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. எனவே இப்பகுதியில் மீண்டும் ஒரு நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. இவ்வூரில் உள்ள நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள கிராமங்கள் மற்றும் குடும்ப அட்டைகளின் விவரம் பின்வருமாறு:—

| வ.எண் | கிராமத்தின் பெயர் | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முத்துக்கொண்டாபுரம் | 344 |
| 2 | எட்டியத்தாங்கல் | 70 |
| 3 | சீத்தாபுரம் | 170 |
| 4 | ஒட்டன்சத்திரம் | 40 |
| | மொத்தம் | 624 |

30—

## நியாயவிலைக் கடை

**வினா எண் 7842—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் மானாம்பள்ளி குடியிருப்புப் பகுதிக்கு நியாயவிலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, மானாம்பள்ளி பகுதியானது மானாம்பள்ளி எஸ்டேட் மற்றும் மானாம்பள்ளி பவர்ஹவுஸ் ஆகிய இரு பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். மானாம்பள்ளி பகுதியில் கோயமுத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, மானாம்பள்ளி எஸ்டேட் பகுதியில் 102 குடும்ப அட்டைகளுடனும், மானாம்பள்ளி பவர்ஹவுஸ் பகுதியில் 35 குடும்ப அட்டைகளுடனும் இரண்டு முழுநேர நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகின்றது. இந்நிலையில் இதே பகுதிகளில் மீண்டும் புதியதாக நியாயவிலைக் கடையை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.





31—

## நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 11047—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், காமலாபுரம் ஊராட்சி பள்ளிவீரன்காடு பகுதியில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியத்தில் காமலாபுரம் ஊராட்சி பள்ளிவீரன்காடு பகுதியில் பள்ளிவீரன்காடு என்ற பகுதிநேர நியாயவிலைக் கடை 252 குடும்ப அட்டைகளுடன் காமலாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டில் இலவசக் கட்டடத்தில் செயல்படுகிறது. இந்நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட போதுமான இடம் வழங்க காமலாபுரம் ஊராட்சி மன்றத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலம் தொடர்பான ஆவணங்கள் ஊராட்சி மன்றத் தலைவரால் வங்கிக்கு ஒப்படைத்தபின் இந்நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32—

## பகுதி நேர நியாயவிலைக் கடை

**வினா எண் 12037—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதி, கம்பம் ஒன்றியம், கார்கில் சிக்கையன்பட்டியில் பகுதிநேர நியாயவிலைக் கடை தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கம்பம் தொகுதி, கம்பம் ஒன்றியம், கார்கில் சிக்கையன்பட்டி கிராமத்தில் 380 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்குடும்ப அட்டைகள், உத்தமபாளையம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் அனுமந்தன்பட்டி நியாயவிலைக் கடை எண் 2 உடன் இணைக்கப்பட்டுள்ளன. அனுமந்தன்பட்டி நியாயவிலைக் கடையில் மொத்தம் 1,403 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்நியாயவிலைக் கடைக்கும், பகுதிநேரக் கடை அமைக்கக்கோரும் கார்கில் சிக்கையன்பட்டி கிராமத்திற்கும் இடையே 1 கிலோ மீட்டர் தூரம் மட்டுமே உள்ளதால், நடைமுறையிலுள்ள அரசாணையின்படி இக்கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**33—**

## நியாயவிலைக் கடை

**வினா எண் 13993—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட கீழ்கரிக்காத்தூர், நாராயணமங்கலம் மற்றும் கூடலூர் ஆகிய கிராமங்களில் நியாயவிலைக் கடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கீழ்க்கரிக்காத்தூர் கிராமத்தில், மண்டகொளத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 201 குடும்ப அட்டைகளைக் கொண்டு ஏற்கனவே ஒரு முழுநேர நியாயவிலைக் கடை செயல்பட்டு வரும் நிலையில், இங்கு மீண்டும் ஒரு நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.



நாராயணமங்கலம் கிராமத்தில் ஏற்கனவே பெரியகொழப்பலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 170 குடும்ப அட்டைகளைக் கொண்டு நியாயவிலைக் கடை செயல்பட்டு வரும் நிலையில் இங்கு மீண்டும் ஒரு புதிய நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

கூடலூர் கிராமத்தில் ஏற்கனவே வடமாதிமங்கமலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 409 குடும்ப அட்டைகளைக் கொண்டு நியாயவிலைக் கடை செயல்பட்டு வரும் நிலையில், இங்கு மீண்டும் ஒரு புதிய நியாயவிலைக் கடை அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

**34—**

## நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 16823—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பண்ணப்பட்டி ஊராட்சி, காங்கியானூர் நியாயவிலைக் கடைக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், பண்ணப்பட்டி ஊராட்சி, காங்கியானூர் நியாயவிலைக் கடை 341 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேரக் கடையாக இலவசக் கட்டடத்தில் செயல்படுகிறது. தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையின்படி பகுதிநேர கடைக்கு உள்ளூர் மக்களால் இலவச கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும் என்ற நிலையில் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**35—**

## நியாயவிலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 18314—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 மார்ச் 26

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், திம்மநத்தம் ஊராட்சி, சுழிஒச்சான்பட்டியில் பகுதிநேர நியாயவிலைக் கடை கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், திம்மநத்தம் ஊராட்சி லிங்கப்பநாயக்கனூர் நியாயவிலைக் கடையுடன் சுழிஒச்சான்பட்டி கிராமத்திலுள்ள குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. தாய்க்கடை லிங்கப்பநாயக்கனூர் கிராமத்திலிருந்து ½ கி.மீ. தூரத்தில் சுழிஒச்சான்பட்டி கிராமம் உள்ளதால், சுழிஒச்சான்பட்டியில் பகுதிநேரக் கடை அமைக்கவும் அதற்கான கட்டடம் கட்டுவதற்கும் அரசு விதிகளின்படி சாத்தியக்கூறுகள் இல்லை.

**36—**

## கூட்டுறவு வங்கி

**வினா எண் 30710—திரு. செ. சின்னசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரி கிராமத்தில் கூட்டுறவு வங்கி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத் துறையின் திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் உள்ள கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லைக்குட்பட்ட மருங்காபுரி பகுதியில், மருங்காபுரி, யாகபுரம் மற்றும் டி. இடையப்பட்டி ஆகிய மூன்று வருவாய் கிராமங்கள் உள்ளன. கவுண்டம்பட்டி தொடக்க



2008 மார்ச் 26]

வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 2,748. இதில் மருங்காபுரி பகுதியைச் சேர்ந்தவர்கள் 769. இவர்களில் 592 உறுப்பினர்கள் மட்டுமே 31-7-2007 வரை கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றுள்ளனர். தற்போது இயங்கி வரும் கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியே, மருங்காபுரி பகுதி மக்களுக்கு நிறைவான சேவை செய்து வருகிறது. மேலும், மேற்கூறிய வங்கியை பிரித்து மருங்காபுரி பகுதியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை அமைத்தால், இரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுமே வாழ்திறனுடன் செயல்படும் வாய்ப்புகள் பெருமளவில் இல்லாமல் போய்விடும். எனவே, மருங்காபுரி கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை புதிதாகத் துவக்க இயலாத நிலை உள்ளது.

**37—**

## நிலவள வங்கி

**வினா எண் 32511—திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையில் இயங்கி புதுக்கோட்டைக்கு மாற்றப்பட்ட நிலவள வங்கியை மீண்டும் கந்தர்வக்கோட்டையில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக் கிளை ஒன்று 10-3-1982 முதல் கந்தர்வக்கோட்டையில் செயல்பட்டு வந்தது. இக்கிளையில் ஏற்படும் செலவினங்கள் அதிகரித்ததாலும், கிளையின் வருமானம் அதிகரிக்காத காரணத்தாலும், பணியாளர்கள்

எண்ணிக்கை குறைந்து வந்த காரணத்தாலும், கிளை அலுவலகத்தை மூடிவிட முடிவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து கந்தர்வக்கோட்டை கிளையில் செய்து வந்த பணிகள் 10-2-2003 முதல் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றன. எனவே, கந்தர்வக்கோட்டையில் மீண்டும் நிலவள வங்கியோ அல்லது கிளையோ புதிதாகத் துவக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**38—**

## நியாயவிலைக் கடை

**வினா எண் 35394—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, சங்கிரி வட்டம், பொந்தானூரில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி வட்டாரம், கன்னந்தேரி கிராமம், கரையானூர் நியாயவிலைக் கடையில் 337 குடும்ப அட்டைகளுடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் பொந்தானூர் பகுதியின் 40 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. பொந்தானூரில் வெறும் 40 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாலும், தாய் கடைக்கும், பொந்தானூர் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் (1.25 கி.மீ.) 1½ கி.மீ.-க்கும் குறைவாக இருப்பதாலும், அரசின் நிபந்தனை இந்நேர்வில் பூர்த்தியாகாததால் பொந்தானூர் பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**39—**

## தூண்டில் வளைவு

**வினா எண் 1960—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், மீனவ கிராமங்களான கூட்டப்புளி, பெருமணல் இடிந்தகரை, தோமையார்புரம், உவரி, கூத்தன்குழி, கூட்டப்பனை, கூடுதாழை ஆகிய கடற்கரை கிராமங்களில் தூண்டில் சரிவு கட்டிக் கொடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இடிந்தகரை மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்க பகுதி-2 திட்டத்தில் செயல்படுத்த பொதுப் பணித் துறையின் 19-09-2006 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 171-ல் ரூ. 6.20 கோடிக்கு அரசின் ஒப்புதல் வழங்கப்படும்பொழுது, அதில் ரூ. 25.00 இலட்சங்கள் மட்டும் பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், பொதுப் பணித் துறையின் 10-10-2007 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 329-ல் மீதமுள்ள தொகையான ரூ. 595.00 இலட்சங்களுக்கு அரசு நிதியிலிருந்து தற்போது ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளிக்கு தற்போது ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் வழங்கும் குழுவினால் (TAC) ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மேலும், இதர மீனவ கிரமாங்களில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| கூட்டப்புளி | : | ரூ. 6.18 கோடி |
| பெருமணல் | : | ரூ. 9.83 கோடி |
| தோமையாபுரம் | : | ரூ. 5.92 கோடி |
| உவரி | : | ரூ. 5.20 கோடி |
| கூத்தன்குழி | : | ரூ. 7.50 கோடி |
| கூட்டப்பனை | : | ரூ. 5.90 கோடி |
| கூடுதாழை | : | ரூ. 6.90 கோடி |

[2008 மார்ச் 26

கடலரிப்புத் தடுப்புத் திட்டங்களுக்காக அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழு மற்றும் I.H.H., பூண்டி நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசனையின் அடிப்படையில், ஒருங்கிணைந்த கருத்துரு பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**40—**

## புதிய ஏரி

**வினா எண் 25865—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கோடுஅள்ளி ஊராட்சி, கருங்கலூர் போண்டு கொல்லை அருகில் புதிய ஏரி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, கோடுஅள்ளி ஊராட்சி, போண்டு கொல்லை என்கிற பொன்காடு என்னுமிடத்தில் கோரப்படும் ஏரி தளம் பெரும்பகுதி பாதுகாக்கப்பட்ட வன நிலத்தில் அமைகிறது. மேலும், அதே இடத்தில் ஊரக வளர்ச்சித் துறைமூலம் ஒரு குட்டை அமைக்கப்பட்டுள்ளதால், மற்றொரு புதிய ஏரியமைக்க சாத்தியமில்லை.

**41—**

## கால்வாய் வெட்டுதல்

**வினா எண் 30978—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, மூக்கனூர் ஊராட்சி, எம். ஒட்டப்பட்டி கிராம பகுதியிலுள்ள புதிய ஏரியிலிருந்து பழைய ஏரிக்கு கால்வாய் வெட்ட அரசு ஆவன செய்யுமா?



2008 மார்ச் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தர்மபுரி தொகுதி, மூக்கனூர் ஊராட்சி, எம்.ஒட்டப்பட்டி ஏரிக்கு மூக்கன் கொட்டாய் புதிய ஏரியிலிருந்து நீர் வழங்கும் திட்டம் பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு, திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

**42—**

## பேருந்து வசதி

**வினா எண் 6017—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மதுரை கோட்டம் II தடம் எண் 59பி திருநெல்வேலி-ஆத்தங்கரை பள்ளிவாசல் மற்றும் தடம் எண் 200 வள்ளியூர்-ஆத்துக்குறிச்சி ஆகிய தடங்களில் பேருந்தை மீண்டும் இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி-ஆத்தங்கரை பள்ளிவாசல் என இயக்கப்பட்ட தடம் எண் 59B போதிய பயணிகள் ஆதரவின்றி குறைந்த பயணிகள் அடர்வுடன் இயக்கப்பட்டதால் சுமார் 4 ஆண்டுகளுக்கு முன் நிறுத்தப்பட்டுவிட்டது. இவ்வழித்தடத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. தடம் எண் 200-ஐ பொறுத்தவரை வள்ளியூர்-ஆத்துக்குறிச்சி தடத்தில் இயக்கப்பட வேண்டிய 4 சுற்றுகளும் முறையாக இயக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரப்படுகின்றன.

**43—**

## பேருந்து வசதி

**வினா எண் 6359—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 மார்ச் 26

உசிலம்பட்டி தொகுதி, மதுரை பெரியார் நிலையத்திலிருந்து செக்கானூரணி வழியாக கண்ணனூர் செல்லும் பேருந்தை கண்ணாபுரம் நரசிங்கபுரத்திற்கும், மதுரையிலிருந்து மேலக்கால், விக்கிரமங்கலம், ரெட்டிபட்டி, பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி, கருமாத்தூர் வழியாக செட்டிகுளம் பேருந்தை ஆண்டிப்பட்டிக்கும் நீட்டிப்புச் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரை பெரியார் நிலையத்திலிருந்து கண்ணனூருக்குத் தற்போது இரண்டு தனிநடைகள் பேருந்து இயக்கப்படுகிறது. கண்ணனூர் விக்கிரமங்கலம் பிரதானச் சாலையிலிருந்து 1.5 கி.மீ. தூரத்தில் கண்ணாபுரமும், அங்கிருந்து 1.0 கி.மீ. தூரத்தில் நரசிங்கபுரமும் உள்ளன. கண்ணாபுரம் பிரிவு சாலை முதல் கண்ணாபுரம் வரையுள்ள சாலை மிகவும் சேதமடைந்து பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. தற்போது, இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கண்ணாபுரம் பிரிவு வழியாக மதுரை பெரியார் நிலையத்திலிருந்து நடுமுதலைக்குளம், கீழப்பட்டி, விக்கிரமங்கலம் தடங்களில் இயக்கப்படும் 34 தனி நடைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். உசிலம்பட்டி-விக்கிரமங்கலம் பிரதானச் சாலையிலிருந்து 1.0 கி.மீ. தூரத்தில் உள்ள ரெட்டியபட்டிக்கு மதுரை பெரியார் நிலையத்திலிருந்து மேலக்கால், விக்கிரமங்கலம் வழியாக 4 தனி நடைகள் பேருந்து இயக்கப்படுகிறது. ரெட்டியபட்டி பிரிவு நிறுத்தம் வழியாக உசிலம்பட்டி-விக்கிரமங்கலம் மற்றும் பெரியார் நிலையம்-தெப்பத்துப்பட்டி தடப் பேருந்துகள்மூலம் 26 தனி நடைகள் பேருந்து வசதிகள் உள்ளன. கொடிக்குளத்திலிருந்து 3.0 கி.மீ. தூரத்தில் ஏ.ஆண்டிப்பட்டி கிராமம் உள்ளது. ஏ. ஆண்டிப்பட்டிக்கு ஏற்கெனவே உசிலம்பட்டி-கொடிக்குளம் தடப் பேருந்தின்மூலம் பள்ளி நேரங்களில் 4 தனி நடைகள் பேருந்து இயக்கப்படுகிறது. தற்போதுள்ள வசதிகள்மூலம் கொடிக்குளம் வந்து மதுரை செல்வதற்குப் போதுமான வசதிகள் உள்ளன.

**44—**

## பேருந்து வசதி

**வினா எண் 8107—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 மார்ச் 26]

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், திருப்பத்தூர் கனவரவழி, காலை 6 மணிக்கும், திருப்பத்தூர்-பூங்குளம் வழியாக ஆலங்காயம் செல்ல 8 மணிக்கும், பெருமாபட்டு-திருப்பத்தூர் செல்ல காலை 8-30 மணிக்கும் அரசு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கைகள் குறித்து தடஆய்வு மேற்கொண்டபோது, கனவரவழி என்னுமிடத்தில் திருப்பத்தூர் ஒன்றிய எல்லைக்குள் எங்குள்ளது என கண்டறியமுடியவில்லை. ஆகவே, இவ்வூர் எங்கு அமைந்துள்ளது என தெளிவாகத் தெரிவிக்கப்பட்டால், உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும். திருப்பத்தூரிலிருந்து புதூர் வழியாக பூங்குளம் வரை டி20 நகரப் பேருந்துமூலம் 8 நடைகள் இயக்கப்படுகின்றன. இதேபோல் வாணியம்பாடியிலிருந்து ஆலங்காயம் வழியாக பூங்குளம் வரை டி19எ நகரப் பேருந்து மூலம் 8 நடைகள் இயக்கப்படுகின்றன. திருப்பத்தூரில் இருந்து ஆலங்காயத்திற்கு மிட்டூர், புதூர் வழியாக நேர்வழியில் செல்லுமாறு 08-20 மணிக்கு 251 தடப் பேருந்து இயக்கப்படுகிறது. ஆகவே, 08-00 மணிக்கு திருப்பத்தூர்-ஆலங்காயம் வழி பூங்குளம் என பேருந்து இயக்கம் மேற்கொள்வது பயனளிக்காது. தற்போது பெருமாட்டியிலிருந்து திருப்பத்தூர் செல்ல 07-40 மணிக்கு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதை 08-30 மணி என மாற்றி இயக்கினால் ஏழருவியிலிருந்து திருப்பத்தூர் வரும் பள்ளி மாணவர்கள் பாதிப்படைவார்கள் என்பதால் அவ்வாறு மாற்றி இயக்குவது சாத்தியமில்லை.

**45—**

## அரசு போக்குவரத்துக் கிளை

**வினா எண் 8547—திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அரசு போக்குவரத்துக் கிளையினை விருதுநகர் கோட்டத்தில் இணைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் மதுரையை தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. மதுரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக திருநெல்வேலி வட்டார இயக்கப் பகுதியில் விளாத்திகுளம் கிளை அமைந்துள்ளது. தற்போதுள்ள நிர்வாகச் சூழ்நிலைகளின் அடிப்படையில் மதுரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் ஒரே கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் விளாத்திகுளம் கிளையை விருதுநகர் வட்டாரத்துடன் இணைக்கும் திட்டம் எதும் இல்லை.

**46—**

## பேருந்து வசதி

**வினா எண் 9677—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பத்திலிருந்து கே.கே. பட்டி வழியாக சின்னமனூர் வழித்தடத்தில் மாணவ மாணவியர்களின் வசதிக்காக மேலும் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக திண்டுக்கல் வட்டாரம் மூலம் கம்பம்-சின்னமனூர் (வழி) கே.கே. பட்டி வழித்தடத்தில் மாணவ மாணவியர்களின் வசதிக்காக கீழ்காணும் வகையில் பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன

1. கம்பம்-சின்னமனூர் வழி காமயகவுண்டன்பட்டி (கே.கே.பட்டி) இராயப்பன்பட்டி, ஆணமலையான்பட்டி, சின்ன ஓவுலாபுரம், ஏரசை வழித்தடத்தில்

| | | | |
|---|---|---|---|
| 07-35 மணி: | ஒரு தனி நடை | 16-15 மணி: | ஒரு தனி நடை |
| 08-00 மணி: | ஒரு தனி நடை | 16-35 மணி: | ஒரு தனி நடை |
| 08-30 மணி: | ஒரு தனி நடை | | |



2. சின்னமனூர்-கம்பம் (வழி) முத்துலாபுரம், சின்ன ஓவுலாபுரம், இராயப்பன்பட்டி, காமயகவுண்டன்பட்டி

| | | | |
|---|---|---|---|
| 07-30 மணி: | ஒரு தனி நடை | 17-50 மணி: | ஒரு தனி நடை |
| 08-20 மணி: | ஒரு தனி நடை | | |

இது தவிர கோரிக்கையின்படி மாணவ மாணவியர்களின் நலன் கருதி மேலும் காலை 07-00 மணிக்கு சின்னமனூர்-கம்பம் (வழி) எரசை, சின்னஓவுலாபுரம் இராயப்பன்பட்டி, காமயகவுண்டன்பட்டி வழித்தடத்தில் 2 தனிநடைகள் 16-10-2006 முதல் கூடுதலாக இயக்கப்பட்டு வருகின்றன.

**47—**

## நகரப் பேருந்து

**வினா எண் 9766—திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை-சீர்காழி நகரப் பேருந்து மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி-மயிலாடுதுறை (வழி) வைத்தீஸ்வரன்கோவில், கதிராமங்கலம், நத்தம் தடத்தின் நீளம் 21 கி.மீ. ஆகும். 23-11-2006 முதல் சீர்காழி கிளை தடம் எண் A19 நகர் பேருந்து மூலம் சீர்காழி-மயிலாடுதுறை (வழி) வைத்தீஸ்வரன்கோவில், கதிராமங்கலம், நத்தம் தடத்தில் தினசரி 18 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

[2008 மார்ச் 26

**48—**

## புதிய பேருந்து வசதி

**வினா எண் 10280—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரிலிருந்து மயிலாடுதுறைக்குச் செல்லும் பழுதடைந்த 21ஏ மற்றும் 2பி பேருந்துக்குப் பதிலாகப் புதிய பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை-பூம்புகார் (வழி) கஞ்சாநகரம், கருவிழந்தநாதபுரம், மேலையூர் தடத்தின் நீளம் 27 கி.மீ. ஆகும். தற்போது மயிலாடுதுறை-பூம்புகார் தடத்தில் 4 நகர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:—

| தடம் எண் | பேருந்து எண் |
|---|---|
| A21 | TN-49/N-1360 |
| A21A | TN-49/N-0748 |
| A21C | TN-49/N-0812 |
| A2B | TN-49/N-0924 |

மேற்படி தடப் பேருந்துகளில் A21-க்கு தற்பொழுது TN-49/N-1360 புதுப்பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. தற்போது தடம் எண் A21A-க்கு தற்பொழுது TN-49/N-0748 என்ற பேருந்தும், தடம் எண் A2B-க்கு TN-49/N-0924 என்ற பேருந்தும் நன்கு பராமரிக்கப்பட்டு நல்ல நிலையில் புதுப்பொலிவுடன் இயக்கப்பட்டு வருகின்றன.



2008 மார்ச் 26]

**49—**

## நகரப் பேருந்து

**வினா எண் 10283—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, திருவெண்காடு-மயிலாடுதுறை வரை நகரப் பேருந்து இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை-திருவெண்காடு (வழி) கஞ்சாநகரம், கருவிழந்தநாதபுரம், மேலையூர் தடத்தின் நீளம் 24 கி.மீ. ஆகும். தற்போது மயிலாடுதுறை கிளை, தடம் எண் A34 நகர் பேருந்து மூலம் மயிலாடுதுறையிலிருந்து திருவெண்காடு வழியாக பெருந்தோட்டம் வரை தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. 01-03-2007 முதல் சீர்காழி-பொறையார் (வழி) திருவெண்காடு, கருவிழந்தநாதபுரம் தடத்தில் மேலும் ஒரு புதிய புறநகர் பேருந்து தடம் எண் 445 தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**50—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 10292—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல்-மணக்குடி கடற்கரைப் பேருந்து எண் 5டி மீண்டும் இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மணக்குடியிருந்து கடற்கரை கிராமங்களை இணைத்து குளச்சல் வழியாக நீரோடி காலனிக்கு 3 நடைகளும், குளச்சலிலிருந்து நீரோடி காலனிக்கு 1 நடையும், குளச்சல்-மணக்குடிக்கிடையே ஒரு நடையும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. கடற்கரை கிராம பகுதியினர் பயன்பாட்டிற்கென 26-10-2007 முதல் நாகர்கோவிலிருந்து தெங்கம்புதூர், புத்தளம் வழியாக மணக்குடிக்கு தடம் எண் 36Nமூலம் 14 நடைகளும், 15-02-2007 முதல் நாகர்கோவிலிலிருந்து கோட்டார், ஈத்தாமொழி வழியாகப் பெரியகாட்டிற்கு 4 நடைகளும் கூடுதலாக பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது.

51—

## பேருந்து வசதி

**வினா எண் 10293—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவ மக்களின் நலன் கருதி, புதிய வழித்தடமாக நாகர்கோவில் சூரங்குடி-ஈத்தாமொழி-பெரியக்காடு-பொழிக்கரை கேசவன்புத்தன்துறை-புத்தன்துறை-பள்ளம்-மணக்குடி-புத்தளம்-தெங்கம்புதூர்-படிக்கை-நாகர்கோவில் வழித் தடங்களில் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மீனவ மக்களின் நலன் கருதி, 19-09-2006 முதல் புதிய நகர வழித்தடங்களாக நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையத்திருந்து பெரியகாட்டுக்கு (வழி) கோட்டார், பறக்கை, தெங்கம்புதூர், மணக்குடி, பள்ளம், சங்குத்துறை பீச், புத்தன்துறை, கேசவன் புத்தன்துறை, பொழிக்கரை தடத்தில் 8 நடைகளும், கோட்டாரிலிருந்து புத்தன்துறைக்கு (வழி) மறவன் குடியிருப்பு, பொட்டல் சந்திப்பு, சுண்டப்பற்றிவிளை, ஈத்தாமொழி, பொழிக்கரை, கேசவன் புத்தன்துறை தடத்தில் 10 நடைகளும் தடம் எண் 37/38எல் பேருந்துமூலமாக இயக்கப்பட்டது. மேலும், நாகர்கோவிலிலிருந்து புத்தன்துறைக்கு (வழி) ஈத்தாமொழி, பூதூர், பொழிக்கரை, கேவசன்புத்தன்துறை தடத்தில்



2008 மார்ச் 26]

12 நடைகளும், நாகர்கோவிலிலிருந்து பொழிக்கரைக்கு (வழி), என்.ஜி.ஒ. காலனி, மேலகிருஷ்ணன்புதூர், செம்பொன்கரை பாலம், புத்தன்துறை, கேசவன் புத்தன்துறை தடத்தில் 6 நடைகளும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

52—

## பேருந்து வசதி

**வினா எண் 10295—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில்-சூரங்குடி-பொட்டல்விலக்கு இலந்தையடித் தட்டு-காற்குடிதட்டு-நங்கூரன் பிலாவிளை, மேலகிருஷ்ணன்புதூர்-சங்குத்துறை பீச்-புத்தன்துறை வழித்தடங்களில் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 19-09-2006 முதல் நாகர்கோவிலிலிருந்து சூரங்குடி, பொட்டல்விலக்கு, இலந்தையடித்தட்டு, காற்றாடிதட்டு, நங்கூரன்பிலாவிளை, மேலகிருஷ்ணன் புதூர், சங்குத்துறை பீச், புத்தன்துறை வழியாக புதிய நகர தடம் எண் 38எம்/என் பேருந்து இயக்கப்பட்டது. இப்பேருந்து பயனுறுவகையில் அமையாததால் மறுபரிசீலனைக்குப்பின் நாகர்கோவிலிலிருந்து பொழிக்கரைக்கு பொட்டல் சந்திப்பு, நங்கூரன்பிலாவிளை, கேசவன்புதூர், புத்தன்துறை மற்றும் கேசவன் புத்தன்துறை வழியாக 8 நடைகளும், அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து கேசவன் புத்தன்துறைக்கு பொட்டல் சந்திப்பு, சுண்டப்பற்றிவிளை, பிலாவிளை, நெடுவிளை, புதூர், பொழிக்கரை வழியாக 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. சங்குத்துறை பீச்சுக்கு தடம் எண் பிஸிஜி-26ல் இரண்டு நடைகள் ஏற்கெனவே உள்ளன.

53—

## பேருந்து வசதி

**வினா எண் 10297—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மார்ச் 26

(அ) தடம் எண் 52 சர்க்குலர் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) .தற்பொழுது தடம் 52 அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து சைமன்நகர், நெசவாளர் காலனி, வடசேரி பேருந்து நிலையம் வழியாக 25-11-2006 முதல் சர்க்குலர் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**54—**

## பேருந்து வசதி

**வினா எண் 10594—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், உறவிக்காடு கிராமம், வாலியம்பட்டி மற்றும் கொங்குதிராயன்பட்டி, கண்ணங்குடி ஆகிய பகுதிகளில் பேருந்து வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையிலுள்ள கிராமங்களுக்கு கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:—

1. **உறவிக்காடு:** தடம் எண் கே6 நகர்ப்பேருந்து கீரனூரிலிருந்து உறவிக்காடு 4 நடைகளும்,

2. **வாலியம்பட்டி மற்றும் கொங்குதிரையன்பட்டி:** தடம் எண் கே8 நகர்ப்பேருந்து கீரனூரிலிருந்து கீழையூர் செல்லும் போது வாலியம்பட்டி மற்றும் கொங்குதிரையன்பட்டி வழியாக 4 நடைகளும்,



2008 மார்ச் 26]

3. **கண்ணங்குடி:** தடம் எண் கே4 நகர்ப்பேருந்து கீரனூரிலிருந்து வெண்ணமுத்துப்பட்டி செல்லும்போது கண்ணங்குடி வழியாக 4 நடைகளும், மேலும் புறநகர்ப்பேருந்து ஒன்று திருச்சியிலிருந்து இலுப்பூர் செல்லும்போது கண்ணங்குடி வழியாக 4 நடைகளும் இயக்கப்படுகின்றன.

**55—**

## பேருந்து வசதி

**வினா எண் 12548—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் கல்லூரணி கிராமத்திற்கு மதுரையிலிருந்து ஒரு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பாச்சேத்தியிலிருந்து சிவகங்கை செல்லும் சாலையில் திருப்பாச்சேத்தியிலிருந்து 4.5 கி.மீ. தொலைவில் பிரிந்து சுமார் 0.5 கி.மீ. தூரத்தில் கல்லூரணி கிராமம் உட்புறமாக உள்ளது. மேற்படி கல்லூரணிவிலக்கு வழியாக தற்போது மதுரையிலிருந்து வேம்பத்தூர் வரையிலும் புறநகர் பேருந்து இயக்கப்படுகிறது. மேலும், இந்தச் சாலையில் இயக்கப்படும் சிவகங்கை-திருப்பாச்சேத்தி நகரப் பேருந்து வசதிகளும் இக்கிராமத்திற்கு உள்ளன. திருப்பாச்சேத்தி வந்து மதுரை செல்வதற்கு ஏராளமான நகர் மற்றும் புறநகர்ப் பேருந்து வசதிகளும் உள்ளன. கல்லூரணி கிராம மக்கள் மதுரை வருவதற்குப் போதுமான போக்குவரத்து வசதிகள் உள்ளன.

**56—**

## கூடுதல் நகரப் பேருந்து

**வினா எண் 12550—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மார்ச் 26

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் கணக்கன்குடி கிராமத்திற்கு திருப்புவனத்திலிருந்து கூடுதலாக ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தைச் சேர்ந்த கணக்கன்குடி கிராமத்திற்கு போக்குவரத்து வசதி செய்யும் வகையில் மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து கணக்கன்குடி வரை 9 தனி நடைகளும், திருப்புவனத்திலிருந்து கணக்கன்குடிக்கு 1 தனி நடையும் நகரப் பேருந்து இயக்கப்படுகிறது. இவை தவிர மதுரை பெரியார் பேருந்து நிலையம்-கே. பெத்தானேந்தல் வழித்தடம் மூலம் இயக்கப்படும் 4 தனி நடைகளும் கணக்கன்குடி வழியாகவே இயக்கப்படுகிறது. எனவே, தற்போது கணக்கன்குடி கிராமத்திற்கு 14 தனி நடைகள் பேருந்து வசதிகள் உள்ளன. கணக்கன்குடி போன்ற ஓரளவு மக்கள் தொகை கொண்ட கிராமத்திற்கு தற்போது இயக்கப்படும் நகரப் பேருந்து வசதிகள் போதுமானதாகும்.

**57—**

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 12551—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம் திருவளர் நல்லூர் ரெட்டகுளம் கிராமத்திற்கு திருப்புவனத்திலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2008 மார்ச் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருவளர்நல்லூர் ரெட்டக்குளம் கிராமத்திற்கு தற்போது மதுரையில் இருந்தும் திருப்புவனத்திலிருந்தும் நகரப் பேருந்து வசதிகள் உள்ளன. ரெட்டக்குளம் வரையிலும் மற்றும் ரெட்டக்குளம் வழியாகவும் மேற்குறிப்பிட்ட நகரத் தடங்கள்மூலம் 12 தனி நடைகள் இக்கிராமத்திற்கு பேருந்து வசதிகள் உள்ளன. இவை தவிர காரியாபட்டியிலிருந்து இக்கிராமத்திற்கு 4 தனி நடைகள் பேருந்து வசதிகள் உள்ளன. தற்போது இயக்கப்படும் நடைகளின் பயன்பாடு சுமாராகவே உள்ளதால், கோரிக்கையில் தெரிவிக்கப்பட்ட புதிய வழித்தடம் இயக்குமளவிற்கு தற்போது தேவை எழவில்லை.

**58—**

## பேருந்து வசதி

**வினா எண் 12554—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் எதிர்மறித்தான் கிராமத்திற்கு அம்பத்தடி வழியாக திருப்புவனத்திலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எதிர்மறித்தான் கிராமம் தவத்தாரேந்தல் பிரிவிலிருந்து மிகக் குறைவான தூரத்தில் (0.3 கி.மீ.) உள்ளது. இக்கிராமத்தில் குறைவான (20) குடியிருப்புகளே உள்ளன. எதிர்மறித்தான் பிரிவு வழியாக தற்போது பெரியார் நிலையம்-தவத்தாரேந்தல் என 5 தனி நடைகளும் திருப்புவனம்-தவத்தாரேந்தல் என 1 தனி நடையும் பேருந்து இயக்கப்படுகிறது. எதிர்மறித்தான் கிராம மக்களின் தற்போதைய தேவைக்கு இவ்வசதிகள் போதுமானது.

59— [2008 மார்ச் 26

## நகரப் பேருந்து

**வினா எண் 12555—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் திருப்புவனத்திலிருந்து பீரமனூர் வழியாக கீழச்சொரிக்குளம் கிராமத்திற்கு ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் ஒன்றியத்தைச் சேர்ந்த மேலச்சொரிக்குளத்திற்கு செல்லும் பிரதானச் சாலையிலிருந்து 1.0 கிலோ மீட்டர் தொலைவில் கீழச்சொரிக்குளம் என்ற சிறிய கிராமம் உள்ளது. பிரதானச் சாலையிலிருந்து இக்கிராமம் வரை செல்லும் கிளை சாலை மிகக் குறுகலான சாலை என்பதால் பெரிய பேருந்துகள் இயக்க இயலாது. தற்போது இக்கிராமத்திலிருந்து 1.0 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பிரதானச் சாலை வழியாக இயக்கப்படும் நகரப் பேருந்து வசதிகளை இக்கிராம மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். சுமார் 400 மக்கள் தொகை கொண்ட இந்தக் கிராமத்திற்கு இந்த வசதிகள் போதுமானவை என்பதால் திருப்புவனம்-கீழச்சொரிக்குளம் என்ற புதிய வழித்தடம் இயக்கும் தேவை எழவில்லை.

60—

## நகரப் பேருந்து

**வினா எண் 12556—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம் தூதை ஆதி திராவிடர் காலனிக்கு திருப்புவனத்திலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2008 மார்ச் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 1.4 கி.மீ. தொலைவில் உள்ள தூதை கிராமத்திற்கு (ஆதி திராவிடர் காலனி வரை) பேருந்து வசதி செய்யும் பொருட்டு மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 3 தனி நடைகளும் திருப்புவனத்திலிருந்து 1 தனி நடையும் பேருந்து இயக்கப்படுகிறது. மேலும் இக்கிராம மக்கள் 1.4 கி.மீ. தூரத்தில் உள்ள தூதைபிரிவு வழியாக இயக்கப்படும் 64 தனி நடைகள் நகர்ப் பேருந்து வசதிகளையும் பயன்படுத்தி வருகிறார்கள். தூதை கிராம மக்களுக்கு தற்போதுள்ள தேவைக்கு ஏற்ப பேருந்து வசதியுள்ளது.

61—

## பேருந்து வசதி

**வினா எண் 12557—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்திலுள்ள மதுரையிலிருந்து திருப்புவனம் செல்லும் நகரப் பேருந்துகளை கழுகேர்கடை கிராமம் வரை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 1.0 கி.மீ. தொலைவில் உள்ள கழுகேர்கடை கிராமத்திற்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 9 தனி நடைகளும் திருப்புவனத்திலிருந்து 1 தனி நடையும் பேருந்து இயக்கப்படுகிறது. மேலும் 1.0 கி.மீ. தூரத்தில் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கழுகேர்கடை பிரிவு வழியாக 5 நிமிடத்திற்கு ஒரு நகரப் பேருந்து வசதி உள்ளது. கழுகேர்கடை கிராம மக்களுக்குத் தற்போதுள்ள தேவைக்கு ஏற்ப பேருந்து வசதியுள்ளது.

[2008 மார்ச் 26

62—

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 12558—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், ஈச்சனேரி கிராமத்திற்கு புதுக்குசவன்குண்டு வழியாக திருப்புவனத்திலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) திருப்புவனம்-ஈச்சனேரி வழி எஸ். நாங்கூர், காஞ்சிரங்குளம், புதுக்குசவன்குண்டு தடத்தில் ஈச்சனேரி கிராமம் தவிர அனைத்து கிராமங்களுக்கும் மதுரை மற்றும் திருப்புவனத்திலிருந்து போதுமான அளவிற்கு பேருந்து வசதிகள் உள்ளன. ஈச்சனேரி கிராமத்தில் சுமார் 20 வீடுகளே உள்ளன. குறைவான மக்கள் தொகை கொண்ட இப்பகுதி மக்கள் அருகில் உள்ள ஈச்சனேரி பிரிவு நிறுத்தம் வழியாக இயக்கப்படும் 44 தனி நடைகள் பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். மனுவில் குறிப்பிட்ட தடத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் போதுமான பேருந்து வசதி உள்ள நிலையில் திருப்புவனம்-ஈச்சனேரி என புதிய தடம் இயக்கும் தேவை எழவில்லை.

63—

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 12559—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், முக்குடி ஊராட்சி, செங்குளம் வழியாக பறையன்குளம் வரை திருப்புவனத்திலிருந்து கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*



2008 மார்ச் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தைச் சேர்ந்த செங்குளம் மற்றும் பறையன்குளம் கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து தரும் வகையில் மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செங்குளம், பறையன்குளம் வழியாக எஸ். நாங்கூர் வரை 10 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், காரியாபட்டியிலிருந்து முஷ்டக்குறிச்சி, செங்குளம், பறையன்குளம், எஸ். நாங்கூர் வழியாக திருப்புவனத்திற்கு மே 2007 முதல் 4 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் செங்குளம், பறையன்குளம் பகுதி மக்கள் நேரடியாக திருப்புவனம் செல்ல தற்போது போக்குவரத்து வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

64—

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 12561—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கட்டமன் கோட்டைக்கு மதுரை பெரியார் நிலையத்திலிருந்து பொட்டப்பாளையம் வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தைச் சேர்ந்த கட்டமன்கோட்டை கிராம மக்கள் தற்போது மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து பொட்டப்பாளையம், கட்டமன்கோட்டை வழியாக அம்பாலத்தாடி கிராமத்திற்கு இயக்கப்படும் 8 தனி நடைகள் பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஓரளவே மக்கள்தொகை கொண்ட கட்டமன்கோட்டை கிராமத்திற்கு தற்போது இயக்கப்படும் நகரப் பேருந்து வசதிகள் போதுமானவையாகும்.

65— [2008 மார்ச் 26

## கூடுதல் நகரப் பேருந்து

**வினா எண் 12562—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், எஸ். வாகைக்குளத்திற்கு திருப்புவனத்திலிருந்து கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியத்தைச் சேர்ந்த எஸ். வாகைக்குளத்திற்கு தற்போது திருப்புவனத்திலிருந்து 6 தனி நடைகள் அரசு பேருந்துமூலம் இயக்கப்படுகிறது. காரியாபட்டியிலிருந்து அ. முக்குளம், அழகாபுரி வழியாக எஸ். வாகைக்குளம் கிராமத்திற்கு 2 தனி நடைகள் அரசு பேருந்து இயக்கப்படுகிறது. இவை தவிர இக்கிராமம் மினி பேருந்துமூலம் 6 தனி நடைகள் போக்குவரத்து வசதி பெற்றுள்ளது. எஸ். வாகைக்குளம் போன்ற சிறிய கிராமத்திற்கு மேற்குறிப்பிட்ட வசதிகள் போதுமானது.

66—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 12753—திரு. பி. பலராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூவர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, பொன்னேரி நகரத்திலிருந்து பழவேற்காடு வரை போதிய பேருந்துகள் இயக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?



2008 மார்ச் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பொன்னேரி-பழவேற்காடு தடத்தின் நீளம் 20.0 கி.மீ. ஆகும். இத்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலம்மூலம் 13 நகரப் பேருந்துகளையும், ஒரு நகரப் பேருந்தின்மூலம் 16 நடைகளையும் இயக்குகிறது. இத்தடத்தில் தனியார் பேருந்துகளும், தினசரி 16 நடைகள் இயக்குகின்றன. பழவேற்காடு தமிழ்நாட்டு எல்லையின் வடக்கு பகுதியில் ஆந்திர மாநிலத்தை ஒட்டியுள்ள ஒரு கடற்கரை கிராமமாகும். எனவே, இத்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகள் தற்போதுள்ள பேருந்து தேவைக்குப் போதுமானதென கருதப்படுகிறது.

67—

## பேருந்து வசதி

**வினா எண் 17335—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், அச்சம்பாடு ஊராட்சி, புதுக்குடியிருப்பு கிராமத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், அச்சம்பாடு ஊராட்சி, புதுக்குடியிருப்பு கிராமம், வள்ளியூர்-திருச்செந்தூர் பிரதான சாலையில் ஆனைக்குளம் செல்லும் பிரிவு சாலையிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. இக்கிராமம் சுமார் 70 வீடுகள் மற்றும் 400 மக்கள் தொகையினை உள்ளடக்கியே உள்ளது. மக்கள்தொகை 1000-க்கும் மிகக் குறைந்த அளவில் உள்ள இச்சிறிய கிராமத்திற்கு உடனடியாகப் பேருந்து வசதி ஏற்படுத்த வாய்ப்புகள் ஏதுமில்லை. இருப்பினும், இக்கிராம மக்கள் தற்போது வள்ளியூர் வந்து செல்ல ஒரு சிற்றுந்துமூலம் போதிய பேருந்து வசதி உள்ளது.

[2008 மார்ச் 26

68—

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 17337—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், சிதம்பராபுரம் ஊராட்சி, ஆத்துக்குறிச்சி, இராதாபுரம் ஊராட்சி, பாப்பான்குளத்திற்கும் 200 ஆம் எண் பேருந்தை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், சிதம்பராபுரம் ஊராட்சி, ஆத்துக்குறிச்சிக்கு தடம் எண் 200-ன் வாயிலாக தினசரி நான்கு நடைகளில் பேருந்து முறையாக இயக்கப்பட்டு வருகிறது. அதேபோல், பாப்பான்குளத்திற்கும் நகரப் பேருந்துமூலம் ஏற்கெனவே நான்கு நடைகளில் பேருந்து வசதி உள்ளது. தடம் எண் 200 வழித்தடப் பேருந்து வள்ளியூர்-இராதாபுரம், ஆத்துக்குறிச்சி, களக்காடு, கன்னியாகுமரி, திசையன்விளை என பல்முனை வழித்தடத்தில் இயக்கப்படுவதாலும், பாப்பான்குளத்திலிருந்து வள்ளியூர், இராதாபுரம் பிரதான சாலை வரையிலான 1 கி.மீ. சாலை பேருந்து இயக்க உகந்த நிலையில் இல்லாதிருப்பதாலும் வினாவில் கோரியபடி தடம் எண் 200-ஐ பாப்பான்குளம் வழியாக இயக்க இயலாத நிலை உள்ளது. தவிரவும் பாப்பான்குளம் கிராம மக்கள், பாப்பான்குளத்திலிருந்து 1 கி.மீ. என்ற குறுகிய தூரத்திலுள்ள வள்ளியூர்-இராதாபுரம் பிரதான சாலை வந்து அதன் வழியே இயக்கப்படும் பேருந்துகளையும் (3 நகரப் பேருந்துகள்மூலம் 34 நடைகள், 6 புறநகர் பேருந்துகள்மூலம் 39 நடைகள்) பயன்படுத்திக் கொள்ளலாம்.

69—

## பேருந்து வசதி

**வினா எண் 17339—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆத்தங்கரை பள்ளிவாசல் முதல் கன்னியாகுமரி வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?



2008 மார்ச் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நாகர்கோவில்-கன்னியாகுமரி-திருச்செந்தூர் வழித்தடத்தில் ஆத்தங்கரை பள்ளிவாசல் விலக்கிலிருந்து 1.5. கி.மீ. தொலைவில் ஆத்தங்கரை பள்ளிவாசல் அமைந்துள்ளது. நாகர்கோவிலிலிருந்து ஆரல்வாய்மொழி, இராதாபுரம் வழியாக ஆத்தங்கரை பள்ளிவாசலுக்கு தடம் எண் 574 மூலம் தினசரி நான்கு நடைகளிலும், அஞ்சுகிராமம் வழியாக தடம் எண் 570மூலம் தினசரி 2 நடைகளிலும், பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரியிலிருந்து ஆத்தங்கரை பள்ளிவாசல் விலக்கு வழியாக தினசரி முறையே 25 மற்றும் 70 நடைகளில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நடைகளை பயன்படுத்தி ஆத்தங்கரை பள்ளிவாசல் பொதுமக்கள் கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் செல்ல போதுமான வசதிகள் உள்ளன.

70—

## கூடுதல் பேருந்து

**வினா எண் 20511—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி-கீரனூர் வழி புதுக்கோட்டை செல்லும் புறநகர் பேருந்தினை குளத்தூரில் நின்று செல்லவும், கீரனூர்-விலாப்பட்டி-பாக்குடி-மருதம்பட்டி (வழி) இலுப்பூர் வரை இயக்கப்படும் பேருந்தினைக் கூடுதலாக இயக்கிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி-கீரனூர் வழி புதுக்கோட்டை செல்லும் அனைத்துப் புறநகர் பேருந்துகளும், குளத்தூரில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கி சென்று வருகிறது. கீரனூரிலிருந்து விலாப்பட்டி, பாக்குடி, மருதம்பட்டி வழியாக இலுப்பூர் வரை தடம் எண் கே 9 என்ற பேருந்து பல்முனைத் திட்டத்தின்கீழ்

[2008 மார்ச் 26

(போதிய கால அவகாசமின்றியும் நாள் ஒன்றுக்கு 422.0 கிலோ மீட்டர்) இயக்கப்படுகின்றது.

**71—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 20520—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, புதுக்கோட்டையிலிருந்து கீரனூர் செல்லும் கே 8 நகரப் பேருந்துகளோடு கூடுதலாக இரண்டு பேருந்துகளை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணத்தின் இரண்டு நகரப் பேருந்துகள்மூலம் 24 நடைகளும், ஒரு புறநகர் பேருந்துமூலம் 8 நடைகளும் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியில் புதுக்கோட்டையிலிருந்து கீரனூர் வழியாக திருச்சிக்கு புறநகர் பேருந்துகள் இயங்குகின்றன. இத்தடத்தில் போதுமான அளவு பேருந்து வசதி உள்ளது.

**72—**

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 20525—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, கீரனூரிலிருந்து உடையாம்பட்டி வழியாக ராப்பூசல் வரை இயக்கப்படும் நகரப் பேருந்தை வெள்ளாஞ்சார், காலாடிபட்டிசத்திரம் வரை நீட்டித்து இயக்கவும், திருச்சிராப்பள்ளி-மலம்பட்டி வரை இயக்கப்படும் நகரப் பேருந்தை பாக்குடி வரை நீட்டிக்கவும், கீரனூர்-சிவகாமிபுரம் (வழி) செல்லும் நகரப் பேருந்தை மருங்கிப்பட்டி வரை இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 மார்ச் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழித்தடமான கீரனூரிலிருந்து உடையாம்பட்டி வழியாக ராப்பூசல் வரை இயக்கப்பட்டு வரும் நகரப் பேருந்து பல்முனைத் திட்டத்தின்கீழ் நான்கு வழித்தடங்களில் நாள் ஒன்றுக்கு 412.0 கிலோ மீட்டர் போதிய நேரமின்றி இயக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் திருச்சியிலிருந்து பாக்குடிவரை ஒரு நகரப் பேருந்துமூலம் 4 நடைகள் தினமும் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து வசதியே தற்சமயம் இவ்வழித்தடத்திற்கு போதுமானதாக கருதப்படுகிறது. கீரனூரிலிருந்து மருங்கிப்பட்டி வழியாக கிள்ளுக்கோட்டை மற்றும் தூவாக்குடி போன்ற ஊர்களுக்கு மூன்று நகரப் பேருந்துகள்மூலம் ஒரு நாளைக்கு 18 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்சமயம் இப்பேருந்து வசதியே இவ்வழித்தடத்திற்குப் போதுமானதாகக் கருதப்படுகிறது.

**73—**

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 20530—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, கீரனூரிலிருந்து நீர்பழனி, பேராம்பூர் வழியாக விராலிமலை வரும் நகரப் பேருந்தினைக் கூடுதலாக இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணத்தின் இரண்டு நகரப் பேருந்துகள்மூலம் 24 நடைகளும், ஒரு புறநகர் பேருந்துமூலம் 4 நடைகளும் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. இவ்வழித்தடத்தில் போதுமான அளவு பேருந்து வசதி உள்ளது.

[2008 மார்ச் 26

74—

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 20533—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை-வாழமங்களம், மோசகுடி வழியாக கீரனூர் வரை நகரப் பேருந்து இயக்கிடவும், கீரனூரிலிருந்து ஆதனகோட்டை வரை செல்லும் கே2 நகரப் பேருந்தை கூடுதலாக பகலில் மங்காதேவன்பட்டிக்கு இயக்கிடவும், திருவெறும்பூர் வரை செல்லும் நகரப் பேருந்தை மாலையில் கூடுதலாக இயக்கிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை-வாழமங்களம், மோசகுடி வழியாக கீரனூர் வழித்தடத்தின் நீளம் 36.4 கிலோ மீட்டர். இது நகரப் பேருந்து இயக்க அனுமதிக்கப்பட்ட தூரமான 35.0 கிலோ மீட்டரைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. கீரனூர்-ஆதனக்கோட்டை செல்லும் கே2 நகரப் பேருந்து பல்முனைத் திட்டத்தின்கீழ் பள்ளி மாணவர்கள் வசதிக்காக இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து தினமும் 402.6 கிலோ மீட்டர் தூரம் இயக்கப்பட்டு வருகிறது. கீரனூர்-ஆதனக்கோட்டை செல்லும் கே2 பேருந்துதான் திருவெறும்பூருக்கும் சென்று வருகிறது. இப்பேருந்து பல்முனைத் திட்டத்தின்கீழ் 6 வெவ்வேறு வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், பள்ளி மாணவர்கள் வசதிக்காக பள்ளி நேரங்களிலும் இப்பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது.

75—

## கூடுதல் பேருந்து

**வினா எண் 32497—திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையிலிருந்து அரவம்பட்டி, மின்னாத்தூர், ராமுடையான்பட்டி வழி கீரனூர் வரை கூடுதல் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 மார்ச் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ள வழித்தடத்தில் கந்தர்வக்கோட்டையிலிருந்து கீரனூர் வரை ஒரு நகரப் பேருந்துமூலம் 6 நடைகளும், கந்தர்வக்கோட்டையிலிருந்து குண்ணன்டார் கோவில் வரை வேறொரு பேருந்துமூலம் 7 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, இவ்வழித்தடத்திற்கு இப்பேருந்து வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது.

76—

## தனிப் பேருந்து

**வினா எண் 34309—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் நகரத்தில் மகளிருக்காகத் தனிப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நாகர்கோவில் நகரத்தில் மகளிர் மற்றும் கல்லூரி மாணவியர்களின் போக்குவரத்துத் தேவையினைக் கருத்திற்கொண்டு தினசரி நகரப் பேருந்துகள்மூலம் 13 நடைகளிலும், புறநகர் பேருந்துகள்மூலம் 7 நடைகளிலும் ஆக மொத்தம் 20 நடைகளில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

77—

## பல் மருத்துவப் பிரிவு

**வினா எண் 15742—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மற்றும் கோட்டூர் அரசு மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை அரசு மருத்துவமனையில் ஒரு பல் மருத்துவச் சிகிச்சைப் பிரிவு ஏற்கெனவே இயங்கி வருவதுடன் ஒரு பல் மருத்துவரும் பணிபுரிந்து வருகிறார். கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு சுமார் 20 கி.மீ. தொலைவில் பொள்ளாச்சியில் உள்ள அரசு மருத்துவமனையில் அனைத்து வசதிகளுடன் கூடிய பல் சிகிச்சைப் பிரிவு இயங்கி வருகிறது. மேலும், கோட்டூர் அரசு மருத்துவமனையில் பல் சிகிச்சைக்காக குறைந்த அளவு நோயாளிகளே வருவதால், மேற்படி மருத்துவமனைகளில் புதியதாக பல் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்த தற்சமயம் அவசியம் எழவில்லை.*

**78—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 16576—திரு. கோவை தங்கம் :** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

*(அ) மற்றும் (ஆ) ரூ. 10 இலட்சம் செலவில், வால்பாறை தொகுதி, கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*





**79—**

## கிளைச் சிறைச்சாலை

**வினா எண் 39756—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் 100 கைதிகளுக்கான கிளைச் சிறைச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் :**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை நகரின் அருகில் சிவகங்கை மற்றும் பரமகுடி ஆகிய இடங்களில் தலா ஒரு கிளைச் சிறை இயங்கி வருகிறது. அவைகளின் அங்கீகரிக்கப்பட்ட இடவசதியை விட சிறைவாசிகளின் சராசரி அடைப்பு எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும், மானாமதுரையைச் சார்ந்த குற்றவாளிகள் சிவகங்கை கிளைச் சிறையில் அடைக்கப்பட்டு வருகிறார்கள். இந்நிலையில், மானாமதுரையில் ஒரு புதிய கிளைச் சிறை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**80—**

## உணவு விடுதி

**வினா எண் 36506—திரு. கோவை தங்கம் :** *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறில் சுற்றுலாத் துறைமூலம் தங்கும் மற்றும் உணவு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2008 மார்ச் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, ஆழியாறில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் தங்கும் மற்றும் உணவு விடுதி அமைத்திட செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அரசாணை (நிலை) எண் 155, சுற்றுலா மற்றும் பண்பாட்டு (சு3)த் துறை, நாள்: 27-9-2007-ல் வால்பாறை போன்ற அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களில், சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளும் தொழில் முனைவோருக்கு சலுகையளிக்கும் வண்ணம் மானிய உதவித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, ஓட்டல்கள் கட்டுவோருக்கு அளிக்கப்படும் மானிய உதவி விவரம் வருமாறு:—

| வ.எண் | ஓட்டல் தரம் | மானிய உதவி |
|---|---|---|
| 1 | ஒரு நட்சத்திரம் | மொத்த முதலீட்டில் (நில மதிப்பு நீங்கலாக) 10% அல்லது உச்சபட்சமாக ரூ.25.00 இலட்சம் |
| 2 | இரண்டு நட்சத்திரம் | மொத்த முதலீட்டில் (நில மதிப்பு நீங்கலாக) 10% அல்லது உச்சபட்சமாக ரூ. 50.00 இலட்சம் |
| 3 | மூன்று நட்சத்திரம் | மொத்த முதலீட்டில் (நில மதிப்பு நீங்கலாக) 10% அல்லது உச்சபட்சமாக ரூ. 100.00 இலட்சம் |

இதன்மூலம் அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலமான வால்பாறை பகுதியில் தொழில்முனைவோர்கள் அரசு மானிய உதவியுடன் தங்கும் உணவு விடுதி கட்ட முன்வரலாம்.

**81—**

## ஆசிரியர் நியமனம்

**வினா எண் 5639—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 மார்ச் 26]

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கருமாத்தூர் ஊராட்சி, வடக்கம்பட்டி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிக்கு வரலாறு, புவியியல், அரசியல், அறிவியல், தாவரவியல், விலங்கியல் பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் ஊராட்சி, வடக்கம்பட்டி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிக்கு 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் பாடப் பிரிவுக்கு அனுமதிக்கப்பட்டு, பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் ஏதும் காலியாக இல்லை. தொகுதி I-ல் வேதியியல், இயற்பியல், கணக்கு மற்றும் உயிரியல், தொகுதி 3-ல் புவியியல், வரலாறு, பொருளாதாரம் மற்றும் கணிப்பொறியியல் பாடப் பிரிவுகள் நடத்தப்படுகின்றன.

**82—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 29352—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், பெரியபுத்தேரி ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், பெரியபுத்தேரி ஊராட்சியில் தொகுப்பு வீடு 2007-2008-ஆம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் 10 நபர்களுக்கும் சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் (ஊராட்சி ஒன்றிய ஒதுக்கீடு)

[2008 மார்ச் 26

9 நபர்களுக்கும் தொகுப்பு வீடு கட்ட நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு கட்டட வேலை நடைபெற்று வருகிறது.

**83—**

### அரசு தங்கும் விடுதி

**வினா எண் 25754—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியில் பெண் தொழிலாளர்கள் தங்குவதற்கென அரசு தங்கும் விடுதிகள் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :**

(அ) பேரூர் தொகுதியில் பெண் தொழிலாளர்கள் தங்குவதற்கென அரசு தங்கும் விடுதிகள் உருவாக்குவது தொடர்பான திட்டம் எதுவும் தற்போது தொழிலாளர் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**84—**

### நிதியுதவி

**வினா எண் 6187—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் கிராமத்தில் கட்டிக் கொண்டிருக்கும் துலுக்காணத்தம்மன் கோயிலுக்கு நிதி உதவி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் கிராமம், அருள்மிகு துலுக்காணத்தம்மன்



2008 மார்ச் 26]

திருக்கோயில் ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதியில் அமைந்துள்ள, இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். ஒவ்வொரு ஆண்டும் அரசு அறிவிப்பினைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மக்கள் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில் திருப்பணிக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ. 25,000/- வீதம் அரசு நிதியின்றி, நிதிவசதி உள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2007-2008 நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்குவதற்கு அரசு அறிவிப்பு எதுவும் வெளியிடவில்லை. ஆகவே, இந்த நிதி ஆண்டிற்கு நிதியுதவி அளித்திட இயலாது. இருப்பினும், முந்தைய ஆண்டுகளில் தொகை விடுவிக்கப்பட்டு, திருப்பணி நடைபெறாத திருக்கோயில் ஏதுமிருப்பின், அத்திருக்கோயிலுக்கான நிதியுதவியை இந்தத் திருக்கோயிலுக்கு மாற்றி வழங்க பரிசீலிக்கப்படும்.

**85—**

### கழிப்பறைகள் வசதி

**வினா எண் 39640—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோயிலுக்கு கூடுதலாக கழிப்பறைகள் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு ஆண்கள் மற்றும் பெண்களுக்கென இரண்டு கழிப்பறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும் கூடுதலாக ஆண்கள் மற்றும் பெண்களுக்காக கழிப்பறைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2008 மார்ச் 26

**86—**

### சாலைகள் மறுசீரமைப்பு

**வினா எண் 13796—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில், ஒத்திவாக்கம்-மணப்பாக்கம், பொன்விளைந்த களத்தூர்-திருக்கழுக்குன்றம், சோகண்டி-வீரகுப்பம் ஆகிய சாலைகளை மறுசீரமைப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு. பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

செங்கற்பட்டு நெடுஞ்சாலைக் கோட்டத்தில் பராமரிக்கப்பட்டு வரும் மாவட்ட இதர சாலையான ஒத்திவாக்கம்-மணப்பாக்கம் சாலையினை (கி.மீ.0/0-2/8) ரூ. 35.00 இலட்சம் செலவில் மேம்படுத்தவும் மற்றும் பொன்விளைந்த களத்தூர்-வள்ளிபுரம் சாலையினை (கி.மீ.0/0-6/2) ரூ. 52.00 இலட்சம் செலவில் மேம்படுத்தி மற்றும் சிறுபாலங்கள் கட்டவும் 2007-2008 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியினை துரிதமாகச் செயல்படுத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொன்விளைந்த களத்தூர்-வள்ளிபுரம் சாலை கி.மீ.6/2-9/2 வரை பாரத் நிர்மான் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் மதிப்பீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

கி.மீ.24/4-ல் சட்ராஸ்-செங்கற்பட்டு காஞ்சிபுரம் அரக்கோணம் திருத்தணி சாலையிலிருந்து வீரக்குப்பம் (வழி) சோகண்டி கி.மீ. 0/0-8/280, சாலையானது செங்கற்பட்டு (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையின் கி.மீ 2/0-6/0 வரை மிகவும் பழுதடைந்துள்ள பகுதியினை தனிப்பழுதுபார்க்க 2007-2008 ஆம் ஆண்டு ரூ. 51.20 இலட்சம் செலவில் திட்டம் சாரா பணிகள் தலைப்பின்கீழ் தேர்வு செய்யப்பட்டு, 29-6-2007 அன்று ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டபின் பணியினைச் செயல்படுத்த தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் மற்றும் 6/0-8/280 முடிய உள்ள சாலை தார்நொடிகள் சீர்பார்த்து போக்குவரத்துக்கு உகந்ததாக உள்ளது.



2008 மார்ச் 26]

**87—**

### தார்ச்சாலைப் பணி

**வினா எண் 17245—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கூகுட்டபட்டி ஊராட்சி, ஆக்கபண்ணையன் நான்கு ரோட்டில் இருந்து மாட்டுகாரனூர் புதூர் வழியாக சந்தைபேட்டைக்குச் செல்லும் தார்ச்சாலைப் பணி உடன் தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு. பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் :**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கூகுட்டபட்டி ஊராட்சி, ஆக்கபண்ணையன் நான்கு ரோட்டில் இருந்து மாட்டுகாரனூர் புதூர் வழியாக சந்தைபேட்டைக்குச் செல்லும் தார்ச்சாலைப் பணியின் சாலையின் பெயர் பொட்டியபுரம்-தும்பிப்பாடி-மாட்டுக்காரன்புதூர் சாலை கி.மீ. 0/0-8/290 எனும் அரசு மாவட்ட இதர சாலையாகும். இச்சாலையில், கி.மீ. 6/2-8/290 வரையுள்ள பகுதி மாவட்ட இதர சாலைகள் மேம்பாடு செய்யும் திட்டத்தில் ரூ. 7.75 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் தார் பரத்தும் பணி ஜூன், 2007-ல் முடிக்கப்பட்டு சாலை போக்குவரத்திற்கேற்றவாறு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், கி.மீ. 0/0-6/2 முடிய உள்ள சாலை போக்குவரத்துக்கு ஏற்ற நிலையில் உள்ளது.

**88—**

### சாலை சீர் செய்தல்

**வினா எண் 28831—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, ஆணர்-திருக்கழுக்குன்றம் சாலையை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, ஆணர்-திருக்கழுக்குன்றம் சாலையானது கி.மீ. 0/0-9/2 ஆகும். பி.வி. களத்தூர்-வள்ளிபுரம் சாலை செங்கல்பட்டு (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ள இது

[2008 மார்ச் 26

மாவட்ட இதர சாலையாகும். இதன் மொத்த நீளம் 9.20 கி.மீ ஆகும். இச்சாலையில் ஆணர் கிராமம் கி.மீ.5/2-ல் உள்ளது. இச்சாலையில் கி.மீ.0/0-6/2 வரை உறுதிப்படுத்தும் பணி, சிறுபாலங்கள் உட்பட ரூ. 52.00 இலட்சம் மதிப்பில் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2007-2008-ன்கீழ் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மீதமுள்ள கி.மீ. 6/2-9/2 வரையிலான 3.00 கி.மீ. நீள சாலையை 'பாரத் நிர்மான்' திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**89—**

## சாலை மேம்பாடு

**வினா எண் 28832—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், நெம்மேலி ஊராட்சி, செங்கல்பட்டு-கல்பாக்கம் சாலையின் இருமருங்கிலும் மண் அணைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு-கல்பாக்கம் சாலையின் சரியான பெயர் சத்ராஸ்-செங்கல்பட்டு-காஞ்சிபுரம் - அரக்கோணம் - திருத்தணி சாலையாகும். இச்சாலையானது செங்கல்பட்டு நெடுஞ்சாலைக் கோட்டத்தின் பராமரிப்பிலுள்ள மாநில நெடுஞ்சாலையாகும். இதன் மொத்த நீளம் 77.350 கி.மீ. (0/0-27/2 மற்றும் 28/8-78/950) ஆகும். இச்சாலையில் கி.மீ. 22/0-23/0-ல் நெம்மேலி கிராமம் உள்ளது. இச்சாலையில் கி.மீ. 20/0-25/0 வரை உள்ள சாலையின் இருமருங்கிலும் மண் கொட்டி புருவங்களை மேம்படுத்தும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**90—**

## சாலையைச் செப்பனிடல்

**வினா எண் 31986—திரு. வை. காவேரி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடங்கண சாலை பேரூரில் நல்லம்பட்டி முதல் எளம்பிள்ளை வரை சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?



2008 மார்ச் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடங்கண சாலை பேரூரில் நல்லம்பட்டி முதல் எளம்பிள்ளை வரை செப்பனிடக் கோரப்பட்டுள்ள சாலை அரசு மாவட்ட முக்கிய சாலையான செவ்வாய்ப்பேட்டை எளம்பிள்ளை சாலை கி.மீ. 0/0-17/2-ல் கி.மீ. 15/2-17/2 வரையிலான சாலைப் பகுதியாகும். கி.மீ. 0/0-2/0 மற்றும் 15/6-17/2 வரை ரூ. 51.70 இலட்சம் செலவில் ஜூன், 2006-ல் வலுப்படுத்தப்பட்டு சாலை நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 15/0-15/6 வரை ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஜனவரி, 2007-ல் சிறப்புப் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு சாலை நல்ல நிலையில் உள்ளது.

**91—**

## துணை அலுவலகம்

**வினா எண் 38458—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து வசதிகளைக் கொண்ட மாவட்ட நெடுஞ்சாலைத் துறை துணை அலுவலகத்தை செய்யாற்றில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மாவட்ட தலைநகரான திருவண்ணாமலையில் தற்போது மாவட்ட அளவிலான நெடுஞ்சாலைக் கோட்ட அலுவலகம் உள்ளது. மேலும், செய்யாற்றில் அனைத்து வசதிகளைக் கொண்ட உட்கோட்டம் இயங்கி வருகிறது. எனவே, செய்யாறு நகரில் நெடுஞ்சாலைத் துறையின் மாவட்ட துணை அலுவலகத்தை அமைக்க இயலாது.

**92—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 38647—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி-மொரப்பூர் சாலையில், செம்மன அள்ளி முதல் கூட்டுரோடு வரையிலான மலைப்பகுதி சாலையில் மைய தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி-அரூர் (வழி) மொரப்பூர் சாலை 37.60 கி.மீ. நீளமுள்ள ஒரு மாவட்ட முக்கிய சாலையாகும். இது தருமபுரி (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ளது. இச்சாலையில், செம்மன அள்ளி முதல் கூட்டுரோடு வரையிலான பகுதி கி.மீ. 13/0-13/4 வரை வனத் துறைக்குச் சொந்தமான பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக உள்ளது. இந்த இடத்தில், சாலை இரு வழிச் சாலையாகவும், மலைப் பாதை (ஏற்ற இறக்கங்களுடன்) குறுகிய வளைவுகள் (S curve) கொண்டதாகவும் உள்ளது. இச்சாலையில் மையத் தடுப்புச் சுவர் கட்ட போதிய இடம் இல்லாததால், இப்பணியினை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

**93—**

## கால்நடை கிளை நிலையங்கள்

**வினா எண் 40089—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், கல்லூரணி, அல்லிநகரம், கொந்தகை, மேலநெட்டூர், மேலப்பசலை, பெரிய கோட்டையில் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் கல்லூரணி, அல்லிநகரம், கொந்தகை, மேலநெட்டூர், மேலப்பசலை, பெரியகோட்டை முதலான இடங்களில் ஏற்கெனவே கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்வி எழாது.



**94—**

## ஆலோசனைக் குழு

**வினா எண் 15575—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூன்று மாதத்திற்கொருமுறை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் வன்கொடுமைத் தடுப்பு ஆலோசனைக் குழுவைக் கட்டாயமாக கூட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1995 ஆம் ஆண்டு வன்கொடுமைத் தடுப்புச் சட்ட விதியின்கீழ் மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்க அரசு ஆணை (நிலை) எண் 33, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நாள் 22-9-1996-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி, அனைத்து மாவட்டங்களிலும் மூன்று மாதங்களுக்கொருமுறை மாவட்ட விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கூட்டப்பட்டு வருகிறது.

**95—**

## பணியிடங்களை நிரப்புதல்

**வினா எண் 16489—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆதி திராவிடர் நலத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு உத்தரவிற்கேற்ப ஆதி திராவிடர் நலத் துறையிலும் காலிப்

[2008 மார்ச் 26

பணியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இடைநிலை ஆசிரியர்கள், சமையலர் மற்றும் காவலர் பணியிடங்கள் நிரப்பிட மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு இப்பணியிடங்கள் தற்போது மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களால் நிரப்பப்பட்டு வருகின்றன. பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் காலிப் பணியிடங்களை ஆசிரியர் தேர்வாணையம்மூலம் நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தேர்ந்த பெயர்ப் பட்டியல் தயாரித்து பதவி உயர்வுமூலம் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை நிரப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியரல்லாத காலிப் பணியிடங்களை இளநிலை உதவியாளர் / தட்டச்சர்/ வரைவாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களை கருணை அடிப்படையில் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமும் நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் பணியிடங்களும் வருவாய்த் துறை மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைமூலமும் நிரப்பப்பட்டு வருகின்றன.

**96—**

## கறவை மாடுகள் வழங்கும் திட்டம்

**வினா எண் 18652—திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் பால் உற்பத்தியை பெருக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்மூலம் கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் பால் உற்பத்தியை பெருக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்மூலம் மீண்டும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.



2008 மார்ச் 26]

**97—**

## பால் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 33495—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியில் பால் கூட்டுறவுச் சங்கத்தினை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் கடந்த காலங்களில் செயல்படாமல் இருந்தது. தற்போது இச்சங்கம் புத்துயிரூட்டப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. பால் வழித்தடம் இல்லாததால் கொள்முதல் செய்யப்படும் பால் உள்ளூரிலேயே விற்பனை செய்யப்படுகிறது.

**98—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 11504—திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்ட கதர் கிராம அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்ட உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில்கள் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வாரியத்தில் நிதிநிலை ஆதாரம் இல்லாததால் கட்ட இயலாத நிலை உள்ளது. இருப்பினும் வாரியத்தின்கீழ் செயல்படும் கோட்டார் பனை வெல்ல கூட்டுறவுச் சங்கக் (கலைக்கப்பட்டது) கட்டடத்தில் கன்னியாகுமரி மாவட்ட கதர் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர் அலுவலகம் செயல்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

99—

## தொழிற்பயிற்சி மையம்

**வினா எண் 33594—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் கதர் கிராமத் தொழில் துறையின்மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சியளிக்கும் மையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரையில் கதர் கிராமத் தொழில் துறையின்மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

100—

## தொழிற்பயிற்சி மையம்

**வினா எண் 36098—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றத்தில் கதர் கிராமத் தொழிற் பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் திருக்கழுக்குன்றத்தில் கதர் கிராமத் தொழில்கள் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 26-3-2008 இன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ இன்று 26-3-2008, புதன்கிழமை தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

26-3-2008, இன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

## 3. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 8-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. கு. பிச்சாண்டி
2. திரு. குத்தாலம் க. அன்பழகன்

3. திருமதி டி. யசோதா

4. திரு. கி. ஆறுமுகம்

5. திரு. என். நன்மாறன்

6. திருமதி பி. பத்மாவதி

## 4. தகவல் கோரல்

### தென் மாவட்டங்களில் பலத்த மழையால் ஏற்பட்ட சேதங்கள்—அரசு நிவாரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அண்மையில் கடல் பகுதியில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தமிழ்நாடு முழுவதும், குறிப்பாக, தென் மாவட்டங்களில் பெய்த பலத்த மழையின் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். இதைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாகக் கடும் மழையால் தென் மாவட்டங்கள் உட்பட அனைத்து பகுதிகளிலும் வெள்ள அபாயம் ஏற்பட்டு, நம்முடைய அரசு உடனடியாக தீவிர நடவடிக்கை எடுத்து ஆங்காங்கே நிவாரணங்களை வழங்கி வருகின்றது. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட கடந்த சில தினங்களாக இராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர் போன்ற பகுதிகளிலே சுற்றுப்பயணம் செய்து, உடனுக்குடன் அந்தப் பகுதிகளிலே பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, அதற்குரிய நடவடிக்கையை எடுத்துள்ளார்கள். இருந்தபோதிலும், குறிப்பாக கடலூர் பகுதிகளிலே நிறைய விவசாயிகளின் நெல், கரும்பு உட்பட அனைத்து விவசாயப் பொருட்களும் பாழடைந்திருக்கின்றன. ஆக, ஓர் ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் நட்ட ஈடாக அந்த விவசாயிகளுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.





**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக தமிழகத்தில், குறிப்பாக தென் மாவட்டங்களில் பெய்த கடுமையான மழை பெரும் சேதத்தை விளைவித்திருக்கின்றது. குறிப்பாக, நெல்லை மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம், விருதுநகர் மாவட்டம், இராமநாதபுரம், தஞ்சை மாவட்டங்களினுடைய கடலோரப் பகுதி, அதேபோல கடலூர், விழுப்புரம் போன்ற பகுதிகள் மிகப் பெரிய சேதத்திற்குள்ளாகியிருக்கின்றன. மழையால் பெரும்பாலும் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், விவசாயக் கூலிகள், கிராமங்களிலே வாழக்கூடிய ஏழையெளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தந்த தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களும், நம்முடைய அமைச்சர் பெருமக்களும் நேரடியாகச் சென்று அந்தப் பகுதிகளையெல்லாம் பார்வையிட்டு, இன்றைக்கு நிவாரணப் பணிகள் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், அந்தப் பணிகள் இன்னும் வேகமாக முடுக்கி விடப்பட வேண்டும் என்ற கருத்தை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

*முற்பகல் 9–35*

பல கிராமப் பகுதிகளிலிருந்து எங்களுக்கு வந்த தகவல்படி கிராமங்களிலே இருக்கக்கூடிய நிர்வாக அலுவலர்கள் அல்லது வருவாய்த் துறை அலுவலர்கள் போதுமான அக்கறை செலுத்தாமல், இன்னும் பாதிக்கப்பட்ட பல கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளை அல்லது அந்த மக்களைப் பார்த்து நிவாரணப் பணிகளை முறையாக மேற்கொள்ளாத குறைகள் பற்றி பல இடங்களிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஆங்காங்கே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அல்லது தலைமைச் செயலகத்திலிருந்து மூத்த அதிகாரிகளை அந்தந்தப் பகுதிகளுக்கு அனுப்பி மேற்பார்வை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு, அது நெற்பயிராக இருந்தாலும் அல்லது வாழையாக இருந்தாலும் அல்லது கரும்பாக இருந்தாலும், அரசாங்கத்திலே கொடுக்கக்கூடிய நஷ்டஈடு ஒரு ஏக்கருக்கு 4,000 ரூபாய் என்ற அளவிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அது எந்தவகையிலும் போதாது. ஏனென்றால், விவசாய தொழிலாளர்களுக்குக் கூலி கொடுப்பதிலேயிருந்து, இடுபொருட்கள் வாங்குவதிலேயிருந்து, எந்த அளவிற்கு அதிகப்படியான செலவினம்

ஆகிறது என்ற கணக்கு அரசுக்கே தெரியும். எனவே குறைந்தபட்சம் ஒரு ஏக்கருக்கு 10,000 ரூபாய் என்கின்ற அளவில் நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்களுக்கு நஷ்டஈடாகவும், புஞ்செய் பயிர்களுக்கு 5,000 ரூபாய் என்ற வகையில் அதற்கான நஷ்டஈட்டையும் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வீடுகள் இடிந்து போனவர்கள், வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டவர்கள் உதாரணமாக, திருநெல்வேலி மாவட்டத்திலே, அங்கே வந்த வெள்ளத்தில் ஒரு பகுதியிலே இரண்டு பேர் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கே இருக்கின்ற வருவாய்த் துறை அலுவலர் பேசும்போது அவர்கள் குளிக்கச் சென்றவர்கள், அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க முடியாது, ஏதாவது விவசாய வேலைக்குச் சென்றால்தான் நஷ்டஈடு கொடுக்கமுடியும் என்ற முடிவை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்களிடத்திலேயே கூறியிருக்கிறார்கள். இவையெல்லாம் அதிகாரிகள் செய்யக்கூடிய தவறுகள். அவர்களையெல்லாம் கண்டித்து, முறையாக நிவாரணப் பணிகள் நடைபெறுவதற்கு அரசு எல்லா வகைகளிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேமாதிரி, மத்திய சர்க்காரிடத்திலே இருந்து இப்படிப்பட்ட இயற்கைச் சீற்றங்களுக்கு ஒதுக்க வேண்டிய நிதியினைக் கூடுதலாகக் கேட்டுப் பெற்று, மக்களுக்குக் கூடுதலான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த். பேசுகிறீர்களா?

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெற்குப் பகுதிகளில் வெள்ளத்தால் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பது இராமநாதபுரம் மாவட்டம் என்பது செய்தித்தாள்களிலே படித்தது. மக்களுக்கு அதிக வெள்ள நிவாரணம் தேவைப்படுவதால், எல்லா கட்சிகளும் கேட்டுக்கொண்டபடி தமிழக அரசு 10,000 ரூபாய் வழங்கவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அதாவது, 4,000 ரூபாய் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், நான் விசாரித்த அளவில் கன்னியாகுமரியாக இருக்கட்டும், இராமநாதபுரமாக இருக்கட்டும், தூத்துக்குடியாக இருக்கட்டும்





எல்லோரும் ஏக்கருக்கு 10,000 ரூபாய் கேட்கிறார்கள். நீங்கள் எப்படி செய்யவேண்டுமோ, எந்தவகையிலே மத்திய குழுவுக்கு நீங்கள் அனுப்பி கேட்கிறீர்களோ கேட்டு, அதை அரசு கூடிய விரைவிலே சீக்கிரமாகச் செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

*முற்பகல் 9–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வார காலமாக கடுமையான மழை பெய்து வெள்ளம் ஏற்பட்டிருக்கின்றது. தென் மாவட்டங்கள் மாத்திரம் அல்ல, திருவாரூர், நாகை போன்ற மாவட்டங்களும் மிக அதிக அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, நான் சார்ந்திருக்கக்கூடிய புதுக்கோட்டை மாவட்டத்திலும், கடுமையான மழை பெய்து, விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, தமிழக அரசு, உடனடியாக கவனம் செலுத்தி, சட்டமன்றத்தை இரண்டு நாட்கள் ஒத்திவைத்து, அமைச்சர் பெருமக்கள் எல்லாம், எல்லா மாவட்டங்களுக்கும் சென்று பார்வையிட்டு, அதன் காரணமாக நேற்றையதினம் அமைச்சரவையும் கூடி, விரைவாக முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, ஹெக்டேருக்கு 4,000 என்பது மிகக் குறைவான தொகை என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேநேரத்தில், நெல்லுக்கு என்று எடுத்துக்கொண்டால்,, ஏக்கருக்கு 10,000 ரூபாய் அளிக்கவேண்டும். அதேபோல, என் மாவட்டத்தில் புஞ்சைப் பயிர்கள் மிக அதிக அளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சோளம், எள், உளுந்து, தர்பூசணி, வாழை போன்ற பயிர்கள் எல்லாம் நாசப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கும் தேவைக்கேற்றாற்போல உதவிகள் செய்திட வேண்டும். அதேநேரத்தில், வருவாய்த் துறை அலுவலர்களுடைய பணி என்பது மெத்தனமாக இருக்கின்றது என்று நான் கருதுகிறேன். எங்கள் மாவட்டத்தில் கேட்கின்றபோது, இந்த மாவட்டம் பாதிக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், பல பயிர்கள், பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நீரில் மூழ்கியிருக்கின்றன. ஆகவே, இவற்றிற்கெல்லாம் விரைவான நடவடிக்கை எடுத்து, தீர்வை உடனடியாகச் செய்ய வேண்டும், மத்திய அரசிடமிருந்து மிகப் பெரும் நிதியை நாம் பெற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

[2008 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாக கடல் சீற்றத்தினால் ஏற்பட்ட கடுமையான மழையின் காரணமாக தமிழகத்தினுடைய தென் மாவட்டங்களிலும், அதேபோல டெல்டா பகுதி மாவட்டங்களிலும், மேற்கு மாவட்டங்கள் உட்பட தமிழகத்தின் பெரும் பகுதியான மாவட்டங்களில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. பாதிப்பை உணர்ந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இரு தினங்கள் சட்டப் பேரவைக் கூட்டத்தை ஒத்திவைத்து, அமைச்சர் பெருமக்கள் எல்லாம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரிலே சென்று, ஆய்வுகள் நடத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கவும், ஆறுதல் கூறவும் உரிய நடவடிக்கை மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்க நல்ல நிகழ்ச்சி.

அதேநேரத்தில், இந்த மழை, வெள்ளச் சேதத்தினால் ஏற்பட்டிருக்கிற பாதிப்பு மிகக் கடுமையானதாக இருக்கிறது என்றுதான் பல்வேறு தகவல்கள் தொடர்ந்து வெளிவருகின்றன. ஆகவே, பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாய விளை நிலங்கள்-- ஏற்கெனவே முதல்கட்டத் தகவல் என்று கருதுகிறேன்--சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் என்ற செய்திகள் வெளிவந்திருந்தாலும், அந்த பாதிப்பினுடைய அளவு, இன்னும் பல இலட்சம் ஏக்கர் விவசாய விளை நிலங்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கக்கூடிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அதேபோல, டெல்டா மாவட்டங்களிலே விவசாயிகள் உற்பத்தி செய்கிற உளுத்தம் பருப்பு மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 25,000 ரூபாய் வரையிலே வருவாய் ஈட்டக்கூடிய அந்த உளுத்தம் பருப்பு இப்போது முழுவதுமாக டெல்டா மாவட்டங்களிலே அழிந்திருக்கின்றது.

அதேபோல, கோவை மாவட்டத்திலே பல்லடம், பொங்கலூர் போன்ற பகுதிகளில், தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக, வெங்காயம் கடுமையாக பாதிப்புக்குள்ளாகி, சுமார் 1 ஏக்கருக்கு 15,000 ரூபாய் வரையிலே செலவு செய்து உற்பத்தி செய்த வெங்காயம் தொடர் மழையின் காரணமாக அழிந்திருக்கின்றது. அதேபோல, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களிலே முந்திரி, வாழை, கரும்பு போன்ற பல்வேறு விவசாயப் பொருள்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியிருக்கக்கூடிய சூழலில், அரசு அறிவித்திருக்கக்கூடிய



2008 மார்ச் 26] [திரு. சி. கோவிந்தசாமி]

இந்த நிவாரண உதவித் தொகையைக் கட்டாயமாக அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும்.

ஏற்கெனவே ஒரு ஹெக்டேருக்கு 4,000 ரூபாய் அதாவது ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 1,600 ரூபாய் என்ற அளவிலேதான் நிவாரணத் தொகை மத்திய அரசினுடைய நிர்ணயிப்பாக இருக்கின்றது. அது எந்தவகையிலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவியாக இருக்காது என்ற வகையில், இந்த நிர்ணயிப்பை மறுபரிசீலனை செய்து, இந்த இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கக்கூடிய விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற நிவாரணத் தொகையை மத்திய அரசு, அந்த விதிமுறைகளைத் திருத்தி, அதற்கான நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க நம்முடைய மாநில அரசின் சார்பிலே மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

முற்பகல் 9-45

அதேபோல, விவசாயத் தொழிலாளிகள்; விவசாயத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு, சற்றேறக்குறைய இன்னும் ஒரு மாத காலத்திற்கு வேலையில்லாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கான 30 கிலோ அரிசியை இலவசமாக வழங்கி, விவசாயக் கூலித் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட இதேபோன்றதொரு கடுமையான வெள்ளச் சேதத்தை மதிப்பீடு செய்வதற்காக மத்தியக் குழு தமிழ்நாட்டிற்கு வந்து ஆய்வுகளையெல்லாம் செய்தது. மாநில அரசும் கூடுதலான நிதி தேவை என்பதை வலியுறுத்தியிருக்கிறது. ஆனால், நாங்கள் அறிந்தவரையில் இதுவரையில் எந்த நிதியும் வரவில்லையென்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆகவே, ஏற்கெனவே ஏற்பட்ட சேதத்திற்கு மத்தியக் குழு மதிப்பீடு செய்து சென்றதற்கான நிதியே இதுவரையில் கிடைக்காத நிலையில், இப்போது இரண்டாம் கட்டமாக, இந்தக் குறுகிய இடைவெளியிலே பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டமன்றத்திலேயே ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, கடந்த டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கும், இப்போது வெள்ளச் சேதத்தினால் ஏற்பட்டிருக்கிற பாதிப்புக்கும் சேர்த்து, உடனடியாக நிதியுதவியை வழங்க, மத்திய

அரசை வலியுறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசும் தன்னுடைய பங்கிற்காக, மத்திய அரசினுடைய அந்த உதவி வருவதை எதிர்பாராமல், கூடுதலான உதவிகளைச் செய்து, பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்க முன்வர வேண்டுமென்று மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

***திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற கடுமையான வெள்ளச் சேதம் குறித்து விவாதிப்பதற்காகவும், அதற்கான நிவாரண உதவிகளை எந்தவகையில் வழங்க வேண்டுமென்று ஆய்ந்தறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காகவும், இன்றைய சட்டமன்றக் கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு, உரிய நடவடிக்கையை மிகத் துரிதமாக எடுத்து வருகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்து, இதன்மீது ஒருசில கருத்துகளை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த சில நாட்களாக, கனமழை பெய்த காரணத்தால், மிகப் பெரிய வெள்ளச் சேதம் ஏற்பட்டு, தென் மாவட்டங்கள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நெல் முதல் எல்லாப் பயிர்களும் பாதித்து, கண்மாய்கள், ஏரி, குளங்கள் எல்லாம் உடைகின்ற அளவிற்கு மிகப் பெரிய சேதத்தை உண்டாக்கியதன் காரணத்தால், இதை உடனடியாகக் கண்டறிய வேண்டும்; மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென்று, இரண்டு நாட்கள் சட்டமன்றக் கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டு, அமைச்சர் பெருமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டு, ஆய்வுப் பணியை மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சேதப் பகுதிகளைப் பார்வையிட வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, என்னுடைய தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், திரு. வை. காவேரி, திரு. கே.வீ. ராமநாதன், திரு. த.அ. மேகநாதன் ஆகிய ஐவர்





குழு தென் மாவட்டங்களுக்குச் சென்றது. பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று பார்வையிட்ட நேரத்தில், பொதுமக்கள் பிரச்சினைகளையெல்லாம் எடுத்துச் சொன்னதோடு 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்; உத்தரவையேற்று நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எல்லாப் பகுதிகளுக்கும் வந்தார்கள்; எங்களுக்கு முழு நிவாரணம் இல்லையென்று சொன்னாலும்கூட, இந்த அரசின்மீது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது, உள்ளாட்சித் துறைமீது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது' என்ற செய்தியை எங்களிடத்திலே சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதையெல்லாம் கேட்டு அறிந்தவன் என்ற முறையிலே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குழு இப்படிப் போய் பார்த்தபோது, முதன்முதலில் தூத்துக்குடி மாவட்டத்திற்குச் சென்றோம். தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி பகுதியில் உள்ள மந்தித்தோப்பு, மூப்பக்குடி ஆகிய கிராமங்களுக்கு முதலில் சென்றோம். அங்கே போய் பார்த்தபோது, நெல் வயலிலே, நெற்பயிர்கள் எல்லாம் சாய்ந்து, ஒன்றரை அடி, ஒரு அடி தண்ணீர் நிற்கிறது; நெற்பயிர்கள் எல்லாம் மூழ்கிவிட்டன; பயிர் முளைத்து, ஒன்றரை அங்குலம், இரண்டு அங்குலம் பயிராக முளைத்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் இப்படிப்பட்ட நிலைமை; நான் ஒருசில கிராமங்களின் பெயர்களைச் சொன்னேன்.

கோவில்பட்டி வட்டத்திலே நெல் முழுவதுமாக சேதம் அடைந்திருக்கிறது. அதைப்போல, விளாத்திகுளம் பகுதியிலே மிளகாயைப் பறித்து காய வைத்திருக்கிறார்கள். காய வைத்த மிளகாய் முழுவதுமாக மழையிலே நனைந்து, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது. மிளகாய் செடியிலே இருந்த பழுத்த பழங்கள் அப்படியே உதிர்ந்து விட்டன. மிளகாய் வேரெல்லாம் அழுகி, செடி காய்ந்து கொண்டிருக்கின்ற நிலை.

முற்பகல் 9-50

இதேமாதிரி தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டி, விளாத்திகுளம், தூத்துக்குடி, எட்டயபுரம், திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய வட்டங்கள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே சுமார் 180 கிராமங்கள்

பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த பாதிக்கப்பட்ட கிராமங்களைப் பார்த்தபோது--பல மாவட்டங்களுக்குச் சென்றோம். அந்த மாவட்டங்களில் நாங்கள் பார்த்தவைகள்--அங்கே இருக்கிற பொதுமக்கள், தொண்டு நிறுவனங்கள், விவசாயச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலமாக கோரிக்கைகளையெல்லாம் கொடுத்தார்கள். அப்படி பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையிலே, இங்கே அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தூத்துக்குடி மாவட்டத்திலே மட்டும் நான் மேலே சொன்ன அந்த வட்டங்களில், 50 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மிளகாய் 40 ஆயிரம் ஏக்கர், வாழை ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல, தூத்துக்குடியை ஒட்டியிருக்கிற கடலோரப் பகுதிகளிலே இருக்கிற உப்பளப் பகுதிகள் முழுவதுமாக தண்ணீரில் மூழ்கியிருக்கின்றன. ஏறக்குறைய 1 அடி, 1½ அடிக்கு தண்ணீர் நிற்கிறது. அந்த உப்பளங்களைச் சீர்செய்வதற்கு சில நாட்களாகும். ஆகவே, நிவாரணம் வழங்குகிற நேரத்தில் அந்த உப்பளங்களின் உரிமையாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். அதேநேரத்தில் உப்பளத் தொழிலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உப்பு எடுத்தல், மூட்டை கட்டுதல், சுமை தூக்குதல் போன்ற வேலைகளில் தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 1½ இலட்சம் உப்பளத் தொழிலாளர்கள் பணியாற்றுவதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரையிலே முழுமையாகச் சேதம் அடைந்த வீடுகள் 287. பகுதியாக சேதம் அடைந்த வீடுகள் 435. ஆக, 722 வீடுகள் சேதமடைந்துள்ளன. சிறு தானியப் பயிர்கள் 50 ஏக்கர் அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளன. உடைந்த பாலங்கள் 9, கண்மாய் உடைப்பு 9. இன்னும், நிரம்பி வழிந்து உடைபடக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய குளங்கள் 51 என்று விவரங்களைக் கேட்டறிந்து வந்தோம். ஆக, இப்படி தூத்துக்குடி மாவட்டம் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டு மக்கள் மிகப்பெரிய அதிர்ச்சியிலும், சோதனையிலும் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

அதைப்போல, தூத்துக்குடி நகரம் மாநகராட்சியாக வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டு வருகிற நேரம். நாங்கள்கூட ஒன்றரை வருடமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அது முக்கியத்துவம் வாய்ந்த நகரம். அந்த நகரத்திலே மழை நீர் 2½ அடி, 3 அடி தண்ணீர் தேங்கி நிற்கிறது. நேற்று முதல்நாள் நாங்கள் போனோம். 5, 6 நாட்கள் ஆகியும்கூட மழை நீர் இன்னும் அங்கிருந்து வெளியேற்றப்படவில்லை.



நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளையெல்லாம் பார்வையிட்டு அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு வந்திருக்கிறார்கள். அங்கிருந்த பெண்கள் எல்லாம் கதறிச் சொன்னார்கள்; 'அமைச்சர் அவர்கள் வந்தார்கள், சொல்லிவிட்டுப் போனார்கள். நடக்கும் என்று எதிர்பார்த்தோம், ஆனால் இன்றுவரையிலே நடைபெறவில்லை' என்று சொல்கிறார்கள். அங்கு இருக்கிற முருகன் நகர், இந்திரா நகர், மற்றும் Lion's Town பகுதி என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதிகளிலே முழுமையாகத் தண்ணீர் தேங்கி நிற்கிறது. பள்ளிக்கூடங்களில் பொதுமக்களையெல்லாம் வைத்திருக்கிறார்கள். ஆகவே, நீரை வெளியேற்ற வேண்டும். இப்போது நீரை வெளியேற்றுவது மட்டுமல்லாமல் நிரந்தரமாகக் கழிவு நீர் வெளியேறக்கூடிய வகையிலே ஒரு நல்ல திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்படி நிறைய சொல்லிக்கொண்டே இருக்கலாம். நேரம் இல்லை. ஆக, தூத்துக்குடி மாவட்டம் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், ராதாபுரம், சேரன்மாதேவி ஆகிய வட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதில் நெற்பயிர்கள் மட்டும் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளது. வாழை, உளுந்து, வேர்க்கடலை, சிறுதானியங்கள், சூரியகாந்தி போன்ற பயிர்களெல்லாம் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது. நிறைய சாலைகள், பாலங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டமே பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல, கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக தோவாளை, அகஸ்தீஸ்வரம் ஆகிய இரண்டு வட்டங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல, விளவங்கோடு, கல்குளம் ஆகிய இரண்டு வட்டங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆக, இந்த 4 வட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கே சுமார் 6,000 ஏக்கர் நெற்பயிர்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வாழை பாதிக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே செங்கல் சூளை முழுவதுமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தாமரைக்குளம் முதல் புத்தளம் வரை கரையோரக் கிராமங்களில் இருக்கிற உப்பளங்கள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

[திரு. ஜி.கே. மணி] [2008 மார்ச் 26

அதைப்போலவே, உலகத் தரம் வாய்ந்த இரப்பர் தோட்டம் திருவட்டாறு பகுதியிலே இருக்கிறது. இரப்பர் தோட்டத்தில் பத்து நாட்களாகப் பால் எடுக்க முடியவில்லை; இரப்பர் பால் எல்லாம் வீணாகப் போய்விட்டது. ஆகவே அந்த இரப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். அந்த இரப்பர் தோட்டத்திலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

அடுத்து, விருதுநகர் மாவட்டம். விருதுநகர் மாவட்டத்திலே இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருக்குளம் ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கேயும் நெல்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, மிளகாய் பாதிக்கப்பட்டிருக்கிறது; வீடுகளுக்கு நிறைய சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கேயுள்ள திருச்சுழி வட்டமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சிவகாசி, சாத்தூர் ஆகிய வட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கேயுள்ள தேவியாறு என்கின்ற ஆற்றில் உடைப்பு ஏற்பட்டு, பாலங்களில் எல்லாம் உடைப்பு ஏற்பட்டிருக்கின்றது. அந்தக் கிராமமே துண்டிக்கப்பட்டிருக்கிறது; போக்குவரத்து நிலைமையெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறது; அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மதுரை மாவட்டம். மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி, சோழவந்தான் பகுதி, சமயநல்லூர் பகுதி, தேனூர் பகுதி, மேலூர் அடுத்துள்ள திருவாதவூர், பெருங்குடி, திருப்பரங்குன்றத்தினுடைய தென்பகுதி, திருமங்கலம் போன்ற பகுதிகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இங்கே நெல், வெற்றிலை, வாழை எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மதுரையிலே, ஆணையூர், கூடல் நகர் மற்றும் சம்பக்குளம் ஆகிய மூன்று நகரங்களிலும் இன்னும் தண்ணீர் தேங்கி நிற்கிறது; தண்ணீர் அகற்றப்படாமல் இருக்கிறது.

அதைப்போல, தேனி மாவட்டத்தில் மொத்தம் 44 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 2,500 ஏக்கருக்கு மேலே பாதிப்பு. இதிலே மதுரையிலும், தேனியிலும் 'மாம்பிஞ்சு' அதிகமாக சேதம் அடைந்திருக்கிறது; பூவுடன் உதிர்ந்திருக்கிறது. அதுமாதிரி முருங்கை மரங்கள் பாதிப்பு; முருங்கைப்பூ உதிர்ந்திருக்கிறது. அங்கே நெல், வாழை, ரோஜா, சம்பங்கி மரிக்கொழுந்து போன்ற பூக்கள், வெற்றிலை, மக்காச்சோளம் போன்றவை எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன.



2008 மார்ச் 26] [திரு. ஜி.கே. மணி]

இராமநாதபுரத்திலே, பரமக்குடி வட்டம், கமுதி வட்டம், கடலாடி வட்டம், முதுகுளத்தூர் வட்டம், திருவாடனை வட்டம் போன்ற வட்டங்களிலே சுமார் 23,000 ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இங்கே நெல், மிளகாய், பருத்தி ஆகியவை பாதிப்பு. இதைப்போல, பாலங்கள் உடைபட்டிருக்கின்றன.

இதேமாதிரி கடலூர் மாவட்டம், வேலூர் மாவட்டம், தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் ஆகிய மாவட்டங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது; பண்ருட்டியிலே முந்திரி முழுவதுமாக சேதம் அடைந்திருக்கிறது. முந்திரி விவசாயிகள் எல்லாம் மிகவும் நலிந்து போய் முந்திரி பயிரிடுவதை விட்டுவிட்டு ஓடக்கூடிய நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டினுடைய பெரும்பாலான மாவட்டங்களில் மிகப் பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்கள் முயற்சி பாராட்டுக்குரியது. சட்டமன்றத்தை இரண்டு நாட்களுக்கு ஒத்திவைத்திருக்கிறீர்கள்; இந்த விவாதத்திற்கு வினா நேரத்தை ஒத்திவைத்திருக்கிறீர்கள்; இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள், வரவேற்கிறோம். இந்தச் சூழ்நிலையில் நீங்கள் நிவாரணம் என்று சொல்லக்கூடிய வகையில் ஒரு ஹெக்டேருக்கு 4,000 ரூபாய் என்று சொல்லுகிறீர்கள். நிச்சயமாக இது போதாது; அங்கேயுள்ள மக்கள் அதிகம் எதிர்பார்க்கிறார்கள்; குறைந்தபட்சம் நெல் பயிருக்கு ஏக்கருக்கு 10,000 ரூபாய் வழங்குங்கள்; வாழைப் பயிருக்கு ஏக்கருக்கு 15,000 ரூபாய் கொடுங்கள்; அதைப்போல மிளகாய் பயிருக்கு ஏக்கருக்கு 10,000 ரூபாய்; உளுந்து போன்ற பயிர் வகைகளுக்கு 5,000 ரூபாய் கொடுங்கள்; வீடுகள் இழந்தவர்களுக்கு 1,500 ரூபாய் 2,500 கொடுத்துகொண்டிருக்கிறீர்கள்; அது போதாது. இதை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, வீடு இழந்தவர்களுக்கு 10,000 ரூபாய் வழங்க வேண்டும். அதுபோல, உப்பளம் பாதிக்கப்பட்டிருக்கிறது; உப்பள உரிமையாளர்களுக்கு நட்ட ஈடு வழங்குவதோடு உப்பளத் தொழிலாளர்களுக்கும் நட்டஈடு வழங்கவேண்டும். அதைப்போல, இரப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு, இரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2008 மார்ச் 26

நாங்கள் பார்த்து, கேட்டு அறிந்த வகையில், பாதிக்கப்பட்ட பொது மக்கள் சொல்லுவது, முதலமைச்சருடைய வேகத்திற்கு அதிகாரிகள் இல்லை என்று வருத்தப்பட்டுச் சொல்லுகிறார்கள். இன்னும் சில இடங்களிலே கேட்டால், எங்கள் பகுதிக்கு கிராம நிர்வாக அதிகாரிகூட வரவில்லை என்று சொல்கிறார்கள். நேற்று மாலைகூட இந்த மாவட்டங்களுடைய முழு விவரங்கள் சேகரிக்கப்படவில்லை, சேகரித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

இவ்வளவு பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது. மாவட்டம் முழுவதற்கும் ஒரே நாளிலே விவரங்களைச் சேகரிக்க முடியும். கிராம நிர்வாக அலுவலர், வருவாய் அலுவலர், துணை வட்டாட்சியர், வட்டாட்சியர், அதைப்போல வட்டார வளர்ச்சி முகமையிலே, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மற்றும் கீழ் அதிகாரிகள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவு போட்டால், காலையிலிருந்து மாலை வரை, அல்லது அடுத்த நாளைக்குள்ளாக முழு விவரங்களையும் கிராமம் வாரியாகச் சேகரிக்க முடியும். ஆனால், நேற்று வரையிலே முழு விவரங்கள் வரவில்லை என்ற வேதனையான செய்தியைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் முதலமைச்சர் அவர்களை வற்புறுத்தி மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்; நீங்கள் நம்முடைய தலைமைச் செயலகத்திலிருந்து, துறையினுடைய செயலாளர் அந்தஸ்திலே இருக்கிற ஒருவரை, மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் அனுப்பி, உடனடியாக ஆய்வு செய்யுங்கள். துறைச் செயலாளர்கள் சென்றால், கீழே இருக்கிற அதிகாரிகள் அலறி அடித்துக்கொண்டு ஓடுவார்கள். வேகமாகப் பணியாற்றுவார்கள். எந்தக் குறையும் வராது. இங்கு வந்து கேட்டார்களென்றால், நமக்குச் சிக்கல் வந்துவிடும் என்று வேகமாகப் பணியாற்றுவார்கள். ஆகவே, பாகுபாடு இல்லாமல் வழங்கப்பட வேண்டும் என்ற நிலையை மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.



2008 மார்ச் 26]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். 100 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். நிச்சயமாக 100 கோடி ரூபாய் போதாது. கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இது தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற மிகப் பெரிய இழப்பு. சட்டமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றி அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நடுவண் அரசோடு இருக்கிற நெருக்கமான உறவுமுறைகளைப் பயன்படுத்தி, நடுவண் அரசிடமிருந்து கூடுதலான நிதியைப் பெறுங்கள் என்ற வேண்டுகோளையும் முன் வைக்க விரும்புகிறேன்.

இப்போது பார்த்தீர்கள் என்றால், தொடர்ந்து வறட்சி ஒரு பக்கம் வாட்டுகிறது. இல்லையென்றால், அடுத்த ஆண்டில் வெள்ளச் சேதம். இப்படி, தட்ப வெப்ப நிலை மாறுபாடு. இப்படி, இயற்கைச் சீற்றங்களால், தொடர்ந்து அழிவை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கிற இந்த வேளையில், இயற்கை இடர்பாட்டு நிவாரண நிதியம் என்ற ஒரு நிதியத்தை உருவாக்கி, அதற்கு ஆண்டுதோறும் நிதியொதுக்கீடு செய்து, நிதியை வைத்துக்கொண்டால், தொடர்ந்து இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, ஆற்றுப் பகுதிகளிலே பார்த்தோம். தாமிரபரணி ஆற்றில், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அங்கே அதிகாரிகளைக் கேட்டால், ஒரு விநாடிக்கு 26,500 கன அடி தண்ணீர் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலேகூட சொல்லியிருக்கிறீர்கள். மிகப்பெரிய திட்டம் தீட்டி, தடுப்பணைகளைக் கட்டுவதாக, கண்மாய்களை ஆழப்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள், நாங்கள் வரவேற்கிறோம். இருந்தாலும்கூட, ஒரு பெருந் திட்டத்தைத் தயாரித்து, ஓரிரு ஆண்டுகளில், தண்ணீரைத் தேக்கி வைக்கக்கூடிய அளவிற்கு, ஒரு சொட்டு தண்ணீர்கூடக் கடலுக்குச் செல்லாமல் தேக்கி வைத்தால், வறட்சிக் காலங்களில் பாசனத்திற்குப் பயன்படும். வெள்ளச் சேதத்தையும் தடுக்க முடியும். இவற்றையெல்லாம் நீங்கள் ஆய்வு செய்து, திட்டத்தைத் தயாரித்து, நிறைவேற்ற வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக, தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களால், உரிய நிவாரணம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பை வேகமாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2008 மார்ச் 26

நிவாரணம் வழங்குவதிலே, இன்னொன்றையும் சொல்கிறார்கள். விவசாயி போய் கேட்டால், "உங்களிடம் மூலப் பத்திரம் இருக்கிறதா, இருந்தால்தான் கிடைக்கும்" என்று சொல்வதாகச் சொல்கிறார்கள். நிலம் ஒருவருக்குச் சொந்தமாக இருக்கும். பயிர் செய்வதற்கு ஒருவருக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கும். இப்படிப்பட்ட குறைபாடுகளும் இருக்கின்றன. அவையெல்லாம் இல்லாத வகையில், யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்கள் ஒருவர்கூட விடப்படாமல், நேரடியாக நிவாரணம் கிடைப்பதற்கு முழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அரசையும் வற்புறுத்திக் கேட்டு, எடுத்த முயற்சிக்குப் பாராட்டைச் சொல்லி, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காங்கிரஸ் கட்சியின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளச் சேதங்கள் பற்றிக் கருத்து சொல்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கும், உடனடியாக வெள்ளச் சேதங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டு, உண்மையான ஆய்வுகளைச் செய்து வரவேண்டுமென்று ஆணையிட்டு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்பிற்குரிய தளபதி அவர்களைப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி, நேரடியாக ஆய்வு செய்ய வாய்ப்பளித்த நமது முதல்வர் அவர்களுக்கும் நான் முதற்கண் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்கள் மற்றும் சில மாவட்டங்களிலே முழுமையாக நெற்பயிர்கள் அழிந்துவிட்டன. அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் எல்லாம் முழுமையாக அழிந்துவிட்டன. அங்கே நெற்பயிர்களெல்லாம் படுத்துவிட்டன. கிராமத்திலே, மறுதாள் முளைத்துவிட்டது என்று சொல்வார்கள். அதாவது, நாற்று நட்டதுபோல, திரும்ப, நெல் கதிர் முளைத்து, அறுவடை செய்வதற்காக இருந்த நெல்லே பிரயோசனம் இல்லாமல் போய்விட்டது; முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நிமிர்ந்து நிற்கின்ற நெற்பயிர்கூட, இன்றைக்கு நாற்றாக முளைத்து நிற்கிறது.

அதேமாதிரி, வாழை. அவ்வளவு வாழையும் சேதமடைந்திருக்கிறது. அதேமாதிரி மானாவரிப் பயிர்கள். கடலை, உளுந்து போன்ற மானாவரிப் பயிர்களும் முழுமையாகச் சேதமடைந்திருக்கின்றன.



2008 மார்ச் 26] [திரு. பா. வேல்துரை]

எனவே, நீங்கள் நஷ்டஈடு வழங்குகிறபொழுது, ரெகுலர் பாசனம், அதாவது ஆற்றுப் பாசனம், அதேமாதிரி மானாவரிக் குளங்கள் பாசனம், அதேமாதிரி பம்பு செட் விவசாயம், எல்லா விவசாயிகளுக்கும் சம அளவில் நீங்கள் நஷ்டஈடு வழங்கவேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அங்கே தாலுகா அலுவலகத்திலே கேட்கிறபொழுது, பம்பு செட் விவசாயிகளுக்கு நஷ்டஈடு கிடையாது என்று சொல்கிறார்கள்.

மானாவரி விவசாயிகளுக்குக் குறைவாக நஷ்டஈடு என்று சொல்கிறார்கள். ஆற்றுப் பாசன விவசாயிகளைவிட மானாவரி விவசாயிகளுக்குத்தான் நஷ்டம் அதிகம். பம்ப்செட் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு அதிகம். எனவே, எல்லோருக்கும் சம அளவிலே நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

அதேபோல, நெல் உற்பத்திச் செலவே கிட்டத்தட்ட ஒரு ஏக்கருக்கு 6,500 ரூபாய் ஆகிறது. விவசாயிகளிடம் கேட்டால் உற்பத்திச் செலவே ரூ.6,500 ஆகிறது என்று சொல்கிறார்கள். அப்படிப்பார்க்கும்பொழுது, ஒரு ஹெக்டேருக்கு ரூ.4,000 என்பதை வைத்து அந்த விவசாயிகளை எந்தவிதத்திலும் திருப்திப்படுத்த முடியாது. எனவே, நிச்சயமாக உற்பத்திச் செலவையாவது கொடுக்க வேண்டுமல்லவா? உற்பத்திச் செலவையாவது கொடுக்கவில்லையென்றால், அந்த விவசாயி வீணாகப் போய்விடுவான். இந்த வருடம் பிள்ளையைக் கட்டிக்கொடுக்கலாம் என்று நினைத்து விவாசாயம் செய்திருந்தால், கடைசியிலே பிள்ளையின் திருமணம் இன்னும் மூன்று வருடங்களுக்குத் தாண்டிப் போய்விடும். அவ்வளவு மோசமான ஒரு நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்த நாட்டுக்கே முன்னோடியாக, 7,000 கோடி ரூபாய் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தவர் அன்பிற்குரிய நமது முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மத்திய அரசு 60,000 கோடி ரூபாய் விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, விவசாயத்தை, விவசாயிகளைக் காப்பாற்றுகிற நடவடிக்கையை நமது அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படி இருக்கின்ற நேரத்தில், கண்டிப்பாக விவசாயிகள் பாதிக்காத வண்ணம் நஷ்டயீட்டை, ஒரு நல்ல தொகையை, குறைந்தது ஒரு

ஏக்கருக்கு 10,000 ரூபாயாவது நமது முதல்வர் அவர்கள் கொடுத்தால், விவசாயிகளை அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்று சொல்கிறேன்.

அதேமாதிரி, நிறைய வீடுகள் இடிந்திருக்கின்றன. ஓலைக் குடிசை இடிந்தால்தான் பணம் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். உண்மையிலேயே அவர்கள் தாத்தா வீட்டைக் கட்டி வைத்திருப்பார், பராமரிக்கக்கூட முடியாது. ஓர் ஓலை வீடு, ஓட்டு வீடாக இருக்கும். அந்த வீடு மழையிலே அப்படியே உட்கார்ந்திருக்கிறது. அவர்களிடம், ஓட்டு வீடாக இருக்கிறது, மச்சு வீடாக இருக்கிறது என்று சொன்னால் ஒன்றுமே செய்ய முடியாது. அந்த ஆள் இனிமேல் தெருவிலேதான் நிற்க வேண்டும். அதனால், வீடு இடிந்தால், அந்த வீட்டின்மீது claim பண்ணினால், எல்லோருக்கும் வழங்குகிற மாதிரி அவர்களுக்கும் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, நிறைய சாலைகள், பாலங்கள் எல்லாம் போய்விட்டன. அநியாயமாக ரோடுகள் மற்றும் பாலங்கள் போய்விட்டன. நன்றாகப் போட்டிருந்த ரோடுகள் எல்லாம் போட்ட உடனே திரும்பவும் போய்விட்டன. புதிதாக போடப்பட்ட ரோடுகள் கனமழையால் போய்விட்டன, என்ன செய்ய முடியும்? சாலைகள் எல்லாம் போய்விட்டன, நிறைய பாலங்கள் உடைந்திருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறைமூலமாக அவற்றை உடனடியாக, மூன்று வருடங்கள் ஆக வேண்டுமென்ற கணக்கை எல்லாம் பார்க்காமல், சாலை பழுதடைந்தால் திருப்பி பழுது பார்க்க வேண்டுமென்ற கணக்கோடு நீங்கள் முழுமையாகக் கணக்கெடுத்து அதை சீர் செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, உயிர் இழந்தவர்களின் குடும்பங்கள் ரொம்பக் கஷ்டப்படுகின்றன. மனிதர்கள் உயிரிழந்திருக்கிறார்கள், நிறைய கால்நடைகள் உயிரிழந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் முழுமையாகக் கணக்கெடுத்து நிறைவான நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு சிறுவன் ஆற்றில் மூழ்கி இறந்திருக்கிறான். காணவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அவனுடைய குடும்பத்திற்கு நஷ்டஈடு கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். Body எடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) வெள்ளிச்சந்தை, அறப்புரை காலனியைச் சேர்ந்த ஒன்பது வயது





சிறுவன் இறந்திருக்கிறான். அவனுடைய குடும்பத்திற்கு நீங்கள் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, ஒரு கிறிஸ்தவ ஆலயம் இடிந்து விழுந்து பெரிய அளவில் சேதமாகியிருக்கிறது. அதற்கு 10 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று சொல்கிறார்கள். அதையும் நீங்கள் கனிவோடு பார்க்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, சுனாமி ஏற்பட்டபோது எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுத்தோமோ, நமது அரசு நடவடிக்கை எடுத்ததோ அதேபோன்று நடவடிக்கையை நீங்கள் வேகமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நமது அரசு வந்த பிறகு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நமது அரசு வந்த பிறகு, நியாயமாக நிறைய வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறோம், நிறைய வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம். நான் சொன்னது, நமது அரசு வந்த பிறகுதான். அதற்கு முன்னால் நடந்ததைப்பற்றி நான் பேசவேயில்லை. அந்த நடவடிக்கையை நீங்கள் வேகமாக எடுக்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொண்டு, ஏக்கருக்கு 10,000 ரூபாய் என்று நீங்கள் நிர்ணயித்தால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைவார்கள். நிச்சயமாக நமது கருணை உள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் நிச்சயமாக வழங்குவீர்கள் என்று நம்பி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சிக்கு ஒருவர் என்கின்ற முறைதான். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) கட்சிக்கு ஒருவர் என்கிற முறைதான், உட்காருங்கள். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி, ஏற்கெனவே, ரொம்ப நேரம் எடுத்துப் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது, ஒன்றை விட்டுவிட்டேன். தென் மாவட்டங்களிலே கடுமையான பாதிப்பெல்லாம் விவசாயிகளுக்குத்தான். அதனால், இந்த ஆண்டு பாதிக்கப்பட்ட மாவட்டப் பகுதிகளில் நீங்கள் நில வரியை இரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன். எல்லா இடங்களிலும் சொன்னார்கள். அதைக்கூட தெற்கே சொல்லிவிட்டு வந்தேன். பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

[திரு. ஜி.கே. மணி] [2008 மார்ச் 26

நில வரியை இரத்து செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், கட்சிக்கு ஒருவர்தான் என்று ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) கட்சிக்கு ஒருவர்தான். உட்காருங்கள், நீங்கள் பேசுங்கள்.

*முற்பகல் 10-10*

**திரு. சி. ஞானசேகரன்:** அதி முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாநில அளவிலேதான் எல்லோரும் பேசியிருக்கிறார்கள்; மாவட்ட அளவிலே அல்ல. மாநில அளவிலேதான் எல்லோரும் பேசியிருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**THIRU C. GNANASEKARAN:** Speaker Sir, Speaker Sir, please Speaker Sir...

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 14 நாட்களாக வங்கக் கடலிலும், அரபிக் கடலிலும் ஏற்பட்ட தாழ்வு நிலை காற்றழுத்தத்தின் காரணமாக, கடுமையான மழையினால் தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளம், வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்கள் என்று தமிழக மக்கள் அதிலும் குறிப்பாக, விவசாயப் பெருங்குடி மக்கள், ஏழை எளிய மக்கள் குடியிருக்கிற வீடுகள் என்று பல வகைகளிலும் தமிழகத்திற்குப் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியிருக்கின்ற அந்த வெள்ளச் சேதங்கள்பற்றி இன்றைக்கு நாம் சபையை ஒத்தி வைத்து விவாதித்துக்கொண்டிருக்கின்றோம். பொதுவாக, விவசாயிகள் படுகின்ற துயர் கணக்கில் அடங்காத வகையில் அவர்கள் தினந்தோறும் தங்களுடைய விவசாயத்திற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்த அவையை ஒத்திவைத்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வது, இந்த அவையினுடைய முறைக்கு மாறானது. ஒத்தி வைக்கக் கேட்டு விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான், தீர்மானம் ஒத்தி வைத்ததாகப் பொருள் அல்ல. ஒத்திவைக்கக் கேட்பதாகப் பொருள்.



2008 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு, இதை எடுத்திருக்கிறோம். பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சட்டமன்றப் பேரவைத் தலைவர் சொன்னீர்கள். அதனால்தான் சொன்னேன் நான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைக் கவன ஈர்ப்பாக எடுக்கவில்லை. தகவல் கோரல் என்ற முறையிலேதான் இப்போது நாம் எடுத்திருக்கின்றோம். சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக இன்றைக்கு தமிழக மக்கள் படுகின்ற துயரங்கள், அந்தத் துயரங்களிலிருந்து மீள்வதற்கு அரசின் சார்பாக எவ்வாறு நிவாரணம் தரப்பட வேண்டும், அவர்களுடைய மறுவாழ்விற்கு, சேதம் அடைந்த பகுதிகளில், சீரமைப்புப் பணிகள் எவ்வாறு இருந்திட வேண்டும் என்று நம்முடைய எதிர்க்கட்சிகள் தங்களுடைய கருத்துகளை இங்கே பதிவு செய்து இருக்கின்றன. பொதுவாக, வெள்ளச் சேதங்கள் ஏற்படுகின்றபொழுது, ஆளுகின்ற அரசு முனைப்புடன் செயல்பட வேண்டும். துயரடைந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இழப்புகளை சரியான முறையில் கணக்கிட்டு, அவர்களை அந்த விபத்திலிருந்து காப்பாற்றுவதுதான் ஒரு நல்ல அரசுக்கு இலக்கணம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தப் பெரு மழையின் காரணமாக, தென் மாவட்ட மக்கள், குறிப்பாக நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, மதுரை, தேனி ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு மாவட்டங்களிலும் பலத்த சேதத்தை இந்த மழை, அதனால் ஏற்பட்ட வெள்ளம், உருவாக்கி இருக்கின்றது என்பதனை நாம் நன்றாகவே அறிவோம். இப்படித்தான் கடந்த 2007, வடகிழக்கு பருவ மழை அக்டோபர்-நவம்பர் திங்களில் ஏற்பட்டபொழுது, அதனுடைய சேத மதிப்பு அரசின் சார்பாக 1,510 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டு, அந்த நிதியை மத்திய அரசிடம் நாங்கள் கேட்டிருக்கிறோம் என்று அரசின் சார்பாக பதிலும் தரப்பட்டு, அரசு அதற்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, நம்முடைய நிதிநிலை அறிக்கையிலும் 56.5 கோடி ரூபாய் நிவாரணம், இழப்பீடு வழங்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆக, வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் கடந்த ஆண்டில் 1,510 கோடி

ரூபாய். ஆனால் வழங்கியிருக்கின்ற இழப்பீடு விவசாயிகளுக்கு 56.5 கோடி ரூபாய். மற்ற மற்ற சேதங்களுக்கு நம்முடைய அரசு எந்த நிதியை, எவ்வளவு நிதியை செலவழித்திருக்கிறது என்பதனை வெள்ளை அறிக்கையாகத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10-15*

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த வடகிழக்கு பருவமழையின்போது ஏற்பட்ட வெள்ள சேதத்தை குறிப்பிட்டு அறிக்கைகள் தருகின்ற நேரத்தில், அரசு இலவச கலர் டி.வி. வழங்குகின்ற அந்த நிதியை வெள்ளச் சேதங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று சொல்கின்ற நேரத்தில், கலர் டி.வி. கொடுப்பதற்கும் நிதி இருக்கிறது, வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களையும், இழப்புகளையும் புனரமைப்பதற்கும் நிதி இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த நேரத்திலே சொன்னார்கள். ஆனால், நம்முடைய நிதிநிலை அறிக்கையில் 56.5 கோடி ரூபாய் இழப்பீடு நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய சாலைப் பணிகளுக்கு, குளங்கள், ஏரிகள் மற்றும் வெள்ளத்தினால் சேதமுற்ற பகுதிகளுக்கு நிவாரணம் எந்த வகையில் வழங்கப்பட்டது, மறு சீரமைப்புப் பணிகளுக்கு இந்த அரசு எந்த அளவிற்கு அதனை எடுத்து காரியமாற்றியிருக்கிறது என்பதனை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்போது ஏற்பட்டிருக்கின்ற, இந்த வெள்ளச் சேதம், தமிழக விவசாயிகள் ஏற்கெனவே பட்ட கடன்--எந்த ஏழை விவசாயியும், விவசாயம் ஆரம்பிக்கின்றபோது கையில் இருப்பு வைத்து, விவசாயத்தைச் செய்வதில்லை. வெளியிலும் கூட்டுறவு நிதி நிறுவனங்களிலும் கடன்களை வாங்கி விவசாயம் செய்ய வேண்டிய ஒரு துர்பாக்கிய சூழ்நிலை நம்முடைய தமிழக விவசாயிகள் மத்தியில் நிலவிக் கொண்டிருக்கிறது. அந்தவகையில் கையில் இருக்கின்ற காசை எல்லாம் செலவழித்து, நகைநட்டுகளை எல்லாம் அடகு வைத்து, கடன் வாங்கி செய்த விவசாயம், கடைசியில் அறுவடைக்கு வருகின்ற நேரத்தில் அதுவும் கைக்குக் கிடைக்காமல், பெருத்த சேதம் ஏற்பட்டு, விவசாயிக்கு ஏற்பட்டிருக்கின்ற அந்தச் சூழ்நிலை என்பது நாம் உண்மையிலேயே வருத்தப்படக்கூடிய ஒரு நிகழ்வாகத்தான் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. அவர்களுக்கு தரப்படுகின்ற





இந்த இழப்பீடு மிகவும் குறைவானதாக இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஹெக்டேருக்கு 4 ஆயிரம் ரூபாய் என்கிற அளவிற்கு, நெல்லுக்கு வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை நிர்வாகச் செலவாகிறது, ஒரு விவசாயிக்கு, அந்த நெல்லை உழவடையிலிருந்து, விதை நெல் வாங்குவதிலிருந்து, உரமிடுவதிலிருந்து, பூச்சி மருந்து தெளிப்பதிலிருந்து, அனைத்து விவசாய செலவுகளாக 10 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. 10 ஆயிரம் ரூபாய் கடனை வாங்கி செலவழித்தும், கடைசியில் அறுவடை நேரத்தில் இந்த மாதிரி பெருத்த சேதம் ஏற்படுகின்றபோது, வெறும் 4 ஆயிரம் ரூபாய் அரசால் அறிவிக்கப்படுகின்ற நேரத்தில், ஒரு ஏக்கர் 1,600 ரூபாய்தான் வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இந்த மாதிரியான வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது, ஒரு ஹெக்டேருக்கு 7500 ரூபாய் என்று உயர்த்தித் தந்தார்கள் என்பதை நான் இந்தச் சபைக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இன்றைக்கு நெல் மட்டுமல்லாமல், கரும்பு, வாழை, கொடிக்கால் வெற்றிலை, முந்திரி மற்றும் காய்கறி தோட்டப் பயிர்கள், மிளகாய் வற்றல் போன்ற பயிர்கள், மானாவரி பயிர்கள் பெருத்தச் சேதத்திற்குள்ளாகியிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், தூத்துக்குடி மாவட்டத்தில் இருக்கின்ற உப்பளங்கள் முழுவதுமாக சேதமடைந்திருக்கின்ற சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது. அதனை சீரமைப்புச் செய்வதற்கு, அந்த விவசாயிகளுக்கு முடியாத நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. ஆக, இப்போது ஏற்பட்டிருக்கின்ற இழப்புகளுக்கெல்லாம் அரசு சரியான ஒரு தீர்வைக் கொண்டுவந்து, சரியான நிவாரணம் வழங்குவதே விவசாயிகளுக்கு ஓரளவுக்காவது தீர்வாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். மீண்டும் கூட்டுறவு வங்கிகள்மூலமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்காக விவசாயிகளுக்குக் கடன் உதவி வழங்க வேண்டும்.

நில வரியை இரத்து செய்ய வேண்டும். (குறுக்கீடு) ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய். (குறுக்கீடு) 25 ஆயிரம் ரூபாய் ஆகிறது. (குறுக்கீடு) செலவே அவர்களுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரம் ரூபாய் வரை ஆகிறது. நிர்வாகச் செலவு அதாவது தசகூலிச் செலவு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2008 மார்ச் 26

என்பது, ஒரு ஏக்கருக்கு நெல் பயிரிடுவதற்கு மட்டும் 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரம் ரூபாய் வரை ஆகிறது. ஆக, இப்போது ஏற்பட்டிருக்கின்ற வெள்ளச் சேதங்களிலிருந்து, ஓரளவுக்கு அவர்களுடைய துயர் துடைப்பதற்கு அரசு நல்ல நிவாரண உதவிகளைத் தந்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

அதோடுமட்டுமல்லாமல், விலை மதிக்க முடியாத மனித உயிர்களுக்கு வேண்டிய இழப்பீட்டுத் தொகையையும், கால்நடைகளை இழந்த விவசாயிகள் மற்றும் தமிழக மக்களுக்கு உரிய நிவாரணத் தொகையும், வீடு இழந்தவர்களுக்கு மீண்டும் வீட்டினுடைய சேதங்களைச் சரியாக மதிப்பிட்டு அவர்களுக்கு உரிய நிவாரணத் தொகையையும், பாதிக்கப்பட்டிருக்கின்ற உப்பளத் தொழிலாளர்களுக்கு நிவாரண உதவிகளையும் இந்த அரசு வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை மற்றும் சேதம் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக 28 பேர் தங்களுடைய கருத்துகளை எடுத்து வைக்க வேண்டுமென்று தங்களிடத்திலே கோரிக்கை வைத்திருந்தாலும், நேரத்தின் அருமையைக் கருதி கட்சிக்கு ஒருவர் என்ற அடிப்படையில் 8 பேர், மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வப் பெருந்தகை, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன், மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் இங்கு உரையாற்றி, அரசுக்குத் தங்களுடைய கருத்துகளை, பல அறிவுரைகளை, ஆலோசனைகளை, அரசு நிறைவேற்றிக்கொண்டிருக்கக்கூடிய பணிகளுக்கு மேலும் வலு சேர்க்கின்ற வகையில் பல கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கக்கூடிய சில குறைபாடுகளைக்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். எனவே, அந்தக் குறைபாடுகளை இந்த அரசு முறையாக களைவதற்கான முயற்சியில் நிச்சயமாக ஈடுபடும் என்பதை



2008 மார்ச் 26] [திரு. மு.க ஸ்டாலின்]

நான் தொடக்கத்திலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கக்கூடிய அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் அரசின் சார்பில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரையோடு, ஆலோசனையோடு, அவருடைய ஒப்புதலோடு இந்த அறிக்கையை நான் இந்த அவையிலே தாக்கல் செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த 10-3-2008 முதல் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. அதிலும், குறிப்பாக தென் மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பலத்த மழை பெய்துள்ளது. தமிழகத்தில் மார்ச் முதல் மே மாதம் வரை கோடைக்காலமாகும். இக்காலத்தில் பொதுவாக மழை அதிகம் பெய்வது இல்லை. தமிழகத்திற்கு மார்ச் மாதத்தில் சராசரியாக பெய்ய வேண்டிய மழையினுடைய அளவு 19.9 மில்லி மீட்டர் ஆகும். இந்த ஆண்டு 10-3-2008 முதல் 23-3-2008 வரை 158.03 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இது சராசரி மழை அளவைக் காட்டிலும் 8 மடங்கு அதிகம். திருநெல்வேலி மாவட்டத்தில் 358 மில்லி மீட்டர், இராமநாதபுரம் மாவட்டத்தில் 315.39 மில்லி மீட்டர், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 295.23 மில்லி மீட்டர், தூத்துக்குடி மாவட்டத்தில் 253.86 மில்லி மீட்டர், விருதுநகர் மாவட்டத்தில் 250.11 மில்லி மீட்டர், சிவகங்கை மாவட்டத்தில் 246.51 மில்லி மீட்டர், கன்னியாகுமரி மாவட்டத்தில் 244.45 மில்லி மீட்டர்.

நீலகிரி மாவட்டத்தில் 225.55 மில்லி மீட்டர், தேனி மாவட்டத்தில் 223.45 மில்லி மீட்டர், கடலூர் மாவட்டத்தில் 220.90 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. ஏனைய மாவட்டங்களிலும் கணிசமான அளவு மழை பெய்துள்ளது. இதில் அதிகபட்சமாக கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயிலில் 12-03-2008 அன்று காலை பதிவான மழையின் அளவு 236 மில்லி மீட்டர். நாகப்பட்டினம் மாவட்டம், ஆனைக்காரன் சத்திரத்தில், 13-03-2008 அன்று காலை பதிவான மழையின் அளவு 226 மில்லி மீட்டர். இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலத்தில், 21-03-2008 அன்று காலை பதிவான மழையின் அளவு 210 மில்லி மீட்டர் ஆகும்.

முற்பகல் 10-25

மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின்படி, இம்மழையின் காரணமாக மாநிலம் முழுவதும்

3,097 வருவாய் கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 77 வருவாய் கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டுள்ளன. இம்மழையால் பாதிக்கப்பட்ட 10,278 பேர் 41 மையங்களில் தங்க வைக்கப்பட்டு, 38,038 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. 24-03-2008 வரை மொத்தம் 24 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த கால்நடைகளின் எண்ணிக்கை 804 ஆகும். மாவட்டங்களில் மொத்தம் 5,782 குடிசைகள் மழையால் சேதமடைந்துள்ளன. இவற்றில் 2,106 குடிசைகள் முழுமையாகவும், 3,676 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. பல்வேறு மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து இதுவரை வந்துள்ள தகவல்களின்படி, மாநிலம் முழுவதும் முதற்கட்ட மதிப்பீட்டின்படி 47,257 எக்டேர் நிலப்பரப்பில் நெற்பயிர்களும், 2,79,143 எக்டேர் நிலப்பரப்பில் தானியம் மற்றும் பருப்பு வகைப் பயிர்களும், 62,882 எக்டேர் நிலப்பரப்பில் தோட்டக்கலைப் பயிர்களும், 41,068 எக்டேர் நிலப்பரப்பில் இதர பயிர்களும், ஆக மொத்தம் 4,30,350 எக்டேர், அதாவது 10,62,965 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் 9,863 கி.மீ. நீளத்திற்கு சாலைகளும், 945 சிறு பாலங்கள் மற்றும் பாலங்களும், 747 குளங்கள் மற்றும் வாய்க்கால்களும் இம்மழையால் சேதமடைந்துள்ளன.

20 ஆம் தேதி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, மீண்டும் 24 ஆம் தேதி இந்த அவை கூடும் என்ற அறிவிப்போடுதான் பேரவை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. ஆனால் தமிழகத்தில் பல பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்துகொண்டுள்ளது என்ற செய்தி வந்ததையடுத்து, 21 ஆம் தேதி காலையிலேயே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளரையும், மூத்த அதிகாரிகளையும் அழைத்து, உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் தொடர்பு கொண்டு, வெள்ள நிவாரணப் பணிகளில் விரைந்து ஈடுபட வேண்டுமென்று அறிவுறுத்துமாறு கூறினார்கள். மறுநாள் 22 ஆம் தேதி காலையில் முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து, தலைநகரிலே உள்ள அமைச்சர்களையும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளையும், தலைமைச் செயலகத்திற்கு உடனடியாக வருமாறு அழைப்பு. 10½ மணி கூட்டத்திற்கு, நான் 10-00 மணிக்கு வந்தேன். ஆனால் வாசலிலேயே முதலமைச்சர் அவர்கள் 9½ மணிக்கெல்லாம் வந்துவிட்டார் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) போர்க்கால நடவடிக்கை என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வாறுதான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கூட்டம் முடிந்தவுடன், மின்சாரத் துறை அமைச்சரையும், என்னையும், பொதுப் பணித் துறை





அமைச்சரையும் ஒவ்வொரு பகுதிக்கும் விரைந்திடுமாறு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். 23 ஆம் தேதி காலையிலே பொருளாளர் இல்லத்திலே திருமணம் என்றோம். பரவாயில்லை, நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், நீ புறப்படு என்று என்னை 22 ஆம் தேதி அன்றே தென் மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். பொருளாளர் இல்லத் திருமண விழா முடிந்ததுதான் தாமதம், மதிய உணவுகூட அருந்தவில்லை, விருந்தினர்களைச் சாப்பிட்டுவிட்டுச் செல்லுமாறு ஒலிபெருக்கியிலே கூறிவிட்டு, மின்சாரத் துறை அமைச்சரும், பொதுப் பணித் துறை அமைச்சரும் கார் மூலமாக வெவ்வேறு வெள்ளப் பகுதிகளுக்கு உடனடியாக விரைந்தனர். 22 ஆம் தேதி சென்னையிலேயிருந்து புறப்பட்ட நான், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் வெள்ளப் பகுதிகளைப் பார்த்துவிட்டு, நேற்று மாலைதான் அமைச்சரவைக் கூட்டத்திலே கலந்துகொள்வதற்காகத் திரும்பினேன்.

*முற்பகல் 10-30*

இந்த அளவிற்கு பணியாற்றுகிறோம். பாதிக்கப்பட்ட மக்கள் இந்த அரசிடம் நிரம்ப எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் துயரத்தில் இந்த அரசு நிச்சயமாக பங்குகொள்ளும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 22-3-2008, 24-3-2008 மற்றும் 25-3-2008 ஆகிய நாட்களில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் இம்மழை மற்றும் அதன் பாதிப்புகள் குறித்து அறிந்து, மழையினால் ஏற்பட்ட சேதங்களுக்கு உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கி, நிவாரணப் பணிகளுக்காக ரூபாய் 100 கோடி வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து அரசு அலுவலர்களும் இம்மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சரிசெய்ய, முனைப்புடன் தொடர்ந்து பணியாற்றிவருகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உத்தரவின்படி இம்மழையின் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. முழுமையாக மற்றும் பகுதியாக சேதமடைந்த குடிசைகளுக்கு, குடிசை ஒன்றுக்கு ரொக்கமாக ரூபாய் 2 ஆயிரம் வீதம் நிவாரணமும், 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி மற்றும் ஒரு புடவை

ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, குடிசைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் ஆயிரம் பாத்திரங்களுக்காகவும், மேலும் ரூபாய் ஆயிரம் உடைகளுக்காகவும் ஆக, இரண்டாயிரம் ரூபாய் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

பேரிடர் நிவாரண நிதியின் கீழ் (Calamity Relief Fund) மைய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி, பாசன வசதிகொண்ட நிலங்களில், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூபாய் 4 ஆயிரம் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை போதாது என்ற இந்தக் குறையை நான் சென்ற இடங்களிலெல்லாம் விவசாயிகள் என்னிடத்தில் எடுத்துக் கூறினார்கள். மத்திய அரசு நிர்ணயித்த தொகை ஹெக்டேருக்கு ரூபாய் 4 ஆயிரம்தான் என்று இருந்தபோதிலும், விவசாயிகள் துயரத்தில் பங்குகொள்ளும் இந்த அரசு இப்போதும் இப்பெருமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 7,500 அதாவது ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 3 ஆயிரம் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்க முடிவெடுத்துள்ளது. இதற்கான கூடுதல் செலவினம் மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இந்த உதவி வழங்குவதிலேகூட தற்போதுள்ள அரசாணைப்படி அதிகபட்சமாக 2 ஹெக்டேர் என்ற அளவிற்குத்தான் நிவாரண உதவி வழங்கப்படும் என்ற விதியை மாற்றி பாதிக்கப்பட்ட நிலம் எத்தனை ஹெக்டேராக இருந்தாலும், அத்தனை ஹெக்டேர் நிலத்திற்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நெற்பயிர் பாதிப்பிற்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 7,500 ரூபாய் வீதம் நிவாரண உதவி அளித்திடவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நெற்பயிர் தவிர மற்ற பயிர்களைப் பொறுத்தவரையில், மழையை நம்பியிருக்கும் பகுதிகளில் வேளாண்மை பயிர்கள் மற்றும் தோட்டப் பயிர்களின் இழப்பு, 50 சதவீதத்திற்கு மேல் இருக்குமேயானால், ஹெக்டேர் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய் வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பாசன வசதி உள்ள பகுதிகளில் நெல் தவிர மற்ற பயிர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் ஹெக்டேர் ஒன்றுக்கு 4 ஆயிரம் ரூபாய் வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)





அதைப்போலவே, perennial crops என்று கூறப்படும் மா, புளி போன்ற நிரந்தரப் பயிர்கள் பாதிக்கப்பட்டால் ஹெக்டேர் ஒன்றுக்கு 6 ஆயிரம் ரூபாய் வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், தற்போது நடைமுறையில் உள்ள மத்திய அரசு நெறிமுறைகளின்படி உயிரிழந்த கால்நடைகளுக்காக பசு, காளை மற்றும் எருமை மாடுகளுக்கு தலா ரூபாய் 10 ஆயிரமும், கன்றுக்கு தலா ரூபாய் 5 ஆயிரமும், ஆடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு தலா ரூபாய் ஆயிரமும் நிவாரணம் வழங்கப்படுகிறது. இதில் அதிகபட்சமாக குடும்பம் ஒன்றுக்கு, ஒரு கறவை மாடு அல்லது நான்கு சிறிய கறவை இனங்களுக்கு அல்லது பாரம் சுமக்கும் விலங்குகளில் draught animals ஒரு பெரிய இனம் அல்லது இரண்டு சிறிய இனங்களுக்கு நிவாரணம் தற்போது வழங்கப்படுகிறது. இத்தனை ஆண்டுகாலமாக இதுபோன்ற வெள்ள பாதிப்புகளின்போது இந்த முறையை பின்பற்றித்தான் உதவி நிதி வழங்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது தமிழக அரசு, எண்ணிக்கை வரம்பினை அறவே நீக்கி இறந்துபோன அனைத்து பசு, காளை மற்றும் எருமை இனங்களுக்கு தலா ரூபாய் 10 ஆயிரமும், (மேசையைத் தட்டும் ஒலி) இறந்துபோன அனைத்து கன்றுகளுக்கும் தலா ரூபாய் 5 ஆயிரமும், இறந்துபோன அனைத்து ஆடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு தலா ரூபாய் ஆயிரமும் வழங்க முடிவெடுத்துள்ளது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினங்களை தமிழக அரசு தன் நிதியிலிருந்து ஏற்றுக்கொள்ளும் என்பதை தெரிவித்து அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரிவான விளக்கம் சொல்லியாகிவிட்டது. இன்னும் என்ன வேண்டும்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, இதையெல்லாம் இந்த அவைக்குள்ளே கொண்டு வந்து காண்பிப்பது முறையில்லை. என்னிடம் அனுமதி கேட்கவும் இல்லை. நீங்கள் கொண்டு வருவதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அனுமதி கொடுக்கவும் இல்லை. (குறுக்கீடுகள்) இதை அவையிலே கொண்டு வந்து காண்பிப்பது முறையல்ல. (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது ஒவ்வொரு கட்சியினுடைய தலைவர்களும் கருத்துக்களைச் சொல்லி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதிலும் தந்த பிறகு ஒரு விளம்பரத்திற்காக சட்டப்பேரவை உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, நீங்கள் அதை வெளியிலே கொண்டு போகிறீர்களா? இல்லை உங்களையே அப்புறப்படுத்தச் சொல்லவா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு உறுப்பினர், அதைக் கையிலே எடுத்துக் கொண்டு வந்து இந்த அவையிலே காட்டுவது முறையா என்பதைப் பார்த்து இதற்கு நீங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னங்க முறை? அவர் யாரிடம் கேட்டு உள்ளே கொண்டு வந்தார். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் கையில் எடுத்துக் காண்பித்து இங்கே பேசியதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்கள் அவையிலே காண்பித்து அவர் சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். யாராவது ஒருவர் சொல்லுங்கள். திரு. மணி. (குறுக்கீடு) One minute. One minute. திரு. மணி அவர்கள். என்ன சொல்கிறார்கள் என்று கேட்டுவிடுவோம். திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிவாரணங்களை எல்லாம், இருந்த நிலையை மாற்றி கூடுதலாக வழங்கி அறிவித்திருக்கிறார்கள். பரவலாக தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தர்பூசணி பயிரிட்டு அப்படியே வீணாகப் போய்விட்டன. அதற்கு இழப்பீட்டுத் தொகை, அதேபோல, முந்திரி பருப்புக்கு இழப்பீட்டுத் தொகை, முந்திரி பாதிப்பு, அதேபோல, உப்பளம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இரப்பர் தோட்டம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிவாரணத் தொகையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக தமிழக அரசுக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களிலே தர்பூசணிப் பழங்கள் மழையால் நிறைய அழுகிப் போய் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று பார்த்து வந்திருக்கிறார்கள். தர்பூசணி பயிரிட்டவர்களுக்கும் இந்த அரசு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அந்த தர்பூசணிப் பழம் தயார் செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் செலவழித்து போட்டிருக்கிறார்கள். அதனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்களுக்கு விவசாயத்தைப் பற்றித் தெரியும். நான் ஆண்டுதோறும் 10 ஏக்கர் தர்பூசணி பயிரிடுகிறேன். விதைக்கு மட்டும்தான் செலவிடுகிறோமே தவிர, 3 மாதங்களுக்குச் சேர்த்து 2 முறைதான் தண்ணீர் விடுகிறோம். அதிகபட்சம் செலவானால் 1,000 ரூபாய் செலவாகும். ஒரு ஏக்கரில் வருமானமே 5 ஆயிரம் ரூபாய்தான். அப்படி இருக்கும்போது 10 ஆயிரம் ரூபாய் எப்படிச் செலவாகும் என்று தெரியவில்லை. இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அந்த அறிவிப்புகளிலே அதுவும் இடம்பெறும்.

[2008 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னங்கன்றுகள் வைக்கின்ற நேரத்தில் 2, 3 ஆண்டுகளுக்கு ஊடு பயிர்களை விவசாயம் செய்வது விவசாயிகளுடைய வாடிக்கை. ஊடு பயிர்களாக பயறு வகைகள் மற்றும் வாழை போன்ற பயிர்களை அவர்கள் 3, 4 வருடங்களில் பயிர் செய்வார்கள். அவர்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள மாட்டோம் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே, ஊடு பயிர்களைப் பயிரிடுபவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கொடைக்கானல் மலைப் பிரதேசங்களிலே காபி போன்ற பயிர்கள் முழுவதும் சேதமடைந்திருக்கின்றன. இந்த வருடத்தில் பூ எடுத்து நன்றாக பிஞ்சுகள் இறங்குவதற்கு முன்பாகவே பெருத்த மழையின் காரணமாக அனைத்துப் பூக்களும் அழிந்துவிட்டன. அதற்கும் உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கமான அறிக்கை கொடுத்து விட்டார்கள். (குறுக்கீடுகள்) இதற்கு மேலும் நேரம் இல்லை, time இல்லை. அடுத்த அலுவல் எடுக்கப் போகிறேன்.

## 5. முன்பண மானியக் கோரிக்கைகள், 2008-2009, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.



2008 மார்ச் 26]

### 2008-2009 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1. | மாநிலச் சட்டமன்றம் | 5,75,53 | — | — |
| 2. | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 4,65,58 | — | — |
| 3. | நீதி நிருவாகம் | 65,16,86 | — | — |
| 4. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 174,02,94 | 18,14,74 | — |
| 5. | வேளாண்மைத் துறை | 339,26,78 | 30,33,06 | — |
| 6. | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 62,60,11 | 8,27 | — |
| 7. | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 25,13,44 | 5,04,8[illegible] | — |
| 8. | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 8,17,49 | — | 9,03,47 |
| 9. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 1,00,30,58 | 13,22,72 | — |
| 10. | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 52,33,65 | — | — |

[2008 மார்ச் 26

| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 11. | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 36,99,86 | — | — |
| 12. | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 94,81,76 | 256,46,30 | 21,34 |
| 13. | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 867,03,91 | 13,20 | 360,00,00 |
| 14. | எரிசக்தித் துறை | 307,79,01 | 25,00,00 | 1 |
| 15. | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 83,29,04 | 49,56,48 | — |
| 16. | நிதித் துறை | 131,82,71 | — | 6,10,63 |
| 17. | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன் துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 143,37,39 | 7,50 | — |
| 18. | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 15,91,78 | — | — |
| 19. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 646,60,11 | 38,57,73 | — |



2008 மார்ச் 26]

| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 20. | உயர் கல்வித் துறை | 298,16,08 | 15,33,66 | — |
| 21. | நெடுஞ்சாலைகள் துறை | 498,04,14 | 1,173,58,45 | — |
| 22. | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 551,23,57 | 54,85,82 | 25,00 |
| 23. | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 30,86,60 | 1,44,71 | — |
| 24. | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 22,50,74 | 2,59,75 | — |
| 25. | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 18,54,77 | — | — |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 76,80,54 | 173,86,66 | 27,12,50 |
| 27 | தொழில் துறை | 76,31,61 | 2,71,09 | 50,00,00 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 9,04,23 | 24,25 | — |

| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 17,56,15 | 6,62,34 | 1 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 18,52,46 | 1,00,02 | — |
| 31 | தகவல் தொழில் நுட்பவியல் துறை | 192,71,53 | 2,50,00 | — |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 101,18,25 | 83,22 | — |
| 33 | சட்டத் துறை | 3,52,37 | — | — |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 551,61,30 | 219,11,82 | 54,95,14 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 9,32,91 | 3,75 | — |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 10,90,16 | 3,66,79 | — |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 13,46,18 | — | — |



| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 38 | பொதுத் துறை | 37,24,59 | 1,25,00 | — |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 60,26,18 | 200,50,54 | — |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 294,29,60 | 380,21,76 | — |
| 41 | வருவாய்த் துறை | 623,71,78 | 17 | — |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 887,90,55 | 261,79,72 | — |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 1,922,58,88 | 40,41,25 | 1,37 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 21,01,01 | 19,94 | — |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 433,27,41 | 20,22 | — |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 6,19,19 | — | — |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 13,67,60 | 40,00 | — |
| 48 | போக்குவரத்துத் துறை | 84,93,24 | 41,29,20 | 41,25,01 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 11,88,91 | 1 | 62,50 |

| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 1,983,03,48 | — | — |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 218,80,51 | — | — |
| | **பெரு மொத்தம்** | **12,264,25,05** | **3,021,35,00** | **549,56,98** |

## 6. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2007-2008, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகின்றேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை@ இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த அவையில் வைக்கப்பட்ட இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 2,198.45 கோடி ரூபாய் நிதியொதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில், 921.23 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும் 656.69 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும் மற்றும் எஞ்சிய தொகையான 620.53 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.

இந்தத் துணை மதிப்பீடுகளில் இடம் பெற்றுள்ள சில முக்கியமான திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையைச் சார்ந்த உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குக் கூடுதலாக 40.80 கோடி

@ அறிக்கையில் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகள் 106 முதல் 111 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.



ரூபாய் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 4, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை" என்பதன்கீழ் 38.65 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் நெல் கொள்முதல் செய்வதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கடன் வழங்கிட, கூடுதலாக 300 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இத்தொகை இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 13, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

புதிய மின் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிதியுதவி அளிக்க இந்த அரசு கருதியுள்ளது. இந்தத் திட்டங்களுக்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குப் பங்கு மூலதன உதவியாக இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 14, எரிசக்தித் துறை" என்பதன்கீழ் 250.00 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்குவதற்கு, கூடுதலாக 100.00 கோடி ரூபாய் அரசு அனுமதி அளித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 19, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை" என்பதன்கீழ் அடையாள நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை, மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

ஜவஹர்லால் நேரு நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற ஏழை மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்காகக் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 34, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் 133.06 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

நபார்டு உதவியுடன் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமங்களில் சாலைப் பணிகளைச் செயல்படுத்த, கூடுதலாக 40.00 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 42, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை" என்பதன்கீழ் 40.00 கோடி ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது.

2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுப் பருவ மழையின்போது சேதமடைந்த சாலைகள் மற்றும் பாலங்களைச் சீரமைப்பதற்காக, கூடுதலாக 128.95 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இத்தொகை இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 51, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 2007-2008 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்



| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 10,19 | — | — |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 1,66,98 | — | — |
| 3 | நீதி நிருவாகம் | 10 | — | — |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 35 | 39,57,05 | — |
| 5 | வேளாண்மைத் துறை | 71 | 11,08,88 | — |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 11 | 6,97,47 | — |
| 7 | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | 8 | 3 | — |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 4,35,82 | — | 3,30,52 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 23 | 3,21,58 | — |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 13,67,82 | — | — |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 8,74,28 | — | — |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 11,14,42 | 24,32,24 | 1 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 30,18 | — | 300,00,00 |
| 14 | எரிசக்தித் துறை | 21,53,95 | 250,00,00 | 4,91,99 |
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 9 | 6 | 8,16,00 |
| 16 | நிதித் துறை | 15 | — | 6,43,99 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 8 | — | — |

| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 18 | கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 5,34,00 | 7,50 | — |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 82 | — | — |
| 20 | உயர் கல்வித் துறை | 29 | 4,12,31 | — |
| 21 | நெடுஞ்சாலைகள் துறை | 9 | 20 | — |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 47 | 24,71,15 | — |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 3 | — | — |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5 | 2,25,75 | — |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்- நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 6 | — | — |



| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 6 | — | 113,40,00 |
| 27 | தொழில் துறை | 4,69,60 | 165,49,00 | 170,00,38 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 6 | — | 5,22 |
| 29 | சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | 5,32,06 | 53,79 | — |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 6 | 73,57 | — |
| 31 | தகவல் தொழில் நுட்பவியல் துறை | 9,09,76 | — | — |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 16 | 2,87,95 | — |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 136,29,40 | 3,84,17 | 2 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 1,61,34 | — | — |

| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 5 | 1 | — |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 2,34,79 | — | — |
| 38 | பொதுத் துறை | 1,30,30 | 2,73,57 | — |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 11 | 10 | — |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | 11 | • 23 | — |
| 41 | வருவாய்த் துறை | 54 | 7,37 | — |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 37 | 85,36,68 | — |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | 36 | 2 | — |
| 44 | சிறு தொழில்கள் துறை | 3 | 61,99 | 9,82 |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 41 | 6,20,39 | — |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 2,20,45 | — | — |



| வ. எண் | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 1 | — | — |
| 48 | போக்குவரத்துத் துறை | 3 | 2 | 14,14,97 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 3,71,47 | 3,96 | — |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 15,59,33 | — | — |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 406,40,52 | — | — |
| | **பெரு மொத்தம்** | **655,52,73** | **634,87,04** | **620,52,92** |

முற்பகல் 10-45

## 7. வரவு-செலவுத் திட்டம், 2008-2009, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி. உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் 30 நிமிடங்கள். இப்போது நேரம் 10-45.

***திரு. கோ. அரி:** வீழ்ந்துபட்ட தமிழகத்தை 2001-ல் வீறுகொள்ளச் செய்து இக்கட்டான நேரங்களில் மங்கையர்களுக்கு வருகின்ற துணிச்சல் சிங்கத்திற்குக்கூட வராது என்ற காலக் கவிஞன் கண்ணதாசனின் கூற்றுக்கு நேராகி,

“ஆன முதலில் அதிகம் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப்-போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு”

எனும் ஔவை பெருமாட்டியால் தனி மனிதனுக்கு சொல்லப்பட்ட இந்த எச்சரிக்கை வாக்கிற்கு இந்த நாடு 2001—ல் இலக்காகி, வருவாய் இழந்து, செலவு அதிகமாகி பொருளாதாரத் தேக்க நிலை உருவாகியபோது, அனைத்துத் துறைகளையும் முதன்மையாக்கி, தமிழகத்தை முதன்மையாக்கிய எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி என் உரையைத் துவக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

பொருள் சேர் வழி தெரிந்து மேலும், வகைப்படுத்தி, வந்த பொருளைக் காத்து, காத்தவற்றை வகுத்து, செலவு செய்வது நல்லரசு என்றார் வள்ளுவர். இன்றைக்கு இந்த மன்றத்தில் தீட்டப்படும் அனைத்துத் திட்டங்களையும் இயற்றியவராக, இயற்றியதைப் பெருக்கியவராக, பெருக்கியதைக் காத்தவராக, காத்து வகுத்து வரையரை செய்தவராக மாண்புமிகு புரட்சித் தலைவி இருந்தார் என்பதை நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) நிதி எனும் நீர் அரசு எனும் ஏரியில் வருவாயாக இல்லையென்றால், அரசும் வறண்டு ஆண்டியும் மடிவான். அதனால் நிதி எனும் நீர் வரவுக்குத் தடையாக இருந்த மண்டிக்கிடந்த வீண் செலவு எனும் புதர்களைக் களைந்து அதில் வாசம் செய்த நச்சரவுகளைக் கொன்று சீரான, உபரியான வரவுகளை அரசு எனும் ஏரி மடைக்குத் திறந்த வெள்ளமாய் பாய்ச்சியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் கண்ட திட்டத்தில் இன்றைக்கு ஆட்சியாளர்கள் திட்டம் தீட்டுவதை மக்கள் மன்றம் அறியும். 'பொருளற்ற பாட்டுக்களை அங்கு புத்தமுது என்றனர், கைத்தாளம் இட்டனர்.' இந்தப் புரட்சி வரிகள் 2008-2009 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் சிலரின் நிலைப்பாட்டினை உரைக்கிறது. 18.75 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி முறை அறிவிப்பு. செம்மையாக விளையும் நிலத்தை சிறப்புப் பொருளாதார மண்டலம் என அறிவித்துவிட்டு இந்த அரசு செம்மை நெல் சாகுபடி முறை அறிவிப்பது விந்தையானது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்கு, 2006-2007 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.201.56 கோடி ஆகும். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் வெறும் ரூ.152 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. 'காடு விளைந்தென்ன



மச்சான் நமக்கு கையும் காலுந்தானே மிச்சம்' என்ற வரிகளுக்கு இன்னும் இலக்காகி இருக்கும் விவசாயிகளுக்கு அதிக நிதி ஒதுக்குவதில் இந்த அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது? விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்குக் கருவறை தொடங்கி கல்லறை வரை சமூகப் பாதுகாப்பை உறுதி செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் விவசாயிகள் அதை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறார்கள்.

"ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்."

மழை என்னும் வருவாய் வளம் குன்றி விட்டால், உழவரும் ஏர் கொண்டு உழமாட்டார் என்ற தெய்வ வாக்கினை உணர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2006 ஆம் ஆண்டுகளில் மழைநீர் சேமிப்பிற்காக ரூபாய் 26 கோடி செலவில் 8,833 பண்ணைக் குட்டைகள் அமைத்தார். அதன் பலனாக தமிழகத்தின் நிலத்தடிநீர் மட்டம் உயர்ந்து இருப்பதை அறிவியல் அறிஞர்கள் மகிழ்ச்சியுடன் அறிக்கை தருகிறார்கள். ஆனால், இந்தத் திட்டம் குறித்து இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதும் கூறப்படவில்லை. நதி இணைப்பு, தீபகற்ப ஆறுகள் இணைப்புக்கு இந்தியாவில் முதன்முதலில் குரல் கொடுத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் ஆட்சிக் காலத்தில் குண்டாறு நதியுடன் மகாநதியை இணைப்பது குறித்து செயல் திட்டம் வகுத்து மைய அரசின் அனுமதிக்கு விண்ணப்பித்தபோது, அன்றைக்கும் இன்றைய ஆட்சியாளர்கள் பங்கேற்றிருக்கும் மைய அரசு பாராமுகமாய்த்தான் இருந்தது. இன்றைக்கும் அப்படியே இருப்பதை இந்த மாமன்றம் உணர்ந்துள்ளது.

முற்பகல் 10-50

தமிழகக் கல்வி வரலாற்றில் திட்டம் தீட்டி ஏழைக் குழந்தைகளைப் பள்ளிக்கூடம் பக்கம் வரவழைத்தபோது, தட்டேந்தி குழந்தைகளைப் பிச்சைக்காரர்களாக ஆக்கும் திட்டம் என்று ஏகடியம் பேசியவர்கள், வாய் பொத்தி இத்திட்டத்தில் மேலும் ஒரு முட்டை என்று மூச்சுவிடும் நிலையை நாடு அறியும். தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்களால் தொடங்கப்பட்ட சத்துணவுத் திட்டம் இன்றைக்கு இந்தியா முழுவதும் (மேசையைத் தட்டும் ஒலி) மைய அரசால் அறிவிக்கப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு அம்மா

அவர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்று முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கியதோடு மட்டுமல்லாமல், குறித்த காலத்தில் மாணவ மாணவிகள் பள்ளி சென்று வர இலவச மிதிவண்டி தந்து, மாணவச் செல்வங்களின் கல்விப் பயணத்திற்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் பள்ளிக் கல்விக்காக 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 4,348.1 கோடியை ஒதுக்கினார்கள். ஆனால், இன்றைய நிதிநிலை அறிக்கையில் வெறும் ரூபாய் 4,110 கோடி என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் உயர் கல்வி வளர்ச்சிக்காக ரூபாய் 741.77 கோடியை ஒதுக்கினார்கள். ஆனால், உயர் கல்விக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் மொத்த ஒதுக்கீடு எவ்வளவு என்பதுபற்றி தெளிவான விளக்கம் இல்லை.

மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில், 2005-2006 ஆம் ஆண்டில் இந்தத் துறைக்கான ஒதுக்கீடு புரட்சித் தலைவி அம்மாவால் ஒதுக்கப்பட்டது ரூபாய் 1652.24 கோடி. இவற்றையும் குறைத்து ரூபாய் 1,487 கோடி என்று கூறப்பட்டுள்ளது.

வான் உயர்ந்து நின்று, வள்ளல் அம்மாவின் மக்கள் சேவையைப் பறைசாற்றும் சென்னை அரசுப் பொது மருத்துவமனையை நாடே அறியும். ஊர்ப்புற சுகாதார அமைப்பு நிலையங்களில் அடிப்படைக் கட்டமைப்பை ஒருங்கே உருவாக்கி, சிசு மரணம் அறவே நீக்கி, தரமான மகப்பேறு சிகிச்சையைப் பெறும் உயர்ந்த நிலையை உருவாக்கியவர் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு கிராமப்புற, நகர்ப்புற, ஏழை எளிய மக்கள் நன்றியோடு, வாஞ்சையோடு நினைத்துப் பார்க்கிறார்கள். இதுகுறித்து எந்தவிதமான தொடர் செயல்பாடும் இந்த நிதியிலை அறிக்கையில் இல்லை.

'இருட்டிலே வாங்கினோம், இன்னும் விடியவே இல்லை' என்ற கவிதையை தமிழகத்திலே 2001-லே பொடிப் பொடியாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி). இருண்டு கிடந்த தமிழகத்தில் சாதனைகளால் அணையா விளக்கை ஏற்றியவர்; மின்சாரமும் தனது பாதையில் சீராக ஓடியது.



தமிழகமெங்கும் வெளிச்ச வெள்ளம், தமிழர்கள் அடைந்தனர் மகிழ்ச்சி உள்ளம். இந்த அரசு பதவியேற்ற நாளிலேயே தமிழகம் மகிழ்ச்சியால் இருண்டது. இன்னும் விடியவே இல்லை. இதைச் சொன்னால், செவிமடுப்பதேயில்லை. கேட்டால் அவர்கள் அப்போது திட்டம் தீட்டவில்லை என்கிறார்கள். மின்சாரத்தையும் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்று சொன்னாலும் சொல்வார்கள். தமிழகத்தில் எந்த நேரத்தில் எதுவரும் என்ற கேள்விக்கு, பேருந்து வராது, பால் வராது, உணவுக் கடையில் அரிசி வராது, மின்சாரமும் வராது, எதுதான் வரும்? டாஸ்மாக் கடையில் இந்த நாளில், இந்தச் சரக்கு, இந்நேரம் வரும் என்ற பதில்தான் வருகிறது.

எந்த நாட்டிலும் இல்லாத கூத்து. தொழிலாளர்களின் விடுமுறை நாளாம் ஞாயிற்றுக் கிழமையை வேலை நாளாக ஆக்கிய பெருமை மின் துறையைச் சாரும். பலவகைகளிலும் தமிழகம் இன்று இருண்டு கிடக்கிறது என்பதை நாடே அறியும். ஆனால், ஆள்வோருக்குக் கோபம் வருகிறது. தினம், தினம் தமிழகத்தில் நடைபெறும் கொலை, கொள்ளைகளால், உணவுக் கடத்தல்களால், விலைவாசி உயர்வால், ஏழைக் குழந்தைகளுக்கு உணவாக, உயிர் அமுதாக உள்ள பால் விலை உயர்வால், இயற்கை இடர்களை விரைவாகக் களையாமல். போதாக் குறைக்கு மின்னொளி இல்லாமல் இருண்டு கிடக்கிறது. சொன்னால் ஜோதி வந்துவிட்டதாம், இனி இருள் அகலுமாம். ஜோதிக்கே வெளிச்சம் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலே காற்றாலையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின் திறன் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி. இந்த அரிசியின் நெடும் பயணம் குடிசையை நோக்கி அல்ல, நிதி கேட்டு அதிகார மையங்களின் படையோடு நீண்ட பயணத்தைச் சரக்கு இரயிலில், சுமையுந்துகளில் மூட்டை மூட்டையாகச் சொகுசுப் பயணம் செய்து, அண்டை மாநிலம் செல்வதை அன்றாடம் செய்தித் தாள்களிலே அறிகிறோம். பெயருக்காக, ஊருக்காக இரண்டு ரூபாய் அரிசி, ஆனால், யாருக்காக அன்றாடம் கடத்தப்படுகிறது? பொது விநியோகத் திட்டத்தில் ஏகபோகக் குளறுபடி உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் பொதுமக்கள் நியாயவிலைக் கடைக்குச் சென்று அரிசி கேட்டபோதெல்லாம் ரூபாய் 3.50-க்கு தரமான அரிசி எப்போதும் கிடைத்தது. ஆனால், இன்று விலை குறைத்து வழங்குகிறோம் என்று சொல்லும் இந்த அரசு, தரமான

அரிசியை வழங்குகிறதா என்றால், இல்லை. அரிசி கடத்தப்படுகின்ற செயல்களுக்குக் கடுமையான நடவடிக்கை எடுத்து அதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பழைய அட்டைகளை (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பழைய அட்டைகளைப் புதுப்பித்தல் தொடர்பான கடினமான பிரச்சினைகள் திறம்பட சமாளிக்கப்பட்டு, விரைந்து குடும்ப அட்டைகள் வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்ததால் மாண்புமிகு அம்மா அவர்களால் 1.88 கோடி குடும்பங்கள் உடனடியாகப் பலன்பெற்றன. இன்றைக்கு குடும்ப அட்டை பிரச்சினை பெரும் பிரச்சனையாக ஆக்கப்பட்டுள்ளது. புதிய அட்டை பெறுவதிலும், புதுப்பிப்பதிலும் மகா குளறுபடிகள். மக்கள் தவியாய்த் தவிப்பதை இந்த அரசு இன்னும் கண்டும் காணாமல் உள்ளது. குடும்ப அட்டை விரைவில் கிடைத்திட, விண்ணப்பித்தவுடன் ஆய்வு செய்து உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

*முற்பகல் 10-55*

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் அவ்வப்போது நடைபெறும் விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுப்பதற்காக நடமாடும் விபத்து முதலுதவி வண்டியுடன் சிகிச்சைக் கூடங்களும் அமைக்கப்பட்டன. இதனால் உடனடியாக தரமான சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர்கள் காப்பாற்றப்பட்டன. இத்திட்டம்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான குறிப்பும் இல்லை. 10 கோடி ரூபாய் விபத்து தடுப்புப் பணிக்காக என்றால் இதற்கான பணி விவரம் என்ன என்பது இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. நெடுஞ்சாலையையொட்டி மாவட்ட, வட்ட, ஒன்றிய நகரங்களில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைகளில் அனைத்து கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட விபத்து சிகிச்சைப் பகுதி உடனடியாக அமைத்திட இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வப்போது மாறிவரும் பருவகால மாற்றத்தால் வேதனையை மட்டும் விளைச்சலாகப் பெறும் விவசாயிகள் பயிர் காப்பீடு 50 விழுக்காடு என்கிறது இந்த அரசு. 100 விழுக்காடு கடன் வாங்கி பயிர் செய்பவனுக்கு இழப்பின்போது 50 விழுக்காடு தருவது என்பது



அநீதியாகும். விவசாயம் இந்த நாட்டின் தலைமைத் தொழிலாகும் என்பதை நாம் அறிவோம். 100 விழுக்காடு பாதுகாப்பு தருவதுதான் சிறந்த பாதுகாப்பு என்பதை அரசு உணர வேண்டும். இதை மாண்புமிகு அம்மா அவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் விவசாயிகளுக்காக உறுதி செய்தார்கள்.

உடல் நல ரீதியால், பொருளாதாரம் இன்மையால் திருமணம் நடைபெறாத ஆண்களும், பெண்களும் சமூகத்தில் ஆதரவற்றவர்கள் ஆவர். இன்றைக்கு அவர்கள் சார்ந்திருக்கும் சமூக, குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில்கொள்ளாமல் மாதந்தோறும் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீட்டுமனைப் பட்டா வழங்குகிறோம்; அவ்வப்போது விழாக்கள் பெருமக்கள் முன்னிலையில் நடைபெறுகிறது என்பதை செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம். ஆனால், உண்மையில் தன்னுடைய சொந்த நிலத்திற்கும், மனைக்கும் பட்டா வாங்குவதற்குக்கூட இன்றைக்கு மக்கள் படும்பாடு சொல்லி மாளாது. ஆண்டுகள் இதில் அலட்சியமாகக் கடந்து ஓடுகின்றன. பொறுப்பற்ற வருவாய் நிர்வாகத்தால் வாடி வதங்குகிறார்கள் பொதுமக்கள். இந்த நிலை அகற்றப்படவேண்டும்.

தமிழ் செம்மொழி நிலையைப் பெற்றபிறகு தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள வாகன சுங்கச் சாவடிகளில் Lane Entrance Board, தட நுழைவு அறிவிப்புப் பலகைகள் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்பட்டிருப்பதை தமிழக அரசு ஏன் கவனிக்கவில்லை? எங்கும் தமிழ், எதிலும் தமிழ் வாசகம் எங்கே? ஆனால், எங்கே தமிழ் என்று மட்டும் கேட்கிறார்கள். உங்களுக்கு இணக்கமாக இருக்கும் மத்திய அரசு, நீங்கள் பங்கெடுத்துள்ள அரசு மத்தியில் தமிழை ஆட்சிமொழியாக்க ஏன் முனைப்புக் காட்டவில்லை. இது குறித்து புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்கூட குரல் கொடுத்தார்கள். அன்றைக்கு செவிசாய்க்காத மைய அரசு இன்றைக்கும் ஏன் செவிசாய்க்க மறுக்கிறது? ஆட்சிமொழித் தொடர்பில் ஏன் இந்தச் சுணக்கம் என்று தமிழர்கள் கேட்கிறார்கள். மத்தியில் இப்படி என்றால் மாநிலத்திலே அண்மையிலே இரண்டு நாளைக்கு முன்னாலே வெளியிடப்பட்ட அரசாணை 6 சதவிகித விழுக்காடு அரசாணை, ஆங்கிலத்திலே வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழக அரசுப் பேருந்துகளில் கருவியினால் வழங்கப்படும் பயணச் சீட்டுகள் ஆங்கிலத்திலேதான் உள்ளன. தமிழகத்தில் ஆட்சிமொழி எது தமிழா, ஆங்கிலமா என்பதை இந்த அரசு இந்த நாட்டு

மக்களுக்கு உணர்த்த வேண்டும். செம்மொழி நிறுவனத்திற்கு நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டபிறகும் நிறுவனம் எங்கே செயல்படுகிறது? நிறுவனத்தின் செயல்பாட்டில் பலன் என்ன என்பதைப் பற்றி இந்த அரசு மக்கள் மன்றத்தில் விவாதிக்கவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் *513* இலட்சம் ரூபாய் செலவில் திருப்பாற்கடலிலிருந்து அரக்கோணம் வழியாக Pipe line மூலமாக திருத்தணி நகர மக்களுக்காகக், குடிநீர் சப்ளை செய்வதற்கு ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டு, அன்றைக்கு டெண்டர் போடப்பட்டது. ஆனால், இன்றளவிற்கும் அதனுடைய செயல்பாடுகள் இல்லை. அந்த டெண்டர் எந்த நிலையில் இருக்கிறது என்ற அறிவிப்பும் இல்லை. உடனடியாக ரூ.*513* இலட்சம் செலவில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த அந்தக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தி, திருத்தணி நகர மக்களுடைய குடிநீர் பிரச்சினையைத் தீர்த்துவைக்க இந்த அரசு முன்வர வேண்டும். மழைக் காலங்களில் திருத்தணி பைபாஸ் சாலையில் தண்ணீர் அதிகமாக நிற்கின்ற சூழ்நிலையில், அது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுமார் ரூ.*73* இலட்சம் அதற்காக நிதி ஒதுக்கினார்கள். திருப்பதியில் இருந்து வரும்போது திருத்தணி நகருக்குள் போக முடியாது. சென்னையிலிருந்து வரும்போது திருத்தணி நகருக்குள் போகமுடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. அன்றைக்கு அதனை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கவனத்திற்குக் கொண்டுசென்றபோது, உடனடியாக *73* இலட்சம் ரூபாய் அன்றைக்கு ஒதுக்கினார்கள். ஆனால், இன்றைக்கு அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப திருத்தணி நகரத்தில் உள்ளூர் பேருந்து நிலையம் ஒன்றும், வெளியூர் பேருந்து நிலையம் ஒன்றும் அமைக்க இந்த அரசு முன்வரவேண்டும்.

அதேபோல திருவள்ளூரிலிருந்து மணவாளநகர் வழியாக ஸ்ரீபெரும்புதூருக்கு அதிகமான பேருந்துகள் இயக்கப்படவேண்டும். இன்றைக்கு ஸ்ரீபெரும்புதூர் தொழிற்கூடங்கள் அதிகமாக இருக்கின்ற ஒரு பகுதியாகும். தொழிற்கூடங்கள் அதிகமாக வருகின்ற பகுதி. பல்வேறு முதலீடுகள் ஸ்ரீபெரும்புதூரில் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது அந்தப் பக்கமாக தொழிலாளர்கள், மாணவர்கள் தினந்தோறும் ஆயிரக்கணக்கிலே செல்கிறார்கள். திருவள்ளூரிலிருந்து மணவாளநகர் வழியாக ஸ்ரீபெரும்புதூர் செல்வதற்குப் போதுமான பேருந்து வசதி இல்லை. தினந்தோறும் பொது மக்கள்,



தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் பேருந்தினுடைய மேற்கூரை மீது பயணம் செய்யக்கூடிய ஓர் அவல நிலை இருக்கிறது. உடனடியாக அந்தப் பகுதியில் அதிகமாக அரசுப் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-00*

அதைப்போல திருவாலங்காடு ஒன்றியம், குப்பம்கண்டிகை கிராமத்திற்கும், கடம்பத்தூர் ஒன்றியம் மடத்துக்குப்பம் கிராமத்திற்கும் இடையே கொசஸ்தலை ஆறு ஓடுகிறது. இந்தக் கொசஸ்தலை ஆற்றிலே தரைப்பாலம் அமைத்தால் சுமார் *25*-க்கும் மேற்பட்ட கிராமப் பகுதி மக்கள் பயனடைவார்கள். அவர்கள் *20, 30* கிலோ மீட்டர் சுற்றித் தலைநகர் திருவள்ளூருக்குச் செல்வதையோ, அல்லது *70, 80* கிலோ மீட்டர் சுற்றிச் சென்னைக்கு வருவதையோ குறைத்து, அந்தக் கொசஸ்தலை ஆற்றிலே தரைப்பாலம் அமைத்தால் அப்பகுதி மக்கள் பயனடைவார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, திருவாலங்காடு ஒன்றியம், ஜாகீர்மங்கலம் ஊராட்சியிலே மழைக் காலங்களிலே ஆண்டாண்டுதோறும் நார்த்தவாடா என்னும் கிராமம் மழையாலே துண்டிக்கப்பட்டு தனித் தீவாக ஆகிவிடுகிறது. அண்மையிலேகூட நான் மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொண்டு பேசினேன். பிணம்கூட எடுத்துச் செல்லமுடியாத ஒரு சூழ்நிலை அந்த நார்த்தவாடா கிராமத்திலே இருக்கிறது. மழை நேரத்திலே இந்த அரசு boat விடுகிறது. அதற்குப் பின்னாலே அந்த கிராமத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறது. அப்பேர்ப்பட்ட அந்த நார்த்தவாடா கிராமத்திற்கு, ஜாகீர்மங்கலம் ஊராட்சியிலே பாலம் கட்டித் தருவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும்.

திருத்தணி அரசு மருத்துவமனையை தலைநகர் அரசு மருத்துவமனை அளவுக்குத் தரம் உயர்த்திட வேண்டும். திருத்தணி பகுதியிலே படித்த வேலையில்லாத இளைஞர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அப்பகுதியிலே தொழிற்பேட்டை அமைத்துத் தர வேண்டும். திருவள்ளூரிலே இருந்து திருவாலங்காடு வழியாக அரக்கோணம் செல்வதற்கு அதிகமான பேருந்துகளை இயக்க வேண்டும்.

திருத்தணியில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அன்றைக்குக்

கட்டமைப்பு வசதி இருக்கிறது என்று சொல்லி, திருத்தணியில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இப்போது இந்த அரசால் அது கிடப்பிலே போடப்பட்டு இருக்கிறது. உடனடியாக துரித நடவடிக்கை எடுத்து அதைச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சீவி சிங்காரித்துப் பூச்சூடி பொட்டிட்டு பட்டுடுத்தி புருவத்தில் மை தீட்டிக் கொண்டாலும் ஒரு முறையாவது நிலைக் கண்ணாடி முன் நின்று சரி பார்க்கத்தான் தோன்றும். அந்த நிலைக் கண்ணாடி தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இக்கண்ணாடி காலக் கண்ணாடி. இதைப் பார்த்து உங்களை மக்கள் நலப் பணியிலே ஒழுங்கு செய்துகொள்ள வேண்டும். இதைக் கேட்டு நிலைக் கண்ணாடியில் ரசம் இல்லை என்று கூறினால் முகம் இல்லாதவர்கள் அப்படித்தான் கூறுவார்கள். இந்த நிலைக் கண்ணாடியின் பிம்பம் இந்த அவையில் இப்பக்கம் இருந்துதான் வெளிப்பட்டது. குறைகளைச் சுட்டிக்காட்டினால் கோபப்படாதீர்கள். கோபப்பட்டால் பின்னால் பாவப்படுவீர்கள்.

"காற்றை யடைப்பது மனதாலே-இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையாலே,
சோற்றைப் புசிப்பது வாயாலே-உயிர்
துணி வுறுவது தாயாலே"

என்ற மகாகவியின் வரிகளில் வாசம் செய்யும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மக்கள் ஆட்சி மீண்டும் மலர (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்குச் சாதனைகளால் அன்னமூட்டிய தெய்வமணிக் கையின் ஆணைக்காட்டில் அனலை விழுங்குவோம் என்ற வரியை மாமன்றத்திலே இருத்தி, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதுபோல் 2008-2009 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை வெற்று அறிவிப்புகளின் விளம்பரத் தோரணம்; (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் விரோத மைனாரிட்டி அரசின் நிதிநிலை அறிக்கை என்று கூறி அமைகிறேன். நன்றி வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜ கண்ணப்பன்.



**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மண்ணின் பெருமையைத் தரணி எங்கும் பரவச் செய்த தன்னிரகற்ற, தன்னலமற்ற தலைவர் எங்கள் நெஞ்சம் நிறைந்த தலைவர், உலகெங்கும் வாழும் 9 கோடி தமிழக மக்களின் உத்தமத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) பல்லக்கு சுமந்தவனைப் பாதியிலே தொல்லைக்கு ஆளாக்கிவிட்டு பறந்தோடுகின்ற பலபேர் இருக்கிற இந்தக் காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நம்பி வந்திருக்கின்ற பல பேர்களை நட்டாற்றில் விட்டவர்கள் பலபேர் இருக்க (மேசையைத் தட்டும் ஒலி) தன்னை நம்பி வந்தவர்களை தன்னோடு இறுக அணைத்துக் கொண்டு கரை சேர்க்கின்ற தலைவனாக இன்றைக்கு இந்த மன்றத்திலே வீற்றிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் நாட்டின் முதல்வராக வீற்றிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல் குழப்பம்) நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இப்போது நீங்கள் பேசினீர்களே, யாரையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் யாரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் எத்தனையோ விளக்கங்களை நாங்கள் தரமுடியும் என்றாலும் எங்கள் முதலமைச்சர், உணவு அமைச்சர் எழுந்தவுடனே உட்காரச் சொல்லிவிட்டார். ஆளும் கட்சி சார்பிலே பேச ஆரம்பித்தவுடனே எதிர்க்கட்சியிலேயிருந்து கொறடா அவர்கள் எழுந்து நிற்பது சரியல்ல. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சிக்கு ஒரு நீதி, ஆளும் கட்சிக்கு ஒரு நீதி என்று இருக்கக்கூடாது. அவருடைய பேச்சை முழுமையாகக் கேட்டு விளக்கம் பெற வேண்டும் என்று நினைத்தால் அப்புறம் விளக்கம் பெறலாம்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** ஆகவே, அந்த நிலையை நடந்து முடிந்த நாடாளுமன்றத்தினுடைய மக்களவைத் தேர்தலிலும் நிரூபித்துக்காட்டியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி பலவேறு கோணங்களிலே, பல பேர் விமர்சித்திருக்கிறார்கள். எதிர்த்தரப்பிலே இருக்கிற நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, தோழமைக் கட்சிகளைச் சார்ந்த நம்முடைய தலைவர்கள் எல்லாம் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக, விருப்பு, வெறுப்போடு செயல்படுகின்ற தலைவர்களும் சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். நான் யாரையும் குறை சொல்ல வரவில்லை.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டிலே, ஜனநாயகத்தின் நான்காவது தூணாக இருக்கின்ற பத்திரிகைகள் என்ன சொல்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே எண்ணிப் பார்க்கின்றேன். அதற்கு முன்னாலே இந்த நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்கு உவந்தளித்த இனிய பண்பாளர் இனமான பேராசிரியர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் சுற்றிச்சுழன்று பணியாற்றி, உள்ளாட்சிக்கு நல்லாட்சி ஏற்படுத்துகின்ற நம்முடைய அன்புமிக்க தளபதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆற்றலே உருவான அமைதியின் திருவுருவம் ஆற்காட்டார் என்ற அடைமொழியோடு அமர்ந்திருக்கிற அருமை அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்த மன்றத்திலே இருக்கிற அனைத்து உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்திரிகைகள் என்ன சொல்கின்றன, Hindu பத்திரிகை இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்கின்றபோது, 'This budget focuses on farmers, women'. இது விவசாயிகளைப் பற்றியும் பெண்கள் நலன் பற்றியும் முக்கியத்துவம் தருகின்ற பட்ஜெட் என்று சொல்கிறது. இந்திய நாட்டினுடைய நிதியமைச்சர் பொருளாதாரச் சிந்தனையாளர், நம்முடைய மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுகின்றபோது, 'it will accelerate overall development; (Interruption) It will accelerate overall development'- ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிவகுக்கின்ற பட்ஜெட் என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



அடுத்ததாக, நம்முடைய தினமலர் பத்திரிகை சொல்கிறது. 'வரியே இல்லாத பட்ஜெட்' என்று சொல்கிறது. 'உபரி பட்ஜெட்' என்று தினமணி சொல்கிறது; தினத்தந்தி சொல்கிறது. இப்படி பல பத்திரிகைகள் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால், குற்றம் சொல்ல வேண்டும்; குறை சொல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள், அவர்கள் வேண்டுமென்று சொல்லவில்லை; சொல்ல வேண்டுமென்பதற்காகச் சில குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் எங்களுடைய கருத்து. ஆகவே, எங்களைப் பொறுத்தமட்டிலே இந்த நிதிநிலை அறிக்கைமீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்தாக நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், bridging the gap between the haves and the have-nots என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். ஏற்றத்தாழ்வுகளைச் சீரமைக்கின்ற ஒரு நிதிநிலை அறிக்கை. உயர்ந்த வருமானம் உள்ளவர்களுக்கும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் இடையிலே இருக்கின்ற அந்த ஏற்றத்தாழ்வினைச் சீரமைக்கின்ற ஒரு நிதிநிலை அறிக்கையாகத்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த அறிக்கையைத் தந்திருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே சொன்னார்கள். ஏனென்றால் முதலிலே இவர்களுடைய குற்றச்சாட்டே மின்சாரம்தான். மின்சாரத்தைப் பற்றி நானும் ஓரளவுக்குத் தெரிந்தவன். அருமை அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் இந்தத் துறையிலே மிகவும் அனுபவசாலி. ஆகவே (குறுக்கீடுகள்) இந்த மாதிரி சிரிப்பது, நக்கல், நையாண்டி எல்லாம் வேண்டாம். என்ன பேசுகிறேனோ, அதற்குப் பதில் பேசுவதாக இருந்தால் பேசலாம். நானும் 5 வருடங்கள் மூன்று துறைகளைப் பார்த்தவன். தயவுசெய்து கொஞ்சம் அமைதியாக இருந்து கேளுங்கள். பதில் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு என்ன? 8.5 கோடி யூனிட்டுகள்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பயன்படுத்தப்பட்ட மின்சாரம். இன்றைக்கு இரண்டாண்டு காலத்திலே 1.5 கோடி யூனிட்டுகள் அளவிற்கு மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இருபதாயிரம் கோடிக்கு தொழில்கள் வந்திருக்கின்றன. வருடத்திற்கு 600 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. ஓராண்டுக்கு 600 மெகாவாட் என்று இரண்டு ஆண்டுகளுக்கு 1,200 மெகா வாட் மின்சாரத் தேவை கூடியிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகளுக்கு அனுமதி இல்லை. உட்காருங்கள்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** ஆகவே இப்போது மின்சாரத் தேவை என்பது அதிகரித்திருக்கிறது. தொழில்கள், புதிய கட்டடங்கள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள்மூலமாக தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி காரணமாக, 1,200 மெகாவாட் மின்சாரம் இன்றைக்கு தமிழ்நாட்டிலே அதிகம் தேவைப்பட்டிருக்கிறது. இந்த மின்சாரத்தை உடனடியாக உற்பத்திச் செய்ய முடியுமா? (குறுக்கீடு) திரு. விசுவநாதன், எழுந்திருக்கிறார். இப்படி மின் தட்டுப்பாடு ஒரே நாளிலே வந்துவிடுமா? கடந்த 5 ஆண்டுக் காலத்திலே நீங்கள் வெறும் 350 மெகா வாட் மின்சாரத்தைத்தான் உற்பத்திச் செய்தீர்கள்.

முற்பகல் 11-10

என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது. நம்முடைய மின் துறையிலேயிருந்து பெற்றுத்தான் இதை நான் பேசுகிறேன். 350 மெகாவாட் மின்சாரத்தைத்தான் நீங்கள் ஐந்தாண்டுக் காலத்திலே உற்பத்திச் செய்திருக்கிறீர்கள். இந்தத் தேவை இன்றைக்கு 1,200 மெகாவாட் அளவுக்கு அதிகரித்திருக்கிறது. இந்த ஆட்சி வந்த பிறகுதான் மேட்டூரிலே 600 மெகவாட், வட சென்னையிலே 600 மெகாவாட், உடன்குடியிலே 1,500 மெகாவாட், நம் தூத்துக்குடியிலே 1,000 மெகாவாட் என்று பல திட்டங்கள் போடப்பட்டு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக இந்தத் திட்டங்கள் எல்லாம் செயலுக்கு வருவதற்கு இன்னும் மூன்றாண்டு காலமாகும் ஆக, பற்றாக்குறை என்ன? கணக்கு இருக்கிறது. நான் சொல்கிறேன். ஏனென்றால், உங்கள் குற்றச்சாட்டாக, வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. மின்சாரத்தைத்தான் சொல்லியிருக்கிறீர்கள். வேறு என்ன சொல்ல முடியும்? திருமணத்திற்கு உதவி செய்தீர்களா? கருவுற்றிருக்கிற பெண்களுக்கு உதவி செய்தீர்களா? இல்லை, மூன்று முட்டைகள் கொடுத்தீர்களா? அதெல்லாம் கிடையாது. ஓய்வூதியம் ரூ.400 கொடுத்தீர்களா? இதெல்லாம் இல்லை. எந்தத் திட்டத்தைச் செய்தீர்கள் ஐந்தாண்டுக் காலத்திலே? என்ன செய்தீர்கள் நீங்கள்? இந்த ஆட்சியிலே செய்யாத புதுத் திட்டங்கள் என்ன? எழுந்து



சொல்லுங்கள். உங்கள் ஆட்சிக் காலத்திலே செய்த திட்டங்களைச் சொல்ல முடியுமா? முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோடைக் காலத்திலே மொத்தம் நமக்குத் தேவை 9,550 மெகாவாட் மின்சாரம். இந்தக் கோடைக் காலத்திலே பகல் நேரத்திற்கு 9,000 மெகவாட் தேவை. ஏப்ரல், மே மாதங்களிலே உச்சகட்ட மின் தேவை 9,500 மெகாவாட். இதிலே புனல் மின்நிலையங்களிலே 1,850, அனல் மின்நிலையங்களிலே 2,870, கேஸ் டர்பைனிலே 520, மத்திய தொகுப்பிலேயிலிருந்து 2,400, அதுபோக தனியார் மின்நிலையங்களிலே I.P.Ps. 1,150.

மேலும், காற்றாலைகள். ஏப்ரல் மாதத்திலே காற்றாலைகள்மூலம் மின் உற்பத்தி கூடும். ஏனென்றால் தென்மேற்குப் பருவக் காற்று வருகிறபோது, wind force அதிகமாக இருக்கிறபோது, மின்சார உற்பத்தி கூடும். இப்போது 400 மெகாவாட். Eastern Region–லேயிருந்து பெறுவது 130 மெகாவாட். காயங்குளத்திலேயிருந்து 150 மெகாவாட். இந்த அளவிற்கு 8,900 மெகாவாட் இப்போது நம் கையிலே இருக்கிறது. ஆனால், பற்றாக்குறை எவ்வளவு வரும்? 600 மெகவாட்டிலிருந்து 650 மெகாவாட் வரும். அதற்கு என்ன ஏற்பாடு? வெளி மாநிலங்களிலேயிருந்து கொள்முதல் செய்யத் திட்டமிட்டதிலே 100 மெகாவாட். அதாவது கேரளம், காயங்குளம் மற்றும் B.S.E.S.–லேயிருந்து 100 மெகாவாட் வாங்கப் போகிறோம். மின் மாற்று மூலம் கொள்முதல் செய்வது, அதாவது பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம், ஹரியானா போன்ற மாநிலங்களிலேயிருந்து 350 மெகாவாட். P.T.C. மூலமாக இமாசலப் பிரதேசத்திலிருந்து 200 மெகாவாட். ஆக, 9,550 மெகாவாட் ரெடி. வருகிற கோடைக் காலங்களில் உங்களைச் சமாளிப்பதற்கு, மின்வெட்டுத் தேவையைச் சமாளிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகளுக்கு அனுமதியில்லை.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது தாழ்ந்து கிடந்த தமிழகத்தைத் தலைநிமிரச் செய்வதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தை நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் துவக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூற்றாண்டு, அவருடைய தம்பி, முதன்மைத் தம்பி கலைஞர் அவர்கள் இந்த

நாட்டை ஆளுகின்ற நேரத்திலே வருகிற நூற்றாண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவைப் பற்றி தலைவர் கலைஞர் சொன்னார். 'ஏறுகின்றார் மேடையிலே என்றால் அது மகுடி நாதம், எழுதுகிறார் ஏட்டில் என்றால் அது தமிழர் வேதம்' என்று அண்ணாவைப்பற்றி அவர் சொன்னார். அப்படிப்பட்ட அண்ணாவினுடைய பிறந்த நாளை நம்முடைய தலைவர் அவர்கள் கொண்டாடுகிற ஒரு நல்ல செய்தியினை இங்கே அறிவித்திருக்கிறார் நம்முடைய நிதியமைச்சர். எங்களுக்கெல்லாம் ஒரு ஆசை இருக்கிறது. தலைவர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை இதே மன்றத்திலே தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது நாங்கள் கொண்டாட வேண்டும், இந்த நாடு கொண்டாட வேண்டும் என்பதுதான் அந்தப் பேரவா (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தந்தை பெரியாரின் கொள்கைகளை இந்த நாட்டில் பரப்புவதற்கு, சுய மரியாதைச் சிந்தனையை உருவாக்கியவர், தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் வைத்தவர், அந்த அண்ணாவின் நூற்றாண்டை நாம் அனைவரும் கொண்டாடுவோம் என்ற செய்தி மகிழ்ச்சியான செய்தி.

தமிழ்ப் புத்தாண்டு. தமிழ்ப் புத்தாண்டினுடைய முதல் நாள் தைத் திருநாள். உழவர்களினுடைய உற்சவ தினம், மே. திராவிட இயக்கத் தொழிலாளர்களின் உழைப்பு, மகிழ்ச்சி தினம் தை. இந்த இரண்டையும் சேர்த்தால் மேதை என்று சொன்னார்கள் தலைவர் கலைஞர் அவர்கள். ஆக 'மே'-வையும் 'தை'-யையும் சேர்த்து மேதை என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பாளர்களும், விவசாயிகளும்—யார் அந்த விவசாயி? கழனியிலே கால் பதிப்பவன். கல்லிலும், முள்ளிலும் நடப்பவன். தன் வயிறைக் காயப் போட்டுவிட்டு மற்றவர்களுக்காக உழைப்பவன். இந்த நாடு யாசிக்கக் கூடாது என்பதற்காக வயல்வெளியை பச்சைப் பசுமையாக்குபவன். அப்படிப்பபட்ட விவசாயிக்கு இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே தந்திருக்கிற திட்டங்கள் ஏராளம். அதைத்தான் கலைஞர் சொன்னார். பொங்கல் தைத் திருநாளை தமிழ் வருடத்தின் முதல் நாளாக அறிவித்தார். தமிழ்நாட்டின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றைக் காப்பாற்றுவதற்காகத்தான் இன்றைக்கு தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்திருக்கிறோம். முட்டுகின்ற மாட்டுக்கும் பொங்கல் உண்டு. அந்த மாடு பிடிக்க தோளைத் தட்டுகின்ற வீரனுக்கும் பொங்கல் உண்டு என்று சொன்னார் கலைஞர். அப்படிப்பட்ட வீரம் மிகுந்த நாளும்கூட அந்த நாள். ஆகவேதான், தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் தைத் திருநாள்



என்பதை இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருப்பது, இந்த நாட்டிலே மிகப் பெரிய மகிழ்ச்சியை உருவாக்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-15*

நம்முடைய செம்மொழியைப்பற்றிச் சொன்னார்கள். செம்மொழி என்றால் என்ன? தமிழ் செம்மொழி, இன்றைக்கு யார் காலத்திலே வந்திருக்கிறது? எத்தனையோ ஆட்சிக் காலம் வந்தன. தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேதான் இன்றைக்குச் செம்மொழி வந்திருக்கிறது. அதற்காக 76 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியிருக்கிறது. அந்த ஆய்வு மையத்திற்குத் தலைவர் கலைஞர்தான் தலைவராகப் பொறுப்பேற்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் கொண்டு வந்தீர்களா? முடியவில்லை. கொண்டு வந்ததை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாங்கள் தலைவரையும், தமிழையும் பிரித்துப் பார்ப்பது கிடையாது. தலைவர் கலைஞர்தான் தமிழ்; தமிழ்தான் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான்,

"கருப்பு சிவப்பு நிறக் கரை பொருத்தி,
வெளுப்பு நிற வேட்டி உடுத்தி,
மஞ்சள் துண்டைக் கழுத்திலே அணிந்து,
மன்றத்திலே அமர்ந்திருக்கும் பச்சைத் தமிழ்
என் இச்சைத் தமிழ் கலைஞர்"

என்றான் ஒரு கவிஞன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களையும், தமிழையும் நாங்கள் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. அந்த அடிப்படையிலேதான், உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழிக்கு, மிகப் பெரிய வரலாற்றை உருவாக்கித் தந்திருக்கிற தலைவன் நம்முடைய அன்புத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நாடு இன்றைக்குக் கண்டு கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

அடுத்ததாக, நம்முடைய வேளாண்மைத் துறை. இந்த நாட்டினுடைய நிதிநிலை அறிக்கையில், வேளாண்மையை மையப்படுத்தவேண்டும். இதுதான் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கோரிக்கையும்கூட. நம்முடைய மருத்துவர் ஐயா அவர்கள்கூட, அவர்களுடைய வரைவு பட்ஜெட்டில் சொல்கிறபோது, அவர் வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் தந்தார். அதைவிட ஒருபடி

மேலாக இப்போது தலைவர் கலைஞர் அவர்கள், வேளாண்மைத் துறைக்கு, பாசனத் துறை உட்பட பெரிய, பெரிய திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஏனென்றால், வேளாண்மைக்குப் பாசனம் அவசியம். அந்த இரண்டு துறைகளிலும் இருக்கிற திட்டங்களைப் பார்த்தால், இன்றைக்கு ஏறத்தாழ 7,800 கோடி ரூபாய்க்குமேலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் மறுக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆறுகளை எதற்காக இணைக்கிறோம்? தீபகற்ப நதிகளை இணைக்க முடியவில்லை; பல மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. தேசிய நதிகளை இணைக்க முடியவில்லை; அது தேசிய அளவிலே இருக்கிற பிரச்சினை. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டில், interlinking the rivers within the State. It is a model plan; it is a model project. தமிழகத்திற்கு மட்டுமல்ல; இந்தியாவிற்கே முன்னோடியான திட்டம், தமிழகத்தின் ஆறுகளை இணைக்கின்ற திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) பணம் ஒதுக்கியிருக்கிறீர்களே, plan போட்டீர்களா என்று ஒருவர் கேட்கிறார். முதலிலே ஒரு திட்டம் என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். இங்கே அறிக்கைகள் விடுகிறார்கள் பலபேர். நான் குறை சொல்லவில்லை; அறிக்கை விடுங்கள். ஒரு திட்டம் என்றால், முதலில் plan பண்ணவேண்டும். அதற்குப்பிறகு அதை investigation பண்ணவேண்டும். அந்த investigation–க்குப் பிறகு (குறுக்கீடுகள்) investigation செய்து, அதற்குப்பிறகு fund allocation; நிதி ஒதுக்கீடு. அதற்குப் பிறகு implementation, executing the project. இதிலே நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது; ஆய்வும் செய்யப்பட்டிருக்கிறது; implementation–ம் செய்யப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரியிலே கதவணை அமைத்து, கங்கையையும், வைகையையும் இணைத்து, குண்டாறு, வைப்பாறு வரை இணைக்கிறோம்; தாமிரபரணியை இணைக்கிறோம்; நம்பியாற்றோடு இணைக்கிறோம்; ரூ.369 கோடி செலவில். தாமிரபரணி ஆற்றிலே எவ்வளவு காலம் வெள்ளம் வந்திருக்கிறது? பல காலங்களில். அமராவதி ஆற்றை எடுத்துக்கொண்டால், 50 வருடங்களிலே, 32 வருடங்கள் வெள்ளம் வந்ததாக நம்முடைய கணக்குகள் கூறுகின்றன. ஆகவே, அப்படி வெள்ளத்தால் வருகிற நீரைத் தேக்கி வைத்து, வறுமையிலே இருக்கிற மக்களுக்கு, வாடிக் கிடக்கின்ற மாவட்டங்களுக்கு உயிர்க் காப்புத் திட்டமாக வந்திருக்கிற திட்டம்தான், இந்த மாநிலத்திலே இருக்கின்ற நதிகளை இணைக்கின்ற திட்டம் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)



மக்களாட்சித் தத்துவத்தைப்பற்றி நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஒன்று சொன்னார்; "மக்களாட்சி என்பது, மாட மாளிகைகளிலும், கூட கோபுரங்களிலும் வாழ்பவனுக்கு அல்ல; மாடு பிடிக்கின்ற, மாடு, ஆடு மேய்க்கின்ற மாயாண்டியும், மண் குடிசையிலே வாழ்கின்ற மன்னாரும், அந்தச் சுதந்திரத்தை அனுபவிக்கவேண்டும்; அதுவொரு சமத்துவப் பிரகடனமாக இருக்கவேண்டும்" என்று சொன்னார். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்குச் சுகாதார வசதிகள்; ஏழைகள் வீட்டிற்கு இன்றைக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்; கூழைக் குடிக்கக்கூடாது என்பதற்காக இன்றைக்கு இரண்டு ரூபாய்க்கு அரிசி; கடனிலே வாழக்கூடாது என்பதற்காக ரூ.7,000 கோடி தள்ளுபடி. இந்தத் திட்டத்தின்படிதான் இன்றைக்கு 60 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. யார் இந்தத் திட்டத்திற்கு முன்னோடி? தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அல்லவா முன்னோடி! (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற தலைவர், பிரச்சினை வருகிறபோது, இந்த U.P.A. Government, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் பிரச்சினை வருகிறபோது, இந்தியாவிற்கு எப்படி வழிகாட்டுவார் என்று கேட்பீர்கள்; நான் சொல்கிறேன், கேளுங்கள். ஒரு பெரிய நிர்வாகத்தை இந்தியாவிலே நடத்துகிறபோது, வருகிற பிணக்குகளைத் தீர்ப்பதற்கு, ஒரு மூத்த, முதிர்ந்த, பண்புள்ள ஒரு அரசியல்வாதி தேவை. அவர்தான் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இடதுசாரிகளுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் இணைப்புப் பாலமாக இருந்து, மதவாத சக்திகள் இந்த நாட்டின்மீது போர் தொடுத்து விடாமல், மதவாத சக்திகள் இந்த நாட்டிலே நுழைந்துவிடாமல், இந்திய நாட்டிற்கே பாதுகாப்பு அரணாக இருப்பவர் தலைவர் கலைஞர் என்பதை யாரும் மறுக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை இன்றைக்குத் தந்திருக்கிறார்.

முற்பகல் 11-20

அடுத்து, உள்ளாட்சித் துறை. உள்ளாட்சித் துறையை நீங்கள் எடுத்துக்கொண்டீர்களானால் அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்கள், குடிநீர்த் திட்டம். திரு. அரி சொன்னார், திருத்தணிக்கு குடிநீர் வேண்டும் என்று. கொடுக்க வேண்டியதுதான். இராமநாதபுரத்திற்கு வருஷம்பூராவும் கேட்டோமே, சுதந்திரம் அடைந்த காலத்திலேயிருந்து

கேட்டோமே. கிடைக்கவில்லையே! 661 கோடி ரூபாயில் மூன்று மாவட்டங்களுக்கு தண்ணீர். (மேசையைத் தட்டும் ஒலி) திட்டமும் போட்டு பணமும் ஒதுக்கி அடிக்கல்லும் நாட்டி 2009-ல் தண்ணீரும் வருமென்று அறிவித்தாகிவிட்டது. அதற்குமேலே என்ன? ஜப்பான் நாட்டு உதவியோடு ஒகேனக்கல் குடிநீர் திட்டம்—மஞ்சள் காவி படிந்த பற்களோடு அங்குள்ள மக்கள். எல்லோரும் ஒகேனக்கல், ஒகேனக்கல் என்று பேசினார்கள். ஆக, இந்தத் திட்டத்திற்கு ரூ.1,330 கோடிக்கு நிதி இருக்கிறது. ஜப்பான் நாட்டுக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்று பேசி வந்திருக்கிறார்கள். மெட்ரோ ரயில் திட்டம் வந்துவிட்டது. பணமும் வருகிறது. ஆக, பணம் இல்லாமல் எந்தத் திட்டமும் போடுகின்ற அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு அல்ல. பணத்தை வைத்துக்கொண்டு திட்டங்களைப் போடுகின்ற அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பற்றிச் சொன்னார் அவர். விபத்துகளைப் பற்றிச் சொன்னார். ஒரே நம்பரிலே phone பண்ணினால் எல்லா இடங்களுக்கும் மருத்துவ வசதி செய்கிற அளவுக்கு இன்றைக்கு நவீன முறையிலே திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார் தலைவர் கலைஞர். எவ்வளவு பணம் ஒதுக்கீடு தெரியுமா? உங்கள் காலத்திலே மருத்துவத் துறைக்கு கிட்டத்தட்ட ரூ.1,487 கோடி. ஆனால், இன்றைக்கு ரூ.2,741 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி)

தகவல் தொழில்நுட்பம். இரண்டு ஆண்டுகளில் எவ்வளவு தொழில். ரூ.21 ஆயிரம் கோடி, கிட்டத்தட்ட ரூ.19 ஆயிரம், 20 ஆயிரம் கோடி. எத்தனை நிறுவனங்கள், 1 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு நேர்முக, மறைமுக வேலைவாய்ப்பு. 5 வருடங்களில் எத்தனை தொழில் தொடங்கினீர்கள்? பட்டியல் போடுங்கள். நாளைக்குச் சொல்லுங்கள், பதில் சொல்லுங்கள் இன்னும் பேசுவார்கள் அல்லவா உங்கள் ஆட்கள். இரண்டு வருட காலத்திலே 2 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு, ரூ.20 ஆயிரம் கோடியில் திட்டங்கள். இன்றைக்கு தகவல் தொழில்நுட்பத்திலே 46 சதவிகிதம் நாம் முன்னேறியிருக்கிறோம், 46 சதவிகிதம் அதிகம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆட்சிக் காலத்திலே 14,400 கோடி. இப்போது 21 ஆயிரம் கோடி. 46 சதவிகிதம் அதிகம் நம்முடைய தலைவர் கலைஞர் ஆட்சியில் இரண்டு ஆண்டு காலத்திற்குள். ஆகவே, எந்தத் துறையிலே நாம் இன்றைக்குப் பின்தங்கியிருக்கிறோம்?



சேது சமுத்திரத் திட்டம். சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றி எல்லா தலைவர்களும் சொன்னார்கள். அ.தி.மு.க.-வும் சொன்னது. முன்னாள் முதலமைச்சரும் சொன்னார். டாக்டர் எம்.ஜி.ஆரும் சொன்னார். தலைவர் கலைஞர் அவர்களும் சொன்னார்கள். காமராஜரும் சொன்னார். எல்லோரும் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபொழுது—கிரகத்திலே நம்பிக்கை இருப்பவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். சிலபேர் ஜோதிடத்திலே நம்பிக்கை வைத்திருப்பார்கள். அங்கே கேது என்று ஒரு கிரகம் இருக்கிறது. அந்தக் கேது கெடுதல்தான் பண்ணிக்கொண்டேயிருக்கும். அந்தக் கேது உங்களுக்குப் பிடித்திருக்கிறது; அதனால்தான் உங்களுக்குக் காரியம் நடக்கவில்லை என்று ஜோதிடர்கள் சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிராக தமிழ்நாட்டில், இந்தியாவில் சில கேதுகள் இருக்கிறார்கள். அந்தக் கேதுகள் இருந்து கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் இந்தத் திட்டத்தை. சேதுவைக் கெடுக்கின்ற கேதுகள் இந்தியாவில் இருக்கிறார்கள், தமிழ்நாட்டிலும் இருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பொதுப்படையாகப் பேசுகிறார், உட்காருங்கள்.

**திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** அந்தக் கிரகங்கள் மிகச் சீக்கிரமே விலகும். சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும், நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, புதிய மாவட்டம். திருப்பூர் புதிய மாவட்டம். வேலூர் ஞானசேகரன், சத்துவாச்சாரி, சத்துவாச்சாரி என்றே சொல்லிக்கொண்டிருப்பார். சத்துவாச்சாரி உட்பட வேலூர் மாநகராட்சி வேறு. Software கம்பெனிகள் வருகிற அளவுக்கு பொருளாதார ரீதியாக அந்த மாநகர் இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்போது திருப்பூர் மாவட்டம். நிர்வாக வசதிக்காக தலைவர் ஆட்சிக்கு வந்தவுடனே அறிவித்தது அரியலூர் மாவட்டம். இந்த ஆட்சி செம்மையாக நடைபெறுகிறது. பட்டா கொடுக்கவில்லை என்று சொன்னார், என்ன பட்டா கொடுக்கவில்லை? இலக்கு 3 இலட்சம். நம்முடைய கம்யூனிஸ்ட் நண்பர்களுக்குத் தெரியும். 3 இலட்சம் பேருக்குக் கொடுக்க வேண்டும் என்பது இலக்கு. 3,98,000 பேருக்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்ன கொடுக்கவில்லை? 10 வருடங்கள் குடியிருந்தால் போதும் என்று இருந்தது. அதையும் இப்போது 5

வருடங்கள் என்று குறைத்தாகிவிட்டது அதைவிட என்ன? விலைவாசி. அதாவது, உலகளவிலே கச்சா எண்ணெயின் விலை உயருகிறது. டாலர் மதிப்பிலே கச்சா எண்ணெயின் விலை உயருகிறபொழுது பொருளாதாரப் பிரச்சினை வருகிறது. அதனால் டீசல் விலை உயருகிறது. அப்படியிருந்தும் போக்குவரத்துத் துறையிலே rate–ஐக் கூட்டியிருக்கிறோமா? 17,500 வண்டிகளிலே 10,000 ஓடாத வண்டிகளைத்தானே நீங்கள் நிறுத்திவிட்டுப் போனீர்கள்? தனியார்மயம் ஆக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு நீங்கள் செயல்பட்டீர்கள். தலைவர் கலைஞர் ஓர் அறிவிப்பு கொடுத்தார், நாங்கள் வந்தால் மீண்டும் அரசுடைமை ஆக்குவோம் என்று. நின்றுபோய்விட்டதே. *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்போது 10,000 வண்டிகள். கிட்டத்தட்ட 2 ஆண்டுகளில் போக்குவரத்துத் துறையிலே தாழ்தளப் பேருந்து, சொகுசுப் பேருந்து, Deluxe, Ultra Deluxe, Super Deluxe. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-25*

எத்தனைபேருக்கு வேலை கொடுத்தீர்கள் ஐந்து வருடங்களில்? வேலை நியமனத் தடைச் சட்டம். Employment Office–க்கெல்லாம் Seal வைத்தாகிவிட்டது. இன்றைக்கு யார், யாருக்கோ உதவி– விதவைகள் எத்தனை இலட்சம் பேர்; கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எத்தனை பேர், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி பணிப் பெண்கள் – நேரம் இருந்தால் இப்படி நிறைய பேசலாம். ஆசிரியர்களில் 46,000 பேர் தொகுப்பு ஊதியத்திலிருந்து காலமுறை ஊதியத்திற்கு மாற்றம்; புதிய ஆசிரியர்கள் 21,570 பேர் நியமனம்; புதிய பதவிகள் வேறு உருவாக்கியாகிவிட்டது, 7,979 புதிய ஆசிரியர் பதவிகள் தோற்றுவிக்கப்பட்டன. இப்படி எல்லா துறைகளிலும் பணி நியமனம் –V.A.O. கிட்டத்தட்ட 3,000 பேர். உதவிப் பொறியாளர்கள், மின்சாரத் துறை உட்பட எல்லா துறைகளிலும் போட்டாகிவிட்டது. ஏன் நீங்கள் போடவில்லை? படித்தவர்கள் எல்லோரும் வேலைக்கு வந்துவிட்டால் அவர்கள் குடும்பம் நன்றாக வந்துவிடும் இல்லையா, அதனால் நீங்கள் போட்டிருக்க மாட்டீர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இளைஞர்களுக்கு இனாம் கொடுக்கக்கூடாது. என்ன இனாம்? இனாம் என்பதல்ல, வாங்குகின்ற சக்தி இல்லாதவனைக் கைதூக்கி விடுகின்ற நிகழ்ச்சிதான் இந்தச் சலுகைகளே தவிர, இனாம் அல்ல. *(மேசையைத் தட்டும் ஒலி)* சில பேரால் வாங்க முடியாது. அவன்



பார்த்து, பார்த்து ஏங்குவான்; அப்பொழுதுதான் புரட்சி வெடிக்கும். அவனுக்கு ஒரு திருப்தியைக் கொடுத்துவிட்டோம் என்றால், சமுதாயம் சீரடையும். அதுதான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ராஜதந்திரம். *(மேசையைத் தட்டும் ஒலி)* வேலைவாய்ப்பின்மை இங்கு மாத்திரமா இல்லை, இந்தியாவிலே பாதி பேர், பல கோடி பேருக்கு வேலை கிடையாது. ஆனால் அதற்காகத் திட்டங்களை இன்றைக்கு – உடனடியாக எல்லோரும் அரசு வேலைக்கு போக வேண்டுமென்றால், போக முடியுமா பையைத் தூக்கிக்கொண்டு?– இப்போதே சம்பளமாக எவ்வளவு கொடுக்கிறோம், நம்முடைய வருமானத்திலே? அதனால் தனியார் துறைகளை ஊக்குவித்து அதன்மூலம் இன்றைக்கு இலட்சக் கணக்கிலே வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற தலைவர், தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நீங்கள் மறுக்க முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அங்கேயும் இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்கிறார். இட ஒதுக்கீடு எதற்காக கொடுக்கிறோம்? ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சிறுபான்மை மக்கள் உயர்ந்த பதவிகளுக்கு வர முடியாத காலம் இருந்தது. நாங்கள் எல்லாம் அமைச்சர்களாகின்றோம். எத்தனையோ பேர் எம்.எல்.ஏக்களாக ஆகியிருக்கிறோம். *(குறுக்கீடு)* கேளப்பா, அமைச்சர்களாக இருந்தோம், இன்றைக்கு எம்.எல்.ஏக்களாக இருக்கின்றோம், இத்தனை பேர் எந்தெந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இங்கே இருக்கிறவர்கள்–நீங்கள்தான் இருந்தீர்களே எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்? – நீங்கள் எல்லோரும் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்; அந்தப் பின்தங்கிய மக்களுக்காகப் பாடுபட்ட, முன்னுரிமைப் பெற்றுத்தர பாடுபட்ட தந்தை பெரியாரும், அண்ணாவும், தலைவர் கலைஞரும்தான் இட ஒதுக்கீட்டை முதலில் கொண்டு வந்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* கொண்டு வந்தார்களா, இல்லையா? யார் வருகிறோம் என்பது முக்கியமல்ல, அந்தச் சமூகம் இன்றைக்கு முன்னேறியிருக்கிறது.

அதைப்போல, தாழ்த்தப்பட்ட மக்களில் அருந்ததியர், ஏன் நரிக்குறவர்கள், அரவாணிகள், மன வளர்ச்சிக் குன்றியவர்கள், இப்படி எண்ணற்ற ஏழை மக்கள், ஆதரவற்றோர், அடித்தளத்திலே அமிழ்ந்துகிடக்கின்றவர்கள், இடுப்பு ஒடியப் பாடுபட்டு அடுப்பு எரிக்க முடியாமல் இன்றைக்குத் தவித்துக்கொண்டிருக்கிற எண்ணற்ற மக்களுக்கு உதவித் தொகைகள் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

'தசை திசு' ஒரு வியாதி. அதையும் கண்டுபிடித்து, அந்த வியாதிக்குட்பட்டால்கூட ஐநூறு ரூபாய் பண உதவி. இதைவிட

என்ன deep ஆகப் போக வேண்டும் என்கிறீர்கள் சமுதாயத்திலே? ரொம்ப deep ஆகப் போயாகிவிட்டது. கீழ்மட்டத்திலே இருக்கின்ற யாரையும் விடாமல் – குழந்தை பிறப்பு என்றால் மாதந்தோறும் ரூபாய் 1,000 வீதம் ஆறு மாதங்களுக்கு ரூ.6,000, பிறகு பால்வாடி, ஸ்கூல், இளங்கலைக் கல்வி வரை B.Sc., B.A., B.Com., வரை பட்டப்படிப்பு இலவசம், இப்போது இருக்கும் special fees ரத்து. அடுத்து பஸ் பாஸ், முதியோர் பென்ஷன், எல்லாம் கொடுத்தாகிவிட்டது. படிப்பதற்கும் கொடுத்தாகிவிட்டது. எல்லாம் கொடுத்தாகிவிட்டது. உடை கொடுத்தாகிவிட்டது. பிறகு வேறு என்ன சொல்கிறீர்கள்? இன்னும் என்ன திட்டம் வேண்டும்? சரி, தொலைநோக்குப் பார்வை. இரண்டு அம்சங்கள். இவை சமுதாய நலத் திட்டங்கள். பட்ஜெட்டுக்குத் தொலைநோக்குப் பார்வை என்ற ஒன்று இருக்கிறது. தொலைநோக்குப் பார்வையிலே என்ன எடுத்திருக்கிறார்கள் என்றால், இப்போது இருக்கின்ற இளைஞர்கள், இப்போது இருக்கிற சமுதாயம் வலிமையாக இருந்தால்தான் எதிர்காலத்தினுடைய இந்தியாவை நிர்மாணிக்க முடியும். அதனாலேதான் அவர்களை நாம் உருவாக்குகிறோம். இப்போதே நோஞ்சானாகப் போய்விட்டால், பிறகு எதிர்காலத்திற்கு எங்கே போவது? ஆகவேதான், சமூக நலத் திட்டங்களை உருவாக்கி அதன்மூலம் இளைஞர்களை, தாய்மார்களை, உழவர்களை, தொழிலாளிகளைச் சிறப்பாகக் கொண்டு வந்திருக்கிறோம். TESMA, ESMA போராட்டம், மக்கள் நலப் பணியாளர்கள் எத்தனை பேர், சிறையிலே கிடந்தார்கள். இன்றைக்கு இருக்கிறதா ஏதாவது?

தலைவர் கலைஞரைப் பற்றி ஒருவர் சொன்னார். "வெறுப்பாலும் விரோத உணர்ச்சியாலும் ஆட்சி நடத்தாமல், நட்பாலும், நாகரிக முறைகளாலும், ஜனநாயகப் பண்புகளாலும் ஆட்சி நடத்துகிறார்" (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியிலே ஆளுகிற காங்கிரசுக்குக் கோரிக்கை வைத்தால், உடனே சிண்டு முடிக்கிறார்கள். தலைவர் என்ன சொல்லியிருக்கிறார், நம்முடைய நிதி அமைச்சர் என்ன சொல்லியிருக்கிறார்? கடுமையான பாரத்தைச் சுமந்துகொண்டு கற்களும், முட்களும் நிறைந்த பாதையிலே எருதுகள் எப்படி மிகக் கடினத்தோடு செல்லுமோ, அதுபோல நாங்கள் செல்கிறோம். எடுத்ததெற்கெல்லாம் போராட்டம். சுக்கூசுக்கு ஒரு போராட்டம், கண்டதற்கெல்லாம் ஒரு போராட்டம், என்று தினமும் ஒரு போராட்டம் நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்காகத் தலைவர் யாரையும் ஏசவில்லை. பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஓர்



ஆட்சியை நடத்துவது என்பதில் பல தடைக் கற்கள் இருக்கின்றன. அதையெல்லாம் மீறித்தான் இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் செயலாற்றுகிறார்கள் என்பதைச் சொல்கிறேன். மைய அரசு, மற்ற மாநிலங்களுக்கிடையே பிரச்சினை வருகிறபோது அது பாலாறாக இருந்தாலும், முல்லைப் பெரியாறாக இருந்தாலும், காவிரியாக இருந்தாலும் பாராமுகமாக இருந்துவிடாமல் இந்த ஆட்சிக்குப் பக்கபலமாக இருக்க வேண்டுமென்று கேட்பதிலே என்ன தவறு? (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

உடனே, காங்கிரஸ் கட்சி உங்களுக்கு ஒத்துழைக்கவில்லை என்று சொல்கிறார்கள். என்ன ஒத்துழைக்கவில்லை? காங்கிரஸ் கட்சி ஒத்துழைக்காமலா, அன்னை சோனியா காந்தி அவர்கள் ஒத்துழைக்காமலா 35 ஆயிரம் கோடி ரூபாய்க்கு திரு. டி.ஆர். பாலு அவர்கள் ரோடு போட்டுக்கொண்டிருக்கிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) எங்கு பார்த்தாலும் நான்கு வழிச் சாலை, ஆறு வழிச் சாலை, எட்டு வழிச் சாலை. இப்போது எங்கு பார்த்தாலும் மைய அரசின் சார்பிலே பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. பல தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. ஆகவே, இப்படி இந்தத் திட்டங்களையெல்லாம் மைய அரசின் உதவியோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தலைவர் கலைஞர், பிரதம அமைச்சர் அவர்கள் வந்தால் வரவேற்பார்கள். பிரதமர் வந்தால் சிலபேர் ஊட்டிக்குப் போவீர்கள், கொடைக்கானலுக்கும் போவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்புறம், எங்கிருந்து நிதி வரும்? நான் சொல்கிறேன்... (குறுக்கீடு) யார் போனார்களோ, யாருக்குத் தெரியும். அதாவது, ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் யாரையும் அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உட்காருங்கள்.

**திரு. ஆர். எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வார்த்தை ஜாலம் என்று சொன்னார்கள். வார்த்தை ஜாலம் பட்ஜெட்டிலே கிடையாது. வார்த்தை ஜாலம் எதற்கு பட்ஜெட்டிலே? தலைவர் கலைஞரிடத்திலே வார்த்தை ஜாலம் உண்டு. எங்கே? சட்டமன்ற விவாதத்திலே சொல்வார். அதைப்போல திருமண நிகழ்ச்சிகளிலே சொல்வார். பொதுக்கூட்ட மேடைகளிலே பேசுவார். பல இடங்களிலே பேசுவார். அதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். ஒன்றே ஒன்று, வார்த்தை ஜாலம் என்பதற்கு. இங்கே

என்ன வார்த்தை ஜாலம் இருக்கிறது, இந்த பட்ஜெட்டிலே? நீங்கள் எடுத்துப் பாருங்கள். ஒரு வார்த்தை ஜாலமும் கிடையாது. ஒரு நிருபர் கேட்கிறார்; ஒரு எதிர்க்கட்சிப் பேச்சாளர் பேசுகிறார்—வார்த்தை ஜாலத்திற்கு ஒரேயொரு உதாரணம். அது இங்கேயல்ல, வெளியே சொன்னது—காற்றைக் கைது செய்துவிட முடியுமா என்று எதிர்க்கட்சிப் பேச்சாளர் ஒருவர் கேட்கிறாரே என்றார். "ஏன், புயலையே கைது செய்து, பொடா சட்டத்திலே, வேலூர் சிறையிலே போடவில்லையா" என்று கேட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) காற்றைக் கைது செய்துவிட முடியுமா என்று கேட்டதற்கு, இதுதான் வார்த்தை ஜாலம். வார்த்தை ஜாலம் என்றால், இதுதான் வார்த்தை ஜாலம்.

ஒரு கல்யாணத்திலே பேசும்போது சொன்னார், "சீர்வேந்தன்" என்று பெயர் இருந்தது. அதற்குச் சொன்னார், "சீர் கேள்; ஆனால், சீர் கேட்பதில் வேந்தனாக இருந்து விடாதே; அந்தக் குடும்பம் பாதித்துப் போய்விடும்" என்றார். இதுதான் வார்த்தை ஜாலம். இந்த வார்த்தை ஜாலத்திலா பட்ஜெட்டிலே இருக்கிற திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன ?

அடுத்து கல்வி. கல்விக்குச் சொல்லியாகிவிட்டது. மக்கள் நல்வாழ்வுத் துறை – பெரியார் நினைவு சமத்துவபுரம் – பெரியாரை பற்றிச் சொல்கிறபோது கலைஞர், "அவர் ஒரு போர் வாள். அந்த வாளின் வீச்சிலே புரோகிதம் அற்றுப்போகும்" என்று சொன்னார். "காட்டாற்று வெள்ளம் அவர். அந்த வெள்ளத்திலே பழைய பஞ்சாங்க வீடுகளெல்லாம் அடித்துக்கொண்டு போய்விடும்" என்று சொன்னார். அப்படிப்பட்ட பெரியாரின் பெயராலே, மீண்டும் சமத்துவபுரங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி, சமத்துவபுரங்களைக் கொண்டு வந்திருக்கிற தலைவர், நம்முடைய நீதித் துறைக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு 316 கோடி ரூபாய். நீதித் துறையை மதிக்கின்ற தலைவர். நீதித் துறையினுடைய தலைமை நீதிபதியை நேரில் சந்தித்துப் பேசி, மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசிய ஒரே முதலமைச்சர் தலைவர் கலைஞர்தான் நீதித் துறைக்கு மரியாதை கொடுத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற வளாகம். நாங்களெல்லாம் பெங்களூருக்குப் போகும்போது பார்ப்போம். "என்னய்யா, பெங்களூரிலே இவ்வளவு அழகா கட்டி வைத்திருக்கிறானே, பாரம்பரியமாக இருக்குமா? நம்முடைய தமிழ்நாட்டிற்கு எப்பொழுது வரும்? வெள்ளைக்காரன்



கட்டிய கோட்டையிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறோமே" என்று நினைத்துக் கொண்டிருந்தோம். இன்று நம்முடைய நெஞ்சத்தை அள்ளுகின்ற விதத்திலே, மிகப் பெரிய திட்டத்தைத் தீட்டி, நம்முடைய பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்கின்ற ஓர் அருமையான சட்டமன்ற வளாகத்தை, 200 கோடி ரூபாயிலே கட்டுவதற்காக, (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது எழுபத்தைந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, இப்படி பல காரியங்களுக்காக,... (மணியடிக்கப்பெற்றது) பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகளுக்கெல்லாம் time இல்லையா?

தமிழறிஞர்களுடைய நூல்கள் நாட்டுடைமை. நம்முடைய அயோத்திதாச பண்டிதர், செய்குத்தம்பிப் பாவலர், இப்படி நிறையச் சொல்லலாம். அதற்கு முன்னாடியிருந்த கி.ஆ.பெ., பரிதிமாற்கலைஞர், நிறைய பேருக்கு, தமிழறிஞர்களைக் காப்பாற்றுவதற்கு பலகோடி ரூபாய்.

சுனாமி பற்றிச் சொன்னார்கள். நீங்கள் கட்டியது 8 ஆயிரம் வீடுகள். நாங்கள் கட்டியது 32 ஆயிரம் வீடுகள், மறந்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சுனாமி பணத்தை நீங்கள் எங்கே செலவழித்தீர்கள்? என்னவோ, காங்கிரஸ் உறுப்பினர் சொன்னார் என்ற உடனே, பெரிய சந்தோஷத்திலே இருந்தீர்களே? இப்பொழுதுதான் முறையாக சுனாமிப் பணத்தைக்கொண்டு, ஆங்காங்கே தார்ச் சாலைகள், பாலங்கள், வீடுகள் கட்டப்படுகின்றன. மீனவர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

நீர்வள, நிலவளத் திட்டம். IAMWARM Project–ஐ யார் கொண்டு வந்தது? 2,547 கோடி ரூபாயிலே, இன்றைக்குப் பல துணை வடிநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காலிங்கராயன் கால்வாயை ஆழப்படுத்துகிறோம். கோவை மற்றும் ஈரோடு மாவட்டப் பகுதி மக்களுக்கு மகிழ்ச்சி. கரூர், திருச்சி மாவட்டங்களிலே, காவிரி, கொள்ளிடம் ஆறுகளிலே வெள்ளத் தடுப்பிற்காக 211 கோடி ரூபாய். என்ன இல்லை, இந்தத் பட்ஜெட்டில்? எல்லோருக்குமே இருக்கிறது. விவசாயிகளுக்கு இருக்கிறது, தொழிலாளிகளுக்கு இருக்கிறது. அரசு ஊழியர்களுக்கும் இருக்கிறது. 817 கோடி ரூபாய் கூடுதல் செலவு. அகவிலைப் படியை மத்திய அரசு உயர்த்தியவுடன் சொல்லிவிட்டார். உயர்த்தினால், அதற்கும் கொடுக்கப்படும் என்று சொல்லிவிட்டார், அந்த அளவிற்கு ஈடுகட்டிச் செய்வோம் என்று. இதைவிட என்ன?

நாங்களா அவர்களை உள்ளே தூக்கிவைத்து, ஒன்றே முக்கால் இலட்சம் பேரை, ஒரே நாளில் கையெழுத்துபோட்டு, வெளியே அனுப்பினோம்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இது ஜனநாயக அரசு. மக்களால் மதிக்கப்படுகின்ற அரசு. மக்கள் அரசு. ஆகவேதான், தலைவர் கலைஞர் அவர்கள் நிறைய பேசலாம். (குறுக்கீடு) நிறைய பேசவேண்டும் என்று இருந்தேன். Time இல்லாமல் போய்விட்டது.

மொழியைப் பற்றி, தமிழ் மொழியைப் பற்றிச் சொன்னார்கள். ஜார்ஜ் வாட் என்ற ஓர் அறிஞன் சொன்னான், ஓர் "2000 ஆண்டுகளுக்கு முன்னாலே இருக்கிற, சங்க இலக்கியங்களிலே இருக்கிற தமிழ்ப் பாடல்களை இன்றைய தமிழுக்கு மொழி பெயர்ப்பதே ஒரு சுவையான அனுபவம்" என்றான். யார் சொன்னது ? ஜாாஜ் வாட் என்ற அறிஞன். பண்டைய மொழிகளிலே சீன மொழியும், தமிழ் மொழியும்தான் பண்டைய நாகரிகங்களிலே தொன்மை வாய்ந்த மொழிகள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை யாரும் மறுக்க முடியாது. எந்த மொழி வந்தாலும், தமிழுக்கும், சீனத்துக்கும்தான் முக்கியத்துவம் உலகத்திலேயே. ஆகவே, உலக மொழிகளிலே தமிழ் மொழிதான் இன்றைக்கு முக்கியத்துவமான மொழி என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11-35*

ஆகவே, இப்படிப்பட்ட நல்ல பட்ஜெட்டைப்போய் empty என்கிறீர்கள். நீங்கள் empty என்கிறீர்கள், நாங்கள் safety என்கிறோம். இந்த பட்ஜெட், safety to the Tamil people. உங்கள் பாணியில் empty, எங்கள் பாணியில் safety. Safety, safety பாதுகாப்பான நிதிநிலை அறிக்கை. கலைஞரின் ஆட்சிக்கு இது ஒரு நற்சான்று, நற்சான்று என்று சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்துகளை இங்கே பதிய வைக்க விரும்புகின்றேன்.



நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டிலும், உண்மையிலேயே கிட்டத்தட்ட 90 பக்கங்களுக்கு மேலாக இருந்தாலும், அத்தனையும் கற்கண்டாக ஒவ்வொரு திட்டங்களும் இன்றைக்குப் பரிணமித்துக்கொண்டிருக்கின்றன என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மத்திய, மாநில உறவுகள் சீராக இருக்கின்ற காரணத்தினால், நம் காலில் அடிபட்டால்கூட மத்தியிலே இருக்கின்றவர்களுடைய கண்களிலே கண்ணீர் வரும் என்கிற அளவிற்கு உணர்வுப் பூர்வமான செயல்பாடுகளாக மத்திய, மாநில அரசுகளுடைய செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன. சிறப்பான நிதிநிலை அறிக்கையினை நம்முடைய தமிழக நிதி அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு பேராசிரியர் அவர்களும், அதேபோல மத்தியிலே ஒரு சிறப்பு மிக்க நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களும் அள்ளித் தந்திருக்கின்றார்கள்.

தமிழக அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே விவசாயிகள் கூட்டுறவுத் துறையின்மூலமாகப் பெற்ற கடன் தொகை ரூ.7,000 கோடியைத் தள்ளுபடி செய்தது. மத்திய அரசு, சிறிது காலதாமதமானாலுங்கூட அதைப் பின்பற்றி இந்தியத் திருநாட்டிலே இருக்கின்ற விவசாயிகளுடைய 60,000 கோடி ரூபாய் கடனை இரத்து செய்திருக்கின்றது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில அரசு கடனை இரத்து செய்தபின் மீண்டும் அவர்களுக்குக் கடன் தந்து, விவசாயிகளை விவசாயம் செய்விக்க தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் ஊக்குவித்தார்கள். அதேபோல, மத்திய அரசும், கடனை மட்டும் இரத்து செய்தால் போதாது, அவர்கள் மீண்டும் விவசாயத்தைச் செய்ய வேண்டும் என்பதற்காக அவர்களுக்குக் கடன் வழங்குவதற்கென்றும் அந்த நிதிநிலை அறிக்கையிலே நிதியை ஒதுக்கீடு செய்திருக்கின்றது.

அன்னை சோனியா காந்தியின் ஆலோசனையுடன், பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலுள்ள இந்திய அரசு தமிழகத்திற்கு நிறைய திட்டங்களைத் தந்திருக்கிறது. புதிய இரயில் தடங்கள், 11 புதிய இரயில் தொடர் வண்டிகள், 1,320 கிலோ மீட்டர் தொலைவிற்கு ரூ.2,120 கோடியில் தங்க நாற்கர சாலை, தாம்பரத்தில் சித்த மருத்துவ ஆராய்ச்சி மையம், எண்ணூர், தூத்துக்குடி துறைமுகத் திட்டங்கள் விரிவாக்கம், சேலத்தில் தொடர் வண்டிக் கோட்டம்,

செம்மொழி ஆராய்ச்சி மையம், கடல் நீரைக் குடிநீராக்குதல், ஆயிரம் பேர் வாழும் கிராமம் அனைத்திற்கும் இணைப்புச் சாலைகள், 74,000 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர், நெசவாளர்களுக்கு CENVAT வரி நீக்கம், S.C., S.T. மாணவர்கள் M.Phil. Ph.D., ஆய்வு மேற்கொள்ள தேசிய அளவில் திட்டம்.

உயர் கல்வி நிறுவனங்களில் B.C.–க்கு 27 சதவிகித இடஒதுக்கீடு போன்ற பல அரிய திட்டங்களை மத்திய அரசு அறிவித்திருப்பதை நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் திட்டங்கள் அனைத்தையும் வரவேற்கின்ற அதேநேரத்திலே, சில விவரங்களையும் தெரிந்துகொள்கின்ற நேரத்திலே, சில வருத்தங்களையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். ஆதி திராவிட மாணவர்களுக்கென்று, 50 மாணவர்களுக்கு விடுதி கட்டுவதற்கு, 48 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறீர்கள். ஆனால், அதுவே, சமூக நலத் துறைமூலமாக விடுதி கட்டுவதற்கு 100 பேருக்கு 2 கோடியே 60 இலட்சம் ஒதுக்கீடு செய்கின்றீர்கள். நான் என்ன கேட்கின்றேன் என்றால், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு, அதே 100 பேருக்கு விடுதி கட்டினால்கூட 96 இலட்சம் ரூபாய்தான் வருகிறது. ஆனால், அதே 100 பேருக்கு சமூக நலத் துறைமூலமாக கட்டுகின்றபோது 2 கோடியே 60 இலட்சம் என்று சொன்னால், இந்த பாரபட்சத்தை நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் களைய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-40

அடுத்தாற்போல, நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 2,547 கோடி ரூபாய் செலவில் 25.4 இலட்சம் ஏக்கர் பயனடையும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளதை வரவேற்கின்றேன். 25.4 இலட்சம் ஏக்கரில், ஐந்தில் ஒரு பங்கு, அதாவது, 5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் S.C./S.T நிலங்களாக இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். இல்லையெனில், அதற்கென்று ஒதுக்கப்படுகின்ற நிதி, S.C./S.T. மக்களுக்குச் சொந்தமான, ஐந்தில் ஒரு பங்கு நிதி திசை திரும்பியதாகிவிடும். எனவே, IAMWARM திட்டத்தின்கீழ் ஒரு துணைக் குழுவை, S.C./S.T சேர்ந்த விவசாயிகள், அதிகாரிகள், பொருளாதார நிபுணர்களைக் கொண்டு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, திருமண உதவித் தொகையை நீங்கள் 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறீர்கள். அதற்கு வருமானச் சான்றிதழ் கேட்டிருக்கின்றீர்கள். 12 ஆயிரம் ரூபாய்க்குள்ளே வருமானச் சான்றிதழ் என்று சொன்னால், V.A.O. கொடுக்க மறுக்கிறார், R.I.–யும் மறுக்கிறார், தாசில்தாரும் மறுக்கிறார். ஏற்கெனவே திருவள்ளூரிலே அப்படி ஒருவருக்கு தாசில்தார் சர்டிபிகேட் கொடுத்த காரணத்தினால் (குறுக்கீடு) மிகவும் நன்றி. இப்போது அந்த வருமானச் சான்றிதழ் தேவை இல்லை என்று அறிவித்ததாக, எங்கள் தலைவர் சொல்கின்றார். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு, சாலைகள், போக்குவரத்து, குடிநீர் வழங்கல், வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி, பொதுவானப் பணிகள் மற்றும் மின்சக்தி போன்ற துறைகளுக்கு 6,84,799 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பணிகள் செய்யப்படுகின்றன. இந்தச் செல்வப் பகிர்வில் தற்போது தலித்துகளுடைய பங்கேற்பு இல்லை. காரணம் அவர்கள் கிளாஸ்–1 ஒப்பந்ததாரர்களாக இல்லை. அவர்களை கிளாஸ்–1 ஒப்பந்ததாரர்களாகத் தகுதி பெறச் செய்ய எந்தவிதமான திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை. எனவே, 25 சதவிகிதப் பணிகளை S.C./S.T. மக்களுக்கு வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

அதேபோல, போக்குவரத்துத் துறையில், முதலில் 5,451 பேருந்துகளும், அடுத்து 3,500 பேருந்துகளும், சுமார் 10 ஆயிரம் பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. இதற்கு அரசின் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக, குறைந்தது, 2,000 பேருந்துகளை தலித் மக்களுக்கு தாட்கோமூலமாக வாங்க வழி செய்து, அந்த பேருந்துகளைக் குத்தகை அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்கள் பயன்படுத்தினால், 20 ஆயிரம் பேருந்துகள் வாங்கும் செலவும் மிச்சம். தமிழ்நாட்டில் ஒரு தலித்கூட பஸ் சொந்தக்காரராக இல்லை என்ற நிலை மாறி, கலைஞர் ஆட்சியில்தான் தலித்துகள் பஸ் உடைமைதாரர்களாக ஆக்கப்பட்டார்கள் என்ற சகாப்தத்தை உருவாக்க இதனைப் பரிசீலிக்க வேண்டுகிறேன். காரணம் மீண்டும் 3,500 புதிய பேருந்துகள் வாங்க இருப்பதால் இதனையும் கருத்தில்கொள்ள வேண்டுகிறேன்.

அதேபோல, ஜவஹர்லால் நேரு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் நகரத்திலே இருக்கிற குடிசைவாசிகளுக்காக ஒரு இலட்சம் வீடுகள். ஒரு வீடு 2 இலட்சத்து 78 ஆயிரத்து 700 ரூபாயில் கட்டப்படுகிறது. ஆனால், அதேசமயம், இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின்மூலம் தலித்களுக்கு வீடு கட்ட 55 ஆயிரம் ரூபாய் என்றிருக்கிறது. இந்தப் பேதத்தை நீக்கி, குறைந்தபட்சம் இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்களுக்கும் வீடு கட்ட ரூபாய் 2 இலட்சம் ஒதுக்க தாங்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கின்றேன்.

*முற்பகல் 11-45*

S.C./S.T. துணைத் திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டு திட்ட இணைப்பு நூலில், இணைப்பு 4-ல், பக்கம் 271-ல் 1,638 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆதி திராவிட நலத் துறைமூலமாக தயாரிக்கப்பட்ட S.C.S.P.–ல் ஆண்டுப் புத்தகத்தில் பக்கம் 51-ல், 1,650 கோடி ரூபாய் அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2007-2008-ல் திருத்த மதிப்பீடு கணக்கில் பக்கம் 273-ல், 1,771.37 கோடி ரூபாய் ஒதுக்கி செலவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மூன்று நிலைகளிலும் ஒரே ஆண்டில் 3 வகையான தொகைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதில் எந்தப் புள்ளிவிவரம் சரி என்று தெரியவில்லை. ஆதி திராவிட நலத் துறைக்கும், நிதித் துறைக்கும் இடையே முரண்பாடு இருப்பதைத்தான் இந்தப் புள்ளிவிவரம் வெளிப்படுத்துகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

2008-2009 ஆம் ஆண்டு திட்ட நிதி 16 ஆயிரம் கோடி ரூபாய். தலித் துணைத் திட்டத்தின்கீழ் 19.5%, அதாவது 3,120 கோடி ரூபாய் நிதிநிலையில் ரூ.2,312 கோடிதான் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். 3,120 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஆனால், 2,312 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். மீதமுள்ள ரூ.808 கோடி பணத்தைச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கவும், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள்-I.T. PARK-அமைக்கவும், மெட்ரோ இரயில் அமைக்கவும், கலெக்டர்கள், டிஆர்.ஓ.-க்கள், தாசில்தார்களுக்கு வீடு கட்டவும், சுற்றுலா முன்னேற்றம், சாலைப் பராமரிப்பு ஆகியவற்றுக்குப் பயன்படுத்தத் திருப்பி விடுவதாக அறிகிறேன். தலித் மக்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையை அவர்களுக்கு அளித்து, அவர்கள் உரிமைகளைக் காத்துக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.



இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், ஸ்ரீபெரும்புதூர் என்று சொன்னால் இராமானுஜர் ஆலயம் என்ற மிகச் சிறந்த ஆலயம் இருக்கக்கூடிய ஓர் இடம். ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கின்ற பெருமாளுக்கு இப்போது கும்பாபிஷேகம் நடக்கிறது. தலித் மக்களுக்காக அறநிலையத் துறையிலே நிறைய சாதனைகளைச் செய்ய வேண்டுமென்று முதல்வர் அவர்கள், அர்ச்சகர்களாவதற்குக்கூட பயிற்சி கொடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், பெருமாள் கோயில்களுக்கு ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை, குறிப்பாக அறநிலையத் துறையில் உறுப்பினர்களாகப் போடுவது இல்லையே, அது ஏன்?

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

பெருமாள் கோயில்களுக்கு பிராமணர்கள் அல்லது பிராமணர் அல்லாதார்; பிராமணர் அல்லாதார் என்பதில் தலித்கள் கிடையாது. பிராமணர் அல்லாதாரில் யார் இருக்கிறார்கள்? நாயுடு, நாடார், செட்டி, கவுண்டர் அதுபோன்று இருக்கின்றவர்கள். ஆனால், பெருமாள் கோயில்களுக்கு அறங்காவலர்களைப் போடுகின்றபோது அதிலே தலித்களுக்கு இடம் இல்லை என்று சொல்வதற்கு உங்கள் காலத்திலேதான் மாற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்றும், திருத்தம் கொண்டு வரவேண்டும் என்றும் நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதிலும், குறிப்பாக இப்போது உடையவருக்குத் திருவிழா நடக்கிறது, அதாவது கும்பாபிஷேகம். (குறுக்கீடு) இருந்தாலும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் சொன்னதுபோல, இராமானுஜர் ஒரு மிகப் பெரிய ஆன்மீகப் புரட்சியைச் செய்தவர். அவர்தான் அங்கே மத மாற்றத்திற்கு மட்டுமல்ல, ஓர் இனத்தையே மாற்றிக்காட்டியவர் இராமானுஜர். அப்படிப்பட்டவருக்கு, ஆன்மீகத்தில் புரட்சி கண்ட இராமானுஜருக்கு இப்போது கும்பாபிஷேகம் நடக்கிறது என்று சொன்னால், அந்தக் கும்பாபிஷேகத் திருவிழா கமிட்டியிலேகூட ஒரு ஆதி திராவிடர் இல்லை. அமைச்சரைக் கேட்டால் பிராமணர், பிராமணர் அல்லாதார், அவர்களுக்குத்தான் இடம். S.C.–க்கு இடம் இல்லை என்று சொல்வது, கலைஞர் ஆட்சியிலே நிச்சயமாக அது ஒரு கறையாக இருக்கக்கூடாது. அதை மாற்றியாக வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** குறிப்பிட்ட அந்தத் திருக்கோயில் நீதிமன்ற உத்தரவுப்படி, scheme temple என்ற அடிப்படையில் இருக்கிறது. அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இதையெல்லாம் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டியது இல்லை. Scheme temple அது.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது என்று அமைச்சர் சொல்கின்றார்.

**திருமதி டி. யசோதா:** நீதிமன்றத்தினுடைய உத்தரவு வந்ததற்குப் பிறகு அதை மீண்டும் பரிசீலிப்பதற்காக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதைத்தான் நான் அறிய விரும்புகின்றேன். அதைத்தான் நான் இப்பொழுது கேட்டுக்கொள்கின்றேன். கோயில் நிலங்கள் கொள்ளை போவதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். கோயில் நிலங்களெல்லாம் ப்ளாட்டுகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில், உலகத்திலே இருக்கின்ற அத்தனை பணக்காரர்களும் வந்து தொழிற்சாலைகளை ஆரம்பிக்கின்ற காரணத்தினால், அங்கே நிலங்கள் அதிக விலை போகின்ற காரணத்தால், கோயில் நிலங்களெல்லாம் இன்றைக்கு ப்ளாட்டுகளாகப் போவது மட்டுமல்ல, எங்கள் ஊரில் மலையம்பாக்கம் என்ற ஏரியாவில் இராமர் கோயில் இருக்கிறது. 23 ஏக்கர் நிலத்தை அங்கே பரம்பரை தர்மகர்த்தா 99 வருட லீசுக்குக் கொடுத்திருக்கின்றார். ஆனால், அதேநேரத்தில் அங்கே இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்காக அந்த இடங்கள் கொடுக்கப்படுவதில்லை. நான் எத்தனையோ முறை கேட்டிருக்கிறேன். ஆதி திராவிடர் நலத் துறையிலே பணம் கொடுப்பார்கள், நீங்கள் கேட்கின்ற பணத்தைக் கொடுப்பார்கள், நான் அறநிலையத் துறை அமைச்சரிடம் பேசுகிறேன், கொடுங்கள் என்றாலும் அவர் கொடுக்கவில்லை. காரணம், அவருக்குக் கணிசமான தொகை கோடிக்கணக்கிலே கிடைக்கின்ற காரணத்தால்—இன்றைக்கு கோயில் நிலங்களெல்லாம் கொள்ளையடிக்கப்படுகின்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. தமிழக முதல்வர் அவர்கள், நீர்ப் பிடிப்பு இருக்கின்ற இடங்கள் எல்லாம் பாதுகாக்கப்படவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். எங்கள் ஊரில் ஏரிகளைக் காண முடியவில்லை. குளம், குட்டைகளைக் காண முடியவில்லை. நீர்ப் பிடிப்பு இருக்கின்ற இடங்களைக் காண முடியவில்லை. எல்லாவற்றையும் எப்படியோ



பட்டா போட்டு விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி 3/4 பாகம் விற்றாகிவிட்டது. இன்னும் கொஞ்சம் இருக்கிறது. நான் சில ஏரிகளைக் கண்டுபிடித்திருக்கின்றேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, நீர்ப் பிடிப்பு இருக்கின்ற இடங்களையெல்லாம் பாதுகாக்கவேண்டுமென்று சொன்னால், Blue Print எடுக்கச் சொல்லுங்கள். அவ்வாறு Blue Print எடுத்து, Tahsildar, V.A.O., R.I., P.W.D. Engineer சகிதமாக ஒவ்வொரு பகுதிக்கும் சென்றால் நிச்சயமாக அரசாங்கத்தினுடைய சொத்தாகிய ஏரிகள், குளங்கள், குட்டைகள் பாதுகாக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல சுமந்திரம்பேடு, காட்டரம்பாக்கம், இருங்காட்டுக்கோட்டை, சந்தவேலூர், சித்தூர், குன்னம் போன்ற பகுதிகளில் வரத்துக் கால்வாய்கள் உட்பட விற்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. நீர்ப் பிடிப்பு இருக்கின்ற இடங்களெல்லாம் இன்றைக்கு வீட்டு நிலங்களாக மாறிக் கொண்டிருக்கின்ற நிலையை நான் உங்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என் தொகுதிக்கு 3 காவல் நிலையங்களைத் தமிழக முதல்வர் அவர்கள் சென்ற பட்ஜெட்டின்போது அறிவித்தார்கள். இரண்டு காவல் நிலையங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. ஸ்ரீபெரும்புதூரில் மூன்றாம் நிலை காவல் நிலையமாக இருந்ததை, முதல் நிலை காவல் நிலையமாக மாற்றிக் கொடுத்தார்கள். சுங்குவார் சத்திரத்தில் 5 ஆம் நிலையிலே இருந்த காவல் நிலையத்தை முதல் நிலை காவல் நிலையமாக்கினார். ஒரகடத்தில் புதிதாக ஒரு காவல் நிலையத்தையும் உருவாக்கித் தந்தார். நான் மறக்கவில்லை. ஆனால், அதற்கு மேற்கொண்டு காரியங்கள் எதுவும் நடைபெறவில்லை. அப்படியே அறிவிப்பாகவே இருக்கிறது. புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு அதற்குரிய நிலையை அவை பெறவில்லை. சென்ற பட்ஜெட்டிலேயே நம்முடைய பேராசிரியர் அவர்கள் ஸ்ரீபெரும்புதூரில் இருக்கின்ற அரசு மருத்துவமனைக்கு 60 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், இன்றுவரையிலே அந்தத் தொகை என்னவாயிற்று என்று தெரியவில்லை. நான் அமைச்சரிடம் நேரடியாகப் போய் சொன்னேன். சென்ற பட்ஜெட்டிலே 60 இலட்சம் ரூபாய் ஸ்ரீபெரும்புதூர் மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்டதற்குக் காரணம், நிறைய விபத்துகள் நடைபெறுகின்றன என்பதால் அங்கே உடனடியாக ஒரு I.C. unit-ஐ உருவாக்கவேண்டும், சவக் கிடங்கு திறந்தே கிடக்கின்றது, நாற்றம் அடிக்கின்றது. நாய்கள் எல்லாம் உள்ளே

செல்கின்றன. ஆகவே சவக் கிடங்கை குளிர்ப்பதன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றுதான் அந்த 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், இன்று வரையிலே அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. படப்பைக்கு ஆரம்ப சுகாதார நிலையம் கேட்டேன். சென்ற ஆண்டே ஒப்புக்கொள்ளப்பட்டு, இன்றுவரையிலே அது எந்த நிலையிலே இருக்கிறது என்பதே தெரியவில்லை. அதேபோல, தமிழகத்திலே இருக்கின்ற மக்கள், குறிப்பாக என்னுடைய தொகுதி மக்கள் Green Field Airport வரும் என்று வழிமீது விழி வைத்து காத்திருக்கின்றார்கள். அதுவும் அறிவிப்போடு இருக்கின்றது.

*முற்பகல் 11-55*

வடக்குப்பட்டு, திரிவேணி அகாடமிக்கு எனது தொகுதிக்குட்பட்டு 65 ஏக்கரும், செங்கல்பட்டு தொகுதியின் கடைசி எல்லையும், எனது தொகுதி எல்லையின் ஆரம்பமுமான சேந்தமங்கலம் பஞ்சாயத்தில் 200 ஏக்கர் புறம்போக்கு நிலமும் இருக்கிறது. இதனை அரசு கைப்பற்றினால் நிலமற்ற ஏழை ஆதி திராவிட விவசாயிகளுக்கு ஒதுக்கித் தருவதற்கு பயன்படும். தமிழக முதல்வர் அவர்களுடைய நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கும் திட்டத்திற்கு இந்த நிலங்கள் பயன்படும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஸ்ரீபெரும்புதூருக்கு நீதிமன்றம் தந்த தமிழக முதல்வர் அவர்களுடைய தாயுள்ளத்தைப் போற்றுகின்றேன். நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். வாடகைக் கட்டடத்தில் இருக்கும் நீதிமன்றத்தைச் சொந்தக் கட்டடம் கட்டி அதில் குடியமர்த்தக் கோருகிறேன். இந்த நீதிமன்றம் வருவதற்கு நான் மிகவும் போராடினேன். ஆனால், அதன் துவக்க விழா அழைப்பிதழில் சட்டமன்ற உறுப்பினர் பெயர் இல்லை. காஞ்சிபுரம் வழக்கறிஞர்கள், செங்கல்பட்டு வழக்கறிஞர்கள் பெயர்களெல்லாம் வருகின்றன. மக்கள் பிரதிநிதிகள் பெயர் இல்லை. திருவள்ளூரிலே ஏதோ ஒரு சம்பவம் நடந்தது, அதனால்தான் பெயர் இல்லை என்றார்கள். சம்பவம் எதுவென்று எனக்குத் தெரியாது. ஏன், எங்கள் கட்சி தலைவருடைய தொகுதியான பூந்தமல்லியில்கூட கோர்ட் திறந்தார்கள். அவர் பெயர் இல்லையென்று வருத்தப்பட்டார். வருத்தப்படாதீர்கள், என் பெயரும் இல்லை, உங்கள் பெயரும் இல்லை, யார் பெயரும் இல்லை, எம்.எல்.ஏ.க்கள் பெயர்களும் இல்லை. அதனால் இரண்டு பேருமே Compromise பண்ணிக்கொள்ளவேண்டியதுதான் என்று சொன்னேன்...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

**திருமதி டி. யசோதா:** அதனால், என்னைப் பொறுத்தவரைக்கும் நாங்கள் இங்கே போராடி உங்கள்மூலமாக நீதிமன்றம் வருவதற்கு அனுமதி பெறுகின்றோம். ஆனால், அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றபோது அழைப்பிதழிலும் எங்கள் பெயர் இல்லை. கல்வெட்டுகளிலும் எங்கள் பெயர் இல்லை. ஆனால் அந்த நேரத்திலே நீதியரசர் அசோக் குமார் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வில் நான் பங்குகொள்கிறேன். காரணம், நீதிமன்றங்கள் வேண்டுமென்று கேட்கிறவர்கள் எம்.எல்.ஏ.க்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களிடத்திலே போராடி கட்டடங்களுக்குப் பணம் ஒதுக்க கேட்கிறவர்கள் நீங்கள்தான். எனவே, எம்.எல்.ஏ.க்களுக்கு மரியாதை தரவேண்டுமென்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், அரசாங்கம் இந்த விழாவை நடத்துவதில்லை. இது உயர் நீதிமன்றத்தில் அவர்களாக முடிவெடுத்துக்கொண்டு, அவர்களாகவே பெயரைப் போட்டுக்கொள்கிறார்கள். உங்களுக்குத் தெரியாது. இந்த நீதிமன்றங்களுக்கு அமைச்சர் என்ற முறையில் நான்தான் அனுமதி அளிக்கின்றேன். ஆனால், என்னுடைய பெயரைக்கூட அதிலே போடுவது கிடையாது. நேற்றைக்கு நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்கின்றேன். குடியாத்தம் என்னுடைய சொந்த ஊர். அந்த ஊரில் ஒரு நீதிமன்றத் திறப்பு விழா. அதுவே எனக்குத் தெரியாமல் நடக்கிற நிலை ஏற்பட்ட பிறகு, நேற்றைக்கு மறுபடியும் அதனாலே தகராறு. சோழவந்தான் தொகுதியிலே அதே நிலைமை. நான் பலமுறை நீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்லிவிட்டேன், சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு மதிப்பளியுங்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மதிப்பளியுங்கள் என்று. ஆனால், நீதிமன்றத்தில் இருக்கின்ற சிலபேர் பிடிவாதமாக இருக்கிறார்கள். எனவே, இன்றைக்கு நீங்கள் பேசுகின்ற பேச்சாவது நீதிமன்றத் துறைக்கு எட்டும் என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. எனவே, திருமதி யசோதாவின் கருத்தை ஆதரிக்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய கருத்துக்கு ஒத்துப்போனது போலவேதான் நீதியரசர் அசோக் குமார் அவர்களும் அந்தத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தார்கள். அவரே சொன்னார், நிச்சயமாக உங்கள் பெயர் கல்வெட்டிலே பதிக்கப்படும் என்று சொன்னார். அப்போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் உடன் இருந்தார்கள். நான் ஐதராபாத் போகின்றபோது விமான நிலையத்திலே நீதியரசர் அசோக் குமார் அவர்களைச் சந்திக்கின்றபோது, அவர் சொன்னார், "யசோதா, நீ கவலைப்படாதே உன் பெயர் அங்கு இருக்கும்" என்று சொன்னார். அவர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஆனாலும்கூட இதை நான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சமத்துவபுரத்தில் தந்தை பெரியாருடைய சிலையை வைப்பதைப்போல, தந்தை பெரியாராலே பச்சைத் தமிழர் என்று பாராட்டப்பட்டவரும், கல்விக் கண் கொடுத்த எங்கள் தலைவருமான காமராஜருடைய சிலைகளைப் பள்ளிக்கூடங்களில் வைக்கவேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை இங்கே பதியவைக்க விரும்புகிறேன்.

அதேபோல, நாட்டுப்புற கலைஞர்களுடைய திறமைகளை வெளிக்கொணர்ந்து தமிழக மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களை நான் பாராட்டுகின்றேன்.

கிராமியக் கலைஞர்கள் வாழ்வில் ஒளியேற்றிவைத்த முதல்வர் அவர்களைப் போற்றுகின்றேன். உடுக்கை, பம்பைக்குப் பயிற்சி தேவை. ஆடி மாதத்தில் இந்த உடுக்கை, பம்பைகளுக்கு ஏக கிராக்கி இருக்கும். ஆடி மாதம் போன பிறகு இவர்களுக்கு வருமானமே இருக்காது. அந்த நிலையைப் போக்கியதற்கு நடவடிக்கை மேற்கொண்ட முதல்வரை நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*நண்பகல் 12-00*

அதேபோல ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். சினிமா துறையிலே சரோஜாதேவி என்று சொன்னால் எல்லோருக்கும் தெரியுமென்று நான் நினைக்கின்றேன். அந்த அம்மையார் பத்திரிகையிலே ஒரு பேட்டி கொடுத்திருந்தார்கள். அந்தப்



பேட்டியிலே அவர்கள் சொல்கின்றபோது, நாங்கள் எல்லாம் நடித்துக்கொண்டிருந்த காலத்தில் படத்திற்கு மட்டுந்தான் பரிசு கொடுப்பார்கள்; பட்டம் கொடுப்பார்கள்; ஆனால், இப்போதோ பரிசுகளும் கொடுக்கிறார்கள்; நடிகர்கள், நடிகைகள், துணை நடிகர்கள், துணை நடிகைகள், காமெடியன்கள் என இவர்களுக்கெல்லாம் கொடுக்கிறார்கள்; ஆனால், எனக்கு ஒரு வருத்தம்— கோபம்கூட இல்லை— தமிழகத்திலே இதுபோன்று ஒரு பரிசு எனக்குக் கிடைக்கவில்லையே என்கின்ற வருத்தம் இருக்கிறது என்று அவர்கள் ஒரு பத்திரிகையிலே பேட்டி கொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வருகின்றேன். கலைஞர்கள் யாருக்குமே எந்தக் குறையும் இருக்கக்கூடாது என்பதிலே அக்கறை கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர், தன்னுடைய பெயரைவிட 'கலைஞர்' என்கின்ற அந்தப் பெயரைத்தானே பெரிதாக நினைக்கக் கூடியவர். ஆகவே, கலைத் துறையிலே இருந்த அந்த அம்மையாருடைய குறையையும் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல திண்டுக்கல்லிலே, திண்டுக்கல் சின்னப்பிள்ளைப்பட்டியைச் சேர்ந்தவர் மூக்காயி. 1973 ஆம் வருடம் ஆதி திராவிட நலத் துறை, அவர்களுடைய 1 ஏக்கர் 3 சென்ட் இடத்தை எடுத்துக்கொண்டது. எடுத்துக்கொண்டதற்காக அவர்களுக்கு ... (குறுக்கீடு) எனக்கு இன்னும் நேரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்தது. சரோஜாதேவிக்கே நீங்கள் 5 நிமிடம் எடுத்துக்கொண்டீர்கள். நிறையப் பேர் நமீதாவைப் பற்றிப் பேசவில்லை என்று வருத்தப்படுகிறார்கள்.

**திருமதி டி. யசோதா:** எனக்கு எவ்வளவு நிமிடம் ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடங்கள்.

**திருமதி டி. யசோதா:** 25 நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடங்கள் தான் அம்மா.

**திருமதி டி. யசோதா:** 35 நிமிடங்களில் 25 நிமிடங்கள் முடிந்துவிட்டன. 5 நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன், சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி டி. யசோதா:** ஆக, 1973 ஆம் ஆண்டு அந்த அம்மாவினுடைய அந்த நிலத்தை எடுத்துக்கொண்டார்கள். எடுத்துக்கொண்ட பிறகு அந்த அம்மா மாற்று இடம் கேட்டார்கள். அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படவில்லை. நீதிமன்றத்திற்குப் போனார்கள். நீதிமன்றம் இதைப் பற்றி விசாரிப்பதற்கு கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லையென்று சொல்லிவிட்டது. அன்றைக்கு 1,700 ரூபாய் என்று சொன்னார்கள். அந்த அம்மா கிட்டத்தட்ட 35 ஆண்டுக்காலமாக ஆதி திராவிடர் நலத் துறைக்கும், கலெக்டர் அலுவலகத்திற்கும் அலைந்து, அலைந்து 85 வயதாகி விட்ட இந்தச் சூழ்நிலையில்கூட அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பரிசீலனை செய்து அந்த அம்மையாருக்கு வேண்டிய அந்த நிதியுதவியையோ அல்லது நிலத்தையோ ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 'வருமுன் காப்போம்' திட்டம். ஏழையெளியவர்களின் உயிருக்கு உத்தரவாதம் தரும் மிகச் சிறப்பான உயர்ந்த திட்டம். விலை உயர்ந்த சிகிச்சை, மருந்து, பரிசோதனை உபகரணங்கள், சிறந்த மருத்துவர், செவிலியர், உதவியாளர்கள் உள்ளடக்கி கிராமம், கிராமமாக அரசே அனுப்பி சிகிச்சையளித்து ஆயுளை அதிகரிக்கும் திட்டம், இந்த வருமுன் காப்போம் திட்டம். வாழ்க, வளர்க. இதனை மக்களுக்கு அளித்த இந்த அரசும் முதல்வரும் வாழ்க, வாழ்க என ஏழையெளிய, கிராம மக்கள் சார்பாக வாழ்த்துகிறேன்.

உணவுக்கு உத்தரவாதம். உணவுக்கு உத்தரவாதமும், நில உத்தரவாதமும் ஒன்றோடொன்று இணைந்த மற்றும் பிரிக்க முடியாத உரிமைகள் ஆகும். இந்நிலையில் தலித் சமுதாயத்தினரிடமிருந்து பறிக்கப்பட்ட பஞ்சமி நிலங்களைப் பற்றி ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்வதாக வாக்குறுதி அளித்து இன்னும் செயல் வடிவம் பெறவில்லை. எப்போது இதற்கு விடிவு ஏற்படும் என்று எண்ணும் தலித் மக்களை கருணையுடன் காக்கக் கோருகிறேன். சுனாமிக்குப் பிறகு உப்புத் தன்மை நிறைந்த கடல் நீரின் பேரலைகளால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் (மணியடிக்கப்பெற்றது) மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க அரசு தலையாய முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அதேபோல, சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை, சுயநிதிக் கூட்டுறவு வங்கிகள்மூலமாக ரூபாய் 500 கோடிக்கு வழங்க வேண்டும்.



கோரிக்கை எண் 6, பத்தி 37, பக்கம் 18 பள்ளிக் கல்வி. அனைத்து மக்களும் வாழ்வு வளம்பெற அடிப்படைக் கல்வி மற்றும் கல்விக் கூடங்கள் அதிநவீன கல்விக்கூடங்கள் மற்றும் ஆளுமைத் திறனுள்ள ஆசான்கள் அவசியம். எனவே, இதற்கு 1,000 கோடி ரூபாயை நபார்டு வங்கி மூலமாகப் பெற்று அனைத்து மக்களும் வாழ்வு பெறக்கூடிய அடிப்படையில் கல்விக் கூடங்களையும், கல்வியையும் நவீனமயமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசுப் பள்ளிகளில் கணினி கல்வி அவசியம். தமிழகம் முழுவதும் உள்ள அரசுக் கல்வி நிலையங்களில் கணினி வழிக் கல்வித் திட்டம் உருவாக்கப்பட, செலவினைப் பற்றிக் கவலைப்படாமல் தொகையை ஒதுக்கீடு செய்து, அதற்கு ஆக்கபூர்வமான காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் செம்மொழி என்பதால், தமிழ்வழிக் கல்வி கற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

உடல் ஊனமுற்றோர் உதவி. கணவன், மனைவி இரண்டு பேருமே கண் தெரியாதவர்கள் என் தொகுதியிலே இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இரண்டு வருடங்களாக மனு கொடுத்து, இதுவரைக்கும் அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை. படப்பையிலே இருக்கிற பி.டி.ஓ.-வைக்கூடக் கேட்டேன். அனுப்பினேன் அம்மா, இன்னும் வரவில்லை என்றுதான் சொல்கிறார். அதனால் இதுபோன்று உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதில் நம்முடைய அரசாங்கம் வரப்பிரசாதமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்ட விவசாயிகளுக்காக நம்முடைய தளபதி அவர்கள் நிறைய அறிவிப்புகளைச் செய்தார்கள். ஆனால், ஒரேயொரு அறிவிப்பை மிகத் திறமையாக விட்டுவிட்டார்கள். பாதிக்கப்பட்டிருக்கின்ற மாவட்டங்களிலே தயவுசெய்து வரி தள்ளுபடி செய்வதற்கு நீங்கள் உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

வெள்ள நிவாரணப் பணிகளில் உண்மையிலேயே இந்த அரசாங்கமும், முதல்வர் அவர்களும், எல்லா அமைச்சர்களையும், பொறுப்பிலே இருக்கிறவர்களையும் அந்தந்த ஊருக்கு விரட்டியனுப்பி அங்கே இருக்கின்ற நிலைமைகளைக் கண்கூடாகப் பார்த்து வரச் சொன்னார்கள் பாருங்கள், அந்த நிலையை உண்மையிலேயே நானும்

சாதாரண மக்களிலே ஒருவராக இருந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது.)

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொச்சைப்படுத்தும் பாரதிய ஜனதாக் கட்சியினுடைய நடவடிக்கை கண்டனத்திற்குரியது என்பதைக் கூறி, விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

***திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறுகிற பொது விவாதத்திலே பேசுகின்ற வாய்ப்பளித்த தங்களுக்கும், சமூகநீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், இங்கே எங்களை வழிநடத்துகின்ற தலைவர் அண்ணன் ஜி.கே. மணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்கமாக ஒரு நிதி நிலை அறிக்கை என்பது ஓர் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் பற்றிய புள்ளிவிவரத்தைச் சுட்டிக்காட்டும் ஆவணமாக இருந்தாலும், அது ஒரு மாநில வளர்ச்சிக்கு உரிய கருவியாகப் பயன்பட வேண்டும். அந்தக் கோணத்திலே பார்க்கும்போது ஒரு பொதுநல அரசின் நிதிநிலை அறிக்கை என்பது நீண்டகாலத் திட்டங்களின் செயல்பாட்டிற்கு வழிவகுக்கக்கூடியதும், அடித்தளத்து மக்களை மேம்படுத்தும் வகையிலும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நிலையிலும் அமைய வேண்டும். உண்மையில் ஒரு நிதிநிலை அறிக்கை என்பது மக்களின் நலனுக்கான ஆவணமாகத் திகழ வேண்டுமென்பது அறிஞர்களுடைய கருத்து. அந்த வகையில்தான் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை அமைய வேண்டுமென்பதற்காகவே ஒரு வழிகாட்டுதல் நிதிநிலை அறிக்கையைப் பாட்டாளி மக்கள் கட்சி சமீபத்தில் தனது 6-வது நிழல் நிதிநிலை அறிக்கையாக வெளியிட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உலகத்திலேயே இங்கிலாந்து நாட்டில் மட்டுமே எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சிக்கு உதவுகின்ற வகையில், நிழல் நிதிநிலை அறிக்கையை வெளியிடும் வழக்கம் இருக்கிறது. அதுபோலவே, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே ஓர் ஆளும் கட்சிக்கு உதவுகின்ற வகையில் ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சி தனது ஜனநாயகக் கடமையை ஆற்றுகின்ற வகையில் நிழல் நிதிநிலை அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதிலே பல நன்மை தரக்கூடிய விஷயங்களையும் வெளியிட்டிருக்கிறோம். அந்தவகையில் தமிழக அரசும் இந்த ஆண்டு தனது நிதிநிலை அறிக்கையின் வாயிலாக நாங்கள் சுட்டிக்காட்டியவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு, அதிலும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, உதாரணமாக, வேளாண்மையில் துல்லிய பண்ணை முறையை அமல்படுத்துவது, ஏழைப் பெண்கள் திருமண நிதி உதவியை 15,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தியது, ஏழை பெற்ற வீட்டுக் கடன்களைத் தள்ளுபடி செய்தது, நெசவாளர்கள் கடன்களைத் தள்ளுபடி செய்தது, குறிப்பாக, சென்னையின் முக்கியச் சாலைகளை இணைக்கும் அதிவேக வட்டச் சாலையை உருவாக்குவது போன்ற திட்டங்களை நாங்கள் அறிவித்திருந்தோம். இவற்றையெல்லாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு அவற்றை அறிவிப்புக்களாக வெளியிட்டதற்கு தமிழக அரசுக்கும் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும் (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவர் அய்யா அவர்களின் சார்பாகவும் இங்கே நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேவேளையில், எதிர்கால இளைஞர்களுடைய, குறிப்பாக வளர்கின்ற இளைஞர்களுடைய எதிர்காலத்தை அழிக்கின்ற மதுக் கடைகளை முழுவதுமாகவோ அல்லது படிப்படியாகவோ மூடுவது பற்றி எதுவுமே குறிப்பிடாதது எங்களுக்கு வருத்தத்தைத் தருகிறது. அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்கிறவன் அரசியல்வாதி, அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கிறவன் சமுதாயவாதி என்று சொல்வார்கள். அந்த வகையிலே எதிர்காலச் சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கிற தலைவராக இருக்கிற எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள், தமிழ்நாட்டிலே தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் போன்ற தலைவர்களெல்லாம் நடத்துகிற சுயமரியாதைத் திருமணங்களைப் போல நடத்துகிற திருமண நிகழ்ச்சியிலே வாழ்த்துரை வழங்குகிறபோது அங்கே கூடியிருக்கிற ஆயிரக்கணக்கான பெண்கள் மத்தியில் ஒரு கேள்வியைக் கேட்பார்கள்.

உங்கள் குடும்பச் சுற்றத்திலே குடியாலே பாதிக்கப்படாத குடும்பம் ஏதாவது உண்டா? என்று கேட்பார்கள். அப்படி பாதிக்கப்படாத குடும்பம் என்று யாராவது இருந்தால் உங்கள் கையை உயர்த்துங்கள் என்று கேட்பார்கள். வந்திருக்கிற ஆயிரம் பெண்களிலே ஐந்து பேர்

மட்டுமே கையைத் தூக்குவார்கள். 995 குடும்பங்கள் இந்தக் குடியாலே பாதிக்கப்பட்டிருப்பது தெரியவருகிறது. எனவே, அந்த மக்களைப் பார்த்து, பெண்களைப் பார்த்து அய்யா அவர்கள் கேட்பார்கள். பல குடும்பங்களைச் சீரழிக்கிற மதுக்கடைகள் தேவைதானா என்று கேட்கிறபோது, அந்த பெண்கள் 'கூடாது, கூடாது' என்று சொல்வார்கள். இப்போது தமிழ்நாட்டில் எதற்கெடுத்தாலும் குடிக்கிறான். வாழ்வுக்கும் குடிக்கிறான், சாவுக்கும் குடிக்கிறான். கல்யாணத்திற்கும் குடிக்கிறான், கருமாதிக்கும் குடிக்கிறான். எல்லாவற்றிற்கும் குடிக்கிறான். தமிழ்நாட்டிலே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுத்தோமோ இல்லையோ வீட்டிற்கு ஒரு குடிகாரனை உருவாக்கிவிட்டோம் என்கிற சூழ்நிலை இன்றைக்கு உருவாகிவிட்டது என்று அய்யா வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் தொகுதியில் எப்படி என்கிறேன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** எல்லாம், தமிழ்நாடு முழுக்கவே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சரி.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மதுக்கடைகள் மூலமாக அரசுக்கு கடந்த ஆண்டு வருமானம் 7 ஆயிரம் கோடி என்றும், இந்த ஆண்டின் வருமானம் 10 ஆயிரம் கோடியை எட்டும் என்றும் நிதிநிலை அறிக்கையில் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரை அது தண்ணீரில் வருகின்ற வருமானம். ஆனால் எங்களைப் பொறுத்தவரை அது எங்கள் தமிழ்நாட்டுப் பெண்களுடைய கண்ணீரில் வருகின்ற வருமானம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதனால்தான், 'இந்த வருமானம் எத்தனை கோடியாக இருந்தாலும் அது எனக்குத் தேவையில்லை; மதுவின்மூலமாக வருகின்ற வருமானம் எனக்குத் தேவையில்லை" என்றார் காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா. அதுமட்டுமல்ல 'மதுவால் வருகின்ற வருமானம் என்பது குஷ்டரோகி கையில் கொண்டு வருகின்ற வெண்ணெயைப் போன்றது, அது கூடாது' என்று சொன்னார் அறிஞர் அண்ணா. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட பேரறிஞர் அண்ணாவை வழிகாட்டியாக வைத்திருக்கின்ற தி.மு.க.-வும் சரி, அவருடைய பெயரையே, அண்ணாவின் பெயரையே கட்சியின் பெயரில் வைத்திருக்கின்ற



அ.தி.மு.க-வும் சரி, போட்டிபோட்டுக்கொண்டு ஆளுக்கு 4 ஆயிரம் மதுக்கடைகளைத் திறந்து, தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 8 ஆயிரம் மதுக்கடைகளைத் திறந்து வைத்தது எந்த வகையில் நியாயம்? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏதாவது ஒருவரைப் பகைத்துக்கொண்டால் சரி. இரண்டு பேரையும் பகைத்துக்கொண்டால் நீங்கள் எப்படி ஐயா பிழைப்பீர்கள்?

**திரு. கோ. எதிரொலி மணியன்:** நாம் இப்போது அவருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடப்போகிறோம். அண்ணா நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். அவருடைய நூற்றாண்டு விழாவிலாவது அவருடைய கொள்கையை ஏற்றுக்கொள்கிற வகையிலே இந்த மதுக்கடைகளை மூடக்கூடாதா? இதுதான் பாட்டாளி மக்கள் கட்சி கேட்கிற கேள்வி. அதுமட்டுமல்ல, நல்ல குடிமக்களை உருவாக்க வேண்டிய அரசாங்கங்கள், நல்ல குடிகார மக்களை இப்போது உருவாக்கிக்கொண்டிருப்பதை எவரால்தான் சகித்துக்கொள்ளமுடியும் என்பது எங்கள் கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) இது மருத்துவர் அய்யாவின் கேள்வியும்கூட. யார் வந்தால் எதைக் கொடுப்பார்கள் என்று இலவசங்களுக்காக கையேந்துகின்ற அவல நிலைக்கு இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் தள்ளப்பட்டிருப்பதை எப்படிச் சகித்துக்கொள்வது? ஒரு நல்ல அரசு இலவசமாகத் தரவேண்டியது இரண்டே இரண்டுதான். ஒன்று கல்வி. மற்றொன்று சுகாதாரம். இந்த இரண்டுமே சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுக்காலம் ஆகியும் தமிழக மக்கள் முழுமையாக பெறமுடியாத சூழ்நிலை இன்றுவரை இருக்கிறது. ஆரம்பக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை நம்முடைய அரசு இலவசம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. காமராஜர் உருவாக்கிய கிராமப்புற கல்விக் கோயில்கள் இன்றைக்கு மாணாக்கர்கள் வராமல் காணாமல் போய்க்கொண்டிருக்கின்றன. அவை தனியாருடைய ஆங்கில மோக கரன்சி கோயில்களாக இன்றைக்கு மாறிவிட்டன. உதாரணமாக உத்திரமேரூர் தொகுதி, திணையாம்பூண்டி என்கிற ஊரிலே ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் மொத்தமே ஐந்து மாணவர்கள்தான். ஜூன் மாதம் ஆரம்பித்த பள்ளியில் இன்று வரையில் அந்த ஐந்து பேரில் மூன்று பேர் வரவேயில்லை. மூன்று பேர் long absent. இரண்டே பேர்தான் இருக்கிறார்கள். இரண்டு மாணவர்களும் ஐந்தாம் வகுப்பு. அந்த இரண்டு மாணவர்களில் ஒருத்தன் வருவான். ஒருத்தன்

வரமாட்டான். ஒருத்தன் வந்தால் தலைமையாசிரியர் கெஞ்சுவார், நீ வாய்யா, நீ வரவில்லை என்றால் பள்ளிக்கூடத்தினை மூடியாகவேண்டும் என்பார். கெஞ்சிக் கூத்தாடி உட்காரவைக்கும் அந்த மாணவனுக்கு ஒரு தலைமையாசிரியர். அவருக்கு சோறு போட சத்துணவு அமைப்பாளர் ஒருவர். சமையல் செய்ய ஒரு ஆயா. அந்தப் பள்ளியில் ஒரு பையனுக்கு ஐந்து பேர் வேலை செய்கிறார்கள். இப்போது இதுதான் நம்முடைய சூழ்நிலை. நான் சொல்வது கிராமப்புறத்தில் காமராஜர் கொண்டுவந்த கல்விக் கோயில் திட்டம் இப்போது காணாமல் போய்கொண்டிருக்கிறது. இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கைகள் ஒன்றும் அவர் சொல்வதைப்போல காணாமல் போய்விடவில்லை. இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் பள்ளிக் கல்வித் துறைக்காக ஒதுக்கப்படுகிற நிதி ஒதுக்கீடு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து இன்றைக்கு 7852 கோடி ரூபாய்க்கு சென்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப்போல 7,979 பணியிடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. நீதிமன்றங்களிலே தீர்ப்புகள் வருகின்றபோதுகூட முடிந்த அளவுக்கு அந்த ஆணைகளைப் பெற்று எல்லா மாவட்டங்களிலும் ஆசிரியர் பணியிடங்களை நிரப்பக்கூடிய ஒரு முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல உள்ள இடத்திலே, அந்தப் பள்ளிக்கூடத்திலே பையன்கள் வராமல் இருக்கக்கூடிய நிலையில்கூட, அங்கே இருக்கக்கூடியவர்களைக் கண்டறிந்து, கூடுதலாக மாணவர்களைப் பள்ளியிலே சேர்ப்பதற்கு இந்த அரசு முழு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் பள்ளியிலே சேராது இருக்கக்கூடிய மாணவர்கள் என்றால் ஒரு இலட்சம் பேர். ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனேயே தலைவர் கலைஞருடைய பிறந்த நாளை முன்னிட்டு ஒரு special drive வைத்து, அத்தனை பேரையும் இணைக்கக்கூடிய முயற்சி எடுத்திருக்கிறோம். இப்படி பல பள்ளிகளில் ஆங்காங்கே ஓரிரு பள்ளிகளை மாத்திரம் எடுத்துக்கொள்ள முடியாது. விதிவிலக்குகள் என்றைக்கும்



வழிகாட்டிகளாக அமைந்துவிட முடியாது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவருடைய கருத்திலே நான் இடையிலே சொல்லக்கூடாது என்பதற்காகத்தான் அமைதியாக இருந்தேன். இங்கே அவர் பேசுகிறபொழுது ஏதோ புதியதாக நாங்கள் கடைகளை ஆரம்பித்து குடிகாரர்களை உருவாக்கியதுபோன்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அப்படியல்ல, பல நேரங்களிலே சட்டமன்றத்திலே இதுசம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிற்குப் பக்கத்திலே இருக்கிற கர்நாடகத்திலே முழுமையாக மதுவிலக்கு இல்லை. அதேபோன்று பக்கத்திலே இருக்கிற ஆந்திராவிலே, ஏன் பாண்டிச்சேரியிலே இப்படி தமிழ்நாட்டைச் சுற்றி இருக்கிற அனைத்து மாநிலங்களிலும் மது விற்கப்படுகிறது. பாண்டிச்சேரியில் ஞாயிற்றுக்கிழமைகளிலேயும், சனிக்கிழமைகளிலேயும் அங்கே எந்த ஹோட்டல்களிலும், லாட்ஜ்களிலும் இடமே கிடைக்காத அளவுக்கு தமிழ்நாட்டிலே இருக்கிற மொத்தபேரும் பாண்டிச்சேரியிலேதான் இருப்பார்கள், அல்லது பெங்களூரிலேதான் இருப்பார்கள். இந்த நிலைப்பாடுதான் இருந்தது. தமிழ்நாட்டின் மொத்த வருமானமும் பிற மாநிலங்களுக்குத்தான் போய்க் கொண்டிருந்தது. அதுபற்றி பல நேரங்களிலே சட்டமன்றத்திலே விளக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தினுடைய பணமெல்லாம் போய்க் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அவர் சார்ந்திருக்கிற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராமதாஸ் என்பவர் பாண்டிச்சேரி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். அந்த மாநிலத்தில்கூட இந்தக் கருத்துகளை சொல்கிறாரா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனாலும்கூட, பிற மாநிலங்களுக்கு இந்த வருமானங்கள் போகக்கூடாது என்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு நிலைப்பாடுதான் டாஸ்மாக். ஒரு தற்காலிக நிலைப்பாடுதானேயொழிய இந்த அரசாங்கம் இதன்மூலமாக வருமானத்தைப் பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காக

ஆரம்பிக்கப்பட்டது அல்ல. பிற மாநிலங்களுக்கு இந்த வருமானங்கள் எல்லாம் போகக்கூடாது என்று தடுக்கிற ஒரு நிலைப்பாட்டில்தான் இது தற்காலிகமாக இருந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் குறிப்பிட்டதைப்போல பல மாநிலங்களுக்கு பல திட்டங்கள்மூலம் நீங்கள் உதாரணமாக இருந்திருக்கிறீர்கள். அந்தவகையிலே, பக்கத்து மாநிலத்திலே இருக்கிறது என்பதற்காக நாங்கள் இங்கே வைத்திருக்கிறோம் என்று சொல்வதைவிட மகாராஷ்டிராவிலே இப்போது தடை செய்திருக்கிறார்கள். அந்த ஆணையையே கொண்டு வந்து தலைவர் கலைஞரிடத்திலே என்னுடைய அய்யா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். படிப்படியாக கடைகளை எப்படி மூடுவது என்பதற்கான ஆணையைக் கொடுத்திருக்கிறார்கள். ஏன் இதை நாம் பின்பற்றிச் செய்யக்கூடாது? இதுதான் எங்கள் கேள்வியே தவிர, நான் உங்களை மாத்திரம் குறை சொல்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அதைபோல, நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். நான் அவரையோ, இல்லை துறையையோ குறை சொல்ல வரவில்லை, இன்றைய சூழ்நிலை அப்படி இருக்கிறது. ஆரம்பக் கல்வி என்பது தரமான கல்வியாக இல்லை என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, வளர்ந்த நாடுகளிலே பார்த்தால் ஆரம்பக் கல்வியை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முழுமையாக, தரமாக, கட்டாயமாக, கட்டணம் இல்லாத, அதேசமயம் சுமை இல்லாத சுகமான கல்வியைத் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அது இங்கே இல்லையே. அதைத்தான் சுட்டிக்காட்டினேனே தவிர, இந்தக் கல்வியைக் கொடுக்க வேண்டிய அரசு அதைத் தனியாரிடம் கொடுத்துவிட்டு, தனியார் எடுக்க வேண்டிய மதுக் கடைகளை அரசு எடுத்துக்கொள்கிறது என்பதுதான் வேதனை இப்போது. இதுதான் **அதுமட்டுமல்ல, அதைவிட வேறு ** என்னவென்று கேட்டீர்களென்றால் மது பாட்டிலில் "மது நாட்டிற்கு, வீட்டிற்கு, உயிருக்குக் கேடு" என்று சொல்லிவிட்டு அரசே அதை விற்பது என்பது அதைவிட**... (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பால் வளத் துறை அமைச்சர் அவர்கள், அந்த ** என்பதைப் பற்றித்தானே சொல்ல வருகிறீர்கள். அதை நீக்கிவிடலாம். (குறுக்கீடு) இருக்கிறது, பார்லிமென்டில் இருக்கிறது.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** அப்படிப்பட்ட மதுவைக் குடித்துவிட்டு தமிழ்நாட்டு மக்கள் எப்படி நலமாக இருக்கமுடியும், வளமாக வாழமுடியும் என்றுதான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 3 கிலோ மீட்டருக்கு ஒரு மதுக் கடை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மது விலக்குக் கொள்கை என்பதை தமிழ்நாட்டிலே மட்டும் பின்பற்றினால் சரியாக இருக்காது. இந்தியா முழுவதும் அது அமல்படுத்தப்படுமானால் தமிழ்நாடும் நிச்சயமாக அதை ஏற்கத் தயாராக இருக்கிறது. ஆனால் பாண்டிச்சேரியிலும் மது விற்கலாம். பக்கத்திலே ஆந்திராவிலே விற்கலாம், கர்நாடகாவிலே விற்கலாம், தமிழ்நாட்டிலே மட்டும் விற்கக்கூடாது என்று சொல்வது எந்தவகையில் நியாயம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொறடா என்கிற முறையிலே நீங்கள் first, first எழுந்திருக்கிறீர்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு நலத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால், தமிழகத்தில் முன்னுதாரணமாக நடைமுறைப்படுத்துகின்றார்கள். ஆனால், வெகு ஜனங்கள், ஏழையெளிய தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடைய அந்த வருமானம் மதுபானக் கடைகளுக்குப் போவதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்ற அடிப்படையில்தான் தமிழ்நாடு இதில் ஒரு முன்னுதாரணமாக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, மதுவிலக்கை அமல்படுத்தினால், நிச்சயமாகச் சொல்கிறேன், கள்ளச் சாராயம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆறாக ஓடும். அந்தக் கள்ளச் சாராயம் ஆறாக ஓடும்போது ஏழையெளியவர்கள், இலட்சக்கணக்கானவர்கள் சிறைச்சாலைகளில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்லித்தான் இதைத் தளர்த்தினார்கள். அதே கருத்துதான் இந்த அரசுக்கும் இருக்கிறது.

*பிற்பகல் 12-20*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயத்தைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழக அரசும், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய காவல் துறையும், கண்டிப்பான உத்தரவின்பேரில், தமிழகத்தில் எங்கும் கள்ளச் சாராயம் விற்கக் கூடாது என்கிற ஒரு நிலையை எடுத்து, மாவட்டம் முழுவதும் அதற்கான நடவடிக்கைகளைக் கடுமையாக்கினால், அதை அடியோடு ஒழிப்பதற்கு நம்முடைய அரசால் முடியும். அதேபோல், இன்றைக்கு டாஸ்மாக் மதுபானக் கடைகளில் வருகின்ற வருமானத்தைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களோடும், உள் துறைச் செயலாளரோடும் கூட்டம் நடத்தி, அந்த வருமானத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கை எடுக்கிற அரசு, ஏன் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் கூட்டங்களை நடத்தி ஒழிக்கக்கூடாது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** டாஸ்மாக் கடைகள் இருக்கின்ற காரணத்தால்தான் இன்று கள்ளச் சாராயம் தமிழ்நாட்டிலே இல்லை. ஆனால் டாஸ்மாக் கடைகளை மூடிவிட்டால் கள்ளச் சாராயம் ஆறாகப் பெருகும். அதிலே நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. பல இலட்சக்கணக்கான ஏழையெளியவர்கள் சிறைச்சாலைகளுக்குப் போக வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே, இவ்வளவு தூரம் வாதாடுகின்ற பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவர்களுடைய அமைச்சர் அன்புமணி அவர்களிடத்திலே சொல்லி, பிரதமரிடத்திலேயும், அன்னை சோனியா காந்தி அவர்களிடத்திலேயும் பேசி, இந்தியா முழுவதும் இந்தக் கொள்கையைக் கொண்டு



வருவதற்கு முயற்சித்தால் தமிழ்நாடு அதை ஏற்றுக்கொள்ளும். *(குறுக்கீடு)* எல்லாவற்றுக்கும் பதில் சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன். *(குறுக்கீடு)* திரு. எதிரொலி மணியன், உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. *(குறுக்கீடு)* திரு. ராஜாவுக்குக் கொடுத்திருக்கிறார்கள். *(குறுக்கீடு)* இல்லை, திரு. தி.க. ராஜாவுக்கு. *(குறுக்கீடு)* இல்லை சார், இல்லை. *(குறுக்கீடு)* இல்லை, திரு. ராஜா பேச வேண்டாம், நானே பேசிவிடுகிறேன் என்றால் பேசுங்கள். *(குறுக்கீடு)* திரு. ராஜா, சொல்லட்டும். *(குறுக்கீடு)* நீங்கள் குறுக்கீடு வராமல் பேச வேண்டும்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** எதைக் கேட்டாலும் ஏதாவது ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறீர்கள். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். 3 கிலோ மீட்டருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று கேட்டேன்; அங்கே உயிர் காக்கும் மருந்துகள் கொடுங்கள் என்று கேட்டேன்; கிராமப்புற பணியாளர்களை, மருத்துவர்களை, செவிலியர்களைப் பணி செய்ய கட்டாயப்படுத்துங்கள் என்று கேட்டால் சட்டத்தைக் காட்டுகிற நீங்கள், 3 கிலோ மீட்டருக்கு ஒரு மதுக் கடையை மட்டும் தாராளமாகத் திறப்பதற்கு எப்படி உங்களுக்கு வசதி வாய்ப்பு இருக்கிறது? *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதைவிட இன்னொன்று என்னவென்றால், தமிழ் மொழியை தலைவர் கலைஞர் இன்றைக்கு செம்மொழியாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். நாம் எல்லாம் பாராட்டுகிறோம். செம்மொழியே வருக என்று வரவேற்கிறோம். ஆனால், அந்தச் செம்மொழி இன்றைக்குத் தமிழ்நாட்டில் எங்கேயிருக்கிறது என்று தெரியவில்லை. நாடு பூராவும் பார்த்தீர்கள் என்றால், எதிலும் தமிழ், எங்கும் தமிழ் என்பது போய், இப்போது எங்கே தமிழ், எதிலே தமிழ் என்று போய்க் கொண்டிருக்கிறது. எங்குமே இல்லை. இப்பொழுதெல்லாம் அரசு விளம்பரங்களைப் பார்த்தீர்கள் என்றால், ஒட்டுமொத்தமான விளம்பரங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தரும் விளம்பரங்கள் அனைத்துமே ஆங்கிலத்திலே வருகின்றன. தமிழ் செம்மொழி ஆவதற்கு முன்பு தமிழிலே வந்தன. மொத்த விளம்பரங்களும் செம்மொழி ஆன பிறகுதான் ஆங்கிலம் ஆகிவிட்டன. இதை அரசு உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், எங்கே தமிழ், எதிலே தமிழ்

என்று அய்யா ஆறு மாதமாகக் கேட்கிறார். யாராவது வாங்க, வாதாடுவோம், பொது மேடையிலே அதைப்பற்றிப் பேசுவோம் என்றால் யாரும் வரத் தயாராக இல்லை, துறையும் தயாராக இல்லை. இன்னொன்று, தமிழ் மொழிதான் இப்படி என்று பார்த்தால், தமிழ் இசையை, அதையாவது ஒரு பள்ளியிலே கட்டாயப் பாடமாக ஆக்குவீர்கள் என்று பார்த்தோம். அறிவிப்பே இல்லை. தமிழ் இசையை சிதம்பரம் தீட்சிதர்தான் தீட்டு என்று சொன்னான்; உங்களுக்குமா தீட்டு. ஏன் அதை அறிமுகப்படுத்தக் கூடாது?

அதுமட்டுமல்ல. சுய மரியாதைத் திருமணங்களுக்கு தலைவர் கலைஞர் ஒப்புதல் தரக்கூடியவர். ஏன் அந்தத் திருமணங்களுக்கு நீங்கள் 10,000 ரூபாய் தரக்கூடாது. எல்லாவற்றுக்கும் பணம் கொடுக்கிறோமே, இந்தச் சுய மரியாதைத் திருமணங்களுக்கு ஏன் 10,000 ரூபாய் தரக்கூடாது?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுய மரியாதைத் திருமணம் என்பது தொடர்ந்து நிறைய நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெண்களுக்கு, 10 ஆம் வகுப்பு வரை படித்தவர்களுக்கு திருமண உதவியாக 20,000 ரூபாய் கொடுப்பது என்பது வேறு. இன்றைக்கு அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பது, சுய மரியாதைத் திருமணங்கள்தான். அந்த உதவியை அவர்கள் எதிர்பார்க்கவும் இல்லை, அதைச் செய்ய வேண்டிய சூழலும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுய மரியாதைத் திருமணங்கள்தான் தமிழகத்திலே எல்லா இடங்களிலும் நடக்கிறது. எல்லா திருமணங்களுக்கும் அரசு பணம் கொடுக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் அவருக்கு இருக்கின்றன. அதற்குள் பேசி முடியுங்கள்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** என்னுடைய வேண்டுகோள் எல்லாம், நீங்கள் திருமணங்களுக்கு உதவி செய்யவில்லை என்று சொல்லவில்லை. சீர்திருத்தத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற



வகையிலே அந்தத் திருமணங்களுக்கு நாம் நிச்சயம் உதவி செய்ய வேண்டும் என்பதைத்தான் நான் வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். ஏனென்றால், இது பெரியார் கொண்டு வந்த திட்டம். கலப்புத் திருமணங்களுக்கு உதவி செய்வதைப் போல, கலப்புத் திருமணமாக இல்லாவிட்டாலும், தமிழ் திருமண முறையிலே திருமணம் செய்தால் கட்டாயம் அவர்களுக்கு பணம் வழங்க வேண்டும் என்கிற கோரிக்கையைத்தான் வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-25*

அதேபோல, இன்றைக்கு சில்லறை வணிகர்களைப் பாதித்துக்கொண்டிருக்கிற ரிலையன்ஸ், வால்மார்ட் போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டிலே நுழைவதை நீங்கள் தயவு செய்து தடை செய்ய வேண்டும். ஏனென்றால், இலட்சக்கணக்கான சில்லறை வணிகர்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய துயரைத் துடைப்பதற்கு இந்த அரசு நிச்சயம் இந்நிறுவனங்களை உள்ளே அனுமதிக்கக் கூடாது, அதற்கான ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இந்த அரசு மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசாக இருக்குமானால், நாங்கள் குறிப்பிட்டிருக்கிற அத்தனையையும் ஏற்றுக்கொண்டிருக்கிற நீங்கள், நாங்கள் இப்போது குறிப்பிட்டிருக்கிற பல்வேறு விஷயங்களை, மக்கள் நலம் சார்ந்த விஷயங்களை ஏற்றுக்கொண்டு, நாங்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கிற இந்த மதுக் கடைகளை நீங்கள் அறவே மூடி தமிழ்நாட்டுப் பெண்களை, அவர்களுடைய தாலியைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன். உங்களுக்கு 15 நிமிடங்கள்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துகளைத் தெரிவிக்க எனக்கு வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை பொதுவாக வரவேற்கப்பட வேண்டிய அம்சங்களைக் கொண்டுள்ளதாக நாங்கள் கருதுகிறோம். குறிப்பாக, அடுக்கப்பட்ட மூட்டைகளில் அடிமூட்டைகளாக இருப்பவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள். அதிலும் அருந்ததியர் வகுப்பினர் சமூக, கல்வி, பொருளாதார நிலைகளில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்கள் முன்னேற்றத்திற்கு ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில் தனி உள் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கோரிக்கையை ஏற்று, ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் மரியாதைக்குரிய எம்.ஆர். ஜனார்த்தனம் அவர்களைக் கொண்ட ஒரு நபர் குழு அமைத்து, அவரது பரிந்துரையைப் பெற்று, அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இதோடு 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை 18 சதவீதத்திலிருந்து 19 சதவீதமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அதேபோன்று, தமிழகத்தில் வெள்ளைக்காரர்களால் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலம் என்பது 1,50,000 ஏக்கர் உள்ளது. அந்த 1,50,000 ஏக்கரில் ஆயிரம் ஏக்கர் நிலம் மட்டுமே இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்கள் கையிலே இருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய 1,49,000 ஏக்கர் பஞ்சமி நிலங்களை மீட்டு, அந்த நிலங்களை தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறோம்.

அதேபோன்று, பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களது உணவு மானியம் என்பதை கடந்த காலத்தோடு ஒப்பிடும்போது மூன்று மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. அதேநேரத்தில் அத்தியாவசியப் பொருள்கள் முறையாகக் கிடைப்பதில் குளறுபடிகள் உள்ளதாகத் தெரிகிறது. கடந்த 22-3-2008 அன்று வடசென்னை, வியாசர்பாடியிலே நடைபெற்ற நியாயவிலைக் கடைகளில் சீர்கேடுகள் சம்பந்தமான பொது விசாரணையில் அரிசி 20 கிலோ கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. அதேபோல, நியாயவிலைக் கடைகளிலே வழங்கப்படக்கூடிய மண்ணெண்ணெய் 8½ லிட்டர் கிடைப்பதாக அங்கே வருகை தந்த பொது விசாரணையிலே கலந்துகொண்ட மக்கள் எல்லாம்



சொல்லியிருக்கிறார்கள்; அது பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கிறது. அரசு உடனடியாகத் தலையிட்டு பொருட்கள் அளவு குறையாமல் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அதேபோன்று அத்தியாவசியப் பொருள்களின்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, சென்னையைப் பொறுத்தவரைக்கும் பல்வேறு இடங்களிலே இதுபோன்ற தகவல்களை நாங்கள் அறிந்த பின்புதான்—இங்கே சென்னையிலே வடக்கு, தெற்கு என்று துணை ஆணையாளர்கள் இருக்கிறார்கள்—அந்தத் துணை ஆணையாளர்கள் அலுவலகத்தினுடைய தொலைபேசி எண்கள் எல்லாம் பத்திரிகையிலே கொடுக்கப்பட்டு, ஏதாவது பிரச்சினை இருக்கும் என்று சொன்னால், பொதுமக்கள் உடனே அதில் தொடர்புகொள்ளுங்கள், 24 மணி நேரத்திலே அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறோம் என்று இப்போது அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தியாவசியப் பொருள்களது விலையைக் கட்டுப்படுத்துவதற்கு உணவு மானியம் ரூ.1950 கோடியை நாம் வழங்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு வெளிச் சந்தைகளைப் பொறுத்தவரை, கடந்த மூன்று மாத காலங்களில் மட்டும் அத்தியாவசியப் பொருள்களது விலை கடுமையான அளவிற்கு உயர்ந்திருப்பதாக நேற்றையதினம் 'தினமணி' பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. நேற்றைய முன்தினம் 'இந்து' ஆங்கிலப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. இதற்குக் காரணம் on–line வர்த்தகமே. On-line வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கி வைத்துப் பற்றாக்குறையை ஏற்படுத்தி, விலை உயர்வுக்குக் காரணமாக இருக்கிறார்கள் என்றால், on–line வர்த்தகத்தைத் தடை செய்ய மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-30*

இன்றைக்குக் கட்டுமானத் தொழிலைப் பொறுத்தவரையில், இரும்பு விலை டன்னுக்கு 20 ஆயிரம் ரூபாய் உயர்ந்திருப்பதாகச் செய்திகள்

வந்து கொண்டிருக்கின்றன. காரணம், மத்திய அரசு இரும்பை அத்தியாவசியப் பொருள்களது பட்டியலிலே இருந்து எடுத்துவிட்ட காரணத்தினால், இரும்பின் விலை கடுமையான அளவிற்கு உயர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் நடுத்தரத் தொழில்கள் பாதிக்கும் என்பதை உங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழகத்தில் வளர்ந்துவரும் மின் தேவையைக் கணக்கில் கொண்டு, 5 மின் திட்டங்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. தற்போது தமிழகத்தைப் பொறுத்தவரை, தொழில் துறைக்கு மட்டும் 3.5% மின்சாரம் பற்றாக்குறை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்பொழுதுகூட, சிறிய தொழில்கள் உட்பட, தொழிற்சாலைகளுக்கு வாரம் ஒருமுறை கட்டாயம் விடுமுறை விடவேண்டும் என்று அறிவிப்பு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. தொழிற்சாலைகளுக்கு வாரம் ஒருமுறை கட்டாய விடுமுறை என்று விடப்பட்டால், உற்பத்தி பாதிக்கும். இதனால் உற்பத்தி பாதிப்பு ஏற்படுவது மட்டுமல்ல; வேலை இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. மின் வெட்டினால் சிறு தொழில்கள் கடுமையான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த வாரம் மத்திய அரசு நாடாளுமன்றத்திலே தாக்கல் செய்திருக்கக்கூடிய, Public Enterprises Survey என்ற ஒரு புத்தகத்தில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசு நிலத்தைக் கையகப்படுத்திக் கொடுக்காததனால், நெய்வேலியில் நிலக்கரி எடுக்க முடியாமல், மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அரசால் ஏன் நிலத்தைக் கையகப்படுத்திட முடியவில்லை? தடையிருப்பின், அதை முறையாகச் சரிசெய்து, மின் உற்பத்திச் செய்ய உதவிட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அதேபோன்று, கடந்த காலத்தில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொகுப்பூதிய அடிப்படையிலே பணி நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தால் இன்றைக்குக் காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அதேநேரத்தில், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய சுயநிதிக் கல்லூரிகள்; அது பொறியியல் கல்லூரிகளாக இருந்தாலும் சரி, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களாக இருந்தாலும் சரி, ஏனைய கல்லூரிகளாக இருந்தாலும் சரி, இந்தக் கல்லூரிகளில், சுயநிதிக்



கல்லூரிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் தொகுப்பூதியமே இன்றைக்கும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் தொகுப்பூதியம்கூட, இன்றைக்கும் பல்வேறு கல்லூரிகளில் வழங்கப்படாமல், மாணவர்களிடம் கொள்ளை அடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் கொள்ளை தடுக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, 'சம வேலைக்குச் சம ஊதியம்' என்ற அடிப்படையில், சட்டம் அமலாக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறோம்.

அதேபோன்று, அரசு அனுமதி பெறாமல், தமிழகத்தில் 12 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மாணவர்கள் சேர்க்கையை நடத்தியிருக்கின்றன. இந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுப்பதோடு, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலே சேர்க்கப்பட்டிருக்கக்கூடிய 600 மாணவர்கள் இந்த ஆண்டு தேர்வு எழுதிடச் சிறப்பு அனுமதியை மாநில அரசாங்கம் வழங்கவேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலையில்லா கால நிவாரணம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேநேரத்தில், தமிழகத்தில் 45 இலட்சம் வேலையற்ற இளைஞர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இளைஞர்களுக்கு வேலை கிடைத்திட, அரசு புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, நம்முடைய தேர்தல் அறிக்கையிலே சுட்டிக்காட்டியதுபோல, காலியாக இருக்கக்கூடிய 3 இலட்சம் அரசுப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தங்களால் உருவாக்கப்பட்ட தொழிலாளர் நல வாரியங்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட தொழிலாளர் நல வாரியங்கள், இன்றைக்குத் தொழிலாளர் நலத் துறையின்கீழ் செயல்படுகின்றன. அவை தற்போது வருவாய்த் துறையின்கீழ் செயல்படும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. இந்த ஆணை தமிழகத்திலே இருக்கக்கூடிய அமைப்புச்சாரா தொழிலாளர்கள் மத்தியில் பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, தொழிலாளர் நலத் துறைக்குத் தேவையான ஊழியர்களை நியமித்து, நல வாரியங்களை மீண்டும் தொழிலாளர் நலத் துறையின்கீழ் செயல்படுத்துவதற்கு இந்த அரசு அனுமதிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

சென்னைப் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க புதிய பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதில் 50 ஆண்டுகால கனவான, வட சென்னை மாவட்ட மக்களது கனவாக இருக்கக்கூடிய வியாசர்பாடி இரயில்வே மேம்பாலமும் கட்டப்படவேண்டும்.

அதேபோன்று, தமிழகத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பித்தவர்களில், 3 இலட்சம் பேருக்கு பட்டாக்கள் கொடுப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இன்றைக்கு 3,98,000 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பதாக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, 1966 ஆம் ஆண்டு, தமிழக அரசாங்கத்தால் குடியமர்த்தப்பட்ட தாயகம் திரும்பிய பர்மா தமிழர்கள், பக்தவத்சலம் காலனியிலும், சாஸ்திரி நகரிலும், இந்திரா நகரிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மக்களுக்கு இன்றுவரை பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது. சிறப்புக் கவனத்தின் அடிப்படையில் இந்த மக்களுக்கு பட்டா வினியோகம் செய்வதை உறுதிப்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, தமிழகம் முழுவதும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்ற கோரிக்கையோடு இலட்சக்கணக்கான விண்ணப்பங்கள் வருவாய்த் துறையிடம் வழங்கப்பட்டிருக்கின்றன. விண்ணப்பம் கொடுத்திருக்கக்கூடிய அனைவருக்கும் இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குவதை நம்முடைய அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, குடிமனைப் பட்டா, நில வினியோகம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் அரசு தெளிவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, அரசு தரிசு நிலங்கள் தமிழகத்தில் பலரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதைக் கண்டறிந்து, அந்த நிலங்களை எடுத்து வினியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-35*

அதேபோன்று, 2006 ஆம் ஆண்டு தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் வாங்கிய 7,000 கோடி ரூபாய் கடன் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தால் இரத்து செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மத்திய பட்ஜெட்டில்கூட மத்திய அரசாங்கம் 60,000 கோடி ரூபாய் அளவில் விவசாயக் கடன்களை இரத்து செய்வதாக அறிவித்து, அதற்கான ஒரு பகுதி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த விவசாயக் கடன்கள் இரத்து



செய்யப்பட்டிருந்தாலுங்கூட, இன்றைக்கு கிராமப்புறங்களைப் பொறுத்தவரை, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய சிறிய விவசாயிகள் அல்லது சிறிய அளவுக்கு நிலங்களை வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் அந்தக் கிராமங்களிலே கந்துவட்டிக்காரர்களிடம் கடனைப் பெற்று விவசாயம் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. கூட்டுறவு வங்கிகளிலே கடன் பெற்றிருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இந்தச் சலுகைகள் கிடைத்திருக்கிறது. ஆனால், கிராமப்புறங்களிலே கந்துவட்டிப் பிரச்சினை என்பது மிகப்பெரிய பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு கந்துவட்டியை ஒழிப்பதற்கான நடவடிக்கையை நம்முடைய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே இரண்டு மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதற்கான அரசாணைகளெல்லாம் வெளியிடப்பட்டன. இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட இரண்டு மருத்துவக் கல்லூரிகளும், ஐந்து பொறியியல் கல்லூரிகளும் ஆரம்பிப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. 2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைப் பணிகள் இன்றுவரை துவங்கப்படாமல் இருக்கிறது. காரணம் கேட்கும்போது, நீதிமன்றத்திலே வழக்குகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆண்டுதோறும் இரண்டு கல்லூரிகள், 5 கல்லூரிகள் என்று அறிவிப்புகள் வெளியிடப்பட்டாலுங்கூட, இந்த அறிவிப்புகள் நடைமுறையில் அமலாக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகளை முடுக்கிவிட்டு, இந்த நடவடிக்கைகளை வேகப்படுத்தவேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, இப்போது தமிழகத்தைப் பொறுத்தவரை, சிறிய தொழில்கள் கூடுதலாக வந்துகொண்டிருக்கின்றன. பெரிய தொழில்கள் வரும்போது, அந்த பெரிய தொழில்களோடு சேர்ந்து சிறிய தொழில்களும் கூடுதலாக வரும்போது இந்தச் சிறிய தொழில்களுக்குத் தேவையான skilled labour என்று அழைக்கப்படக்கூடிய I.T.I. படித்தவர்கள், Diploma படித்தவர்கள் எண்ணிக்கை போதுமான அளவுக்கு தமிழகத்திலே இருக்கிறதா என்றால் இல்லாத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய அரசு, அரசுக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களிலே புதிய கல்லூரிகள் துவங்கப்படும் என்று

அறிவிப்புகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அனைத்து மாவட்டங்களிலும் I.T.I. மற்றும் polytechnic கல்லூரிகளைத் துவக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, சித்த மருத்துவக் கல்லூரி துவக்க வேண்டுமென்ற வேண்டுகோள் தொடர்ச்சியாக இங்கே வைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை அரசுக் கலைக் கல்லூரிகள் இல்லாத 6 மாவட்டங்கள் இருக்கின்றன. தந்தை பெரியார் பிறந்த ஈரோடு மாவட்டத்திலே அரசுக் கலைக் கல்லூரி கிடையாது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்த விருதுநகர் மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரி கிடையாது. இதுபோன்று கன்னியாகுமரி மாவட்டம் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் அரசு கலைக் கல்லூரிகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழக மக்களது 150 ஆண்டுக்கால கனவுத் திட்டம் சேது கால்வாய்த் திட்டம். சேது கால்வாய்த் திட்டம் என்பது 150 ஆண்டுக்கால கனவுத் திட்டம். தமிழகம் பொருளாதார ரீதியிலே வளர்ச்சிபெற வேண்டுமென்றால், தென் தமிழகம் தொழில் துறையில் முன்னேற வேண்டுமென்றால், இந்த சேது கால்வாய்த் திட்டம் என்பது அமலாக்கப்படவேண்டும் என்று 1860 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் நிதி ஒதுக்கி, பணிகள் நடந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. உங்கள் எல்லோருக்குமே தெரியும், அது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆட்சியிலே இருக்கும்போது ஒரு கோரிக்கை வைக்கப்படுகிறது. ஆட்சி இல்லாதபோது வேறு ஒரு கோரிக்கை வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒட்டுமொத்த தமிழக மக்களது நலன் பாதுகாக்கப்படுவதற்கு சேது கால்வாய்த் திட்டம் அமலாக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்தைத் தாமதமின்றி மத்திய அரசாங்கம் அமலாக்குவதற்கான (மணியடிக்கப்பெற்றது) அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு 50 ஆண்டுகளுக்கு மேலாக. . .



பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற நோத்தில் நெய்வேலியிலே மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான நிலக்கரியை எடுப்பதற்கு சிலர் இடையூறாக இருப்பதாகச் சொன்னார்கள். அண்மையில், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனுடைய நிர்வாகம் எடுத்த முயற்சிகளினால் நிலச் சொந்தக்காரர்கள் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் பெற்று நிலத்தை ஒப்படைக்கச் சம்மதித்து கையகப்படுத்திய நிலங்களையும் சுவாதீனம் அளித்துள்ளனர். எனவே, இனி நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனுக்கு லிக்னைட் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மகேந்திரன். (குறுக்கீடு) திரு. வேல்முருகன் சார், இப்படி ஒவ்வொரு வரிக்கும் எழுந்து நின்றால் எப்படி? நீங்கள் இந்த House-ஐ நடத்திப் பாருங்கள். திரு. மகேந்திரன் உங்கள் பேச்சு முடிந்துவிட்டது. அடுத்து திரு. எஸ். இராசசேகரன். (குறுக்கீடு) திரு. வேல்முருகன், நீங்கள் நாளைக்கு பேசுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** ஒரு நிமிடம் மைக் கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, N.L.C. நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதி மக்களுக்கு மாற்றுக் குடியிருப்பு வீட்டிற்கான இடமும் ஒதுக்கப்படவில்லை, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தரப்படும் என்கிற உறுதிமொழியும் அங்கு நிறைவேற்றப்படவில்லை, இருபது இலட்ச ரூபாய் கேட்ட இடத்தில், ஐந்து கோடி ரூபாய் சம்பாதிக்கின்ற நிறுவனம் வெறும் ஐந்து இலட்ச ரூபாயைக் கொடுத்து **அதன்மூலம் மின்சார உற்பத்தி தொடங்கப்படும் என்று சொன்னால் இது வேதனைக்குரிய செய்தி. அந்த மக்களைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதிமொழியை இந்த நாட்டினுடைய அரசாங்கமும், மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவரும் நடைமுறைப்படுத்துவதற்கு முன்வராமல் N.L.C. நிர்வாகத்திற்கு ஆதரவாக வெறும் ஐந்து இலட்ச

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ரூபாய் கொடுத்து, அந்த மக்களுடைய வாழ்க்கையைச் சுரண்ட நினைப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்ற வார்த்தை expunge செய்யப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இருபது இலட்சம் அல்ல. இரண்டு கோடி ரூபாய்கூட கேட்கலாம். ஆனால், மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கு நிலம் எடுப்பதற்கு சில கொள்கைகளை மத்திய அரசாங்கம் வகுத்திருக்கிறது. அந்த அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவரும், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனும், நிலச் சொந்தக்காரர்களும் அனைவரும்கூடி, பேசி எடுத்த முடிவே தவிர, இது வேறு அல்ல. வேண்டுமானால் பா.ம.க. வேறு ஒரு நிலை எடுக்கலாம். இதைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே முடிவெடுக்கப்பட்டு, ஐந்து இலட்ச ரூபாய்க்கு அவர்கள் ஒப்புதல் தந்து நிலத்தைத் திருப்பி அளிப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** எனது உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மகேந்திரன், ½ நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அண்ணன் மின்சாரத் துறை அமைச்சருக்கு நன்கு தெரியும். இதுகுறித்து பேச்சுவார்த்தைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அழைக்கின்றபோது, அந்த நிலத்தைக் கையகப்படுத்துகின்ற 15 பஞ்சாயத்துத் தலைவர்களில் ஒருவர்கூட மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. நிலத்தின் உரிமையாளர்கள் ஒருவர்கூட கலந்துகொள்ளவில்லை. அந்தப் பகுதியினுடைய பேரூராட்சித் தலைவர், அந்தத் தொகுதியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர், அந்தத் தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர், யார் யார் மக்கள் பிரதிநிதிகளோ அவர்கள் யாரும் அழைக்கப்படவில்லை. நிலத்தின் உரிமையாளர்களும் அழைக்கப்படவில்லை. அந்தப் பகுதியில் நிலம் இருப்பதாக போலியாகப் பட்டா வாங்கிய ஒரு நபரை மட்டும்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அழைத்து அவரிடத்திலே கையொப்பம் பெற்று பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக தங்களுடைய பதவிகளையே இராஜினாமா செய்கிறோம் என்று பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு அதை நான் கொண்டுவந்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டுவந்திருக்கிறேன். அதனால் தமிழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதை மீண்டும் பரிசீலனைக்குட்படுத்தி, பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயப் பெருமக்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, மக்கள் பிரதிநிதிகளையும் அழைத்து, அனைத்துக் கட்சிக் குழுவை அல்லது அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் அவர்களுடைய தலைமையிலாவது ஒரு குழுவை அமைத்து, எங்கள் உணர்வுகளையும் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். அந்த நிலத்தை அரசாங்கத்திற்குத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம், மின்சாரம் உற்பத்திச் செய்யப்பட வேண்டும். N.L.C. நிர்வாகம் அங்கு வளர வேண்டும். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நில உடைமையாளர்கள் வந்தால் போதும். மக்கள் பிரதிநிதிகள் எதற்கு? (குறுக்கீடு) மக்கள் பிரதிநிதிகள் எதற்கு என்று கேட்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. பா.ம.க. என்ன கருதுகிறது என்பதிலே எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால், ஒரு ஏக்கர் நிலத்தை ஐந்து இலட்ச ரூபாய் கொடுத்து வாங்கி மின்சாரம் உற்பத்தி செய்வது என்று சொன்னாலே ஒரு யூனிட் மின்சாரத்தினுடைய விலை இரண்டு ரூபாய் ஐம்பது காசு ஆகிறது. அதற்குமேலே பணம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் மின்சாரத்தினுடைய விலை கூடுதலாகத்தான் ஆகும். இப்படி மின்சாரத்தினுடைய விலை கூடிக்கொண்டே போனால், பிறகு இலவச மின்சாரமும் தர முடியாது, வீடுகளுக்குக் கொடுக்கின்ற சலுகை மின்சாரத்தையும் கொடுக்க முடியாது, தாழ்த்தப்பட்டவர்களின் குடிசைகளுக்குக் கொடுக்கிற இலவச மின்சாரமும் கொடுக்க முடியாது. கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய இலவச மின்சாரமும் கொடுக்க முடியாது, இப்போது குடிசையிலே இருப்பவர்கள் டி.வி. வைத்துக்கொண்டால்கூட இலவசமாக மின்சாரம் கொடுக்கிறோம்,

அதையும் கொடுக்க முடியாது. ஆகவே, ஒட்டுமொத்த சமுதாயத்தினுடைய நலனைப் பார்க்க வேண்டுமே தவிர—இதை விவசாயிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்—அதிலே கருத்து வேறுபாடுகள் இருந்தால், ஒரு நாளைக்கு நம்முடைய அமைச்சரை வைத்து, ஒரு கூட்டத்தைக் கூட்டி, அங்கே என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ள, ஆவணங்களைப் பார்ப்பதற்கு உங்களை அனுமதிக்கச் சொல்கிறேன். போய்ப் பாருங்கள். திருப்தியில்லையென்றால், பிறகு பேசுங்கள்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது பேசப்படுகின்ற நெய்வேலி நில எடுப்பு பிரச்சினையில், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பல கிராமங்கள் இருக்கின்றன. இது, 69 கிராம மக்களுடைய பிரச்சினையாகும். ஆனால், ஒரு சிலரை மட்டும் வைத்துக்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் என்னைக்கூடக் கூப்பிடாமல், போலியாகப் பட்டா பெற்றுள்ள ஒரு நபர், தன்னுடைய சுய இலாபத்திற்காக, ஐந்து இலட்சம் ரூபாய் என்று மாவட்ட ஆட்சியர் கூறியவுடன் ஏற்றுக்கொண்டு வந்துவிட்டார். அந்த கிராம மக்களையோ, நிர்வாகத்திலுள்ள ஊராட்சி மன்றத் தலைவரையோ, யாரையுமே அணுகாமல், யாருடைய ஒப்புதலும் இல்லாமல், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலுள்ள மக்கள், ஒரு ஏக்கருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் என்பதை ஒப்புக்கொள்ளவில்லை. அதுமட்டுமல்லாமல், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தரவேண்டும். அவர்களுக்கு இலவசப் பட்டா வேண்டும். அவர்களுக்கு அவசியம் வேலை வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டு போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஐந்து இலட்சம் ரூபாய் என்பது போதாது. குறைந்தது, பத்து இலட்சம் ரூபாயாவது வழங்க வேண்டுமென்று இந்தப் பேரவையின் வாயிலாகக் கேட்டுக்கொண்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன் (குறுக்கீடு) நிறையச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள்கூடச் சொன்னீர்கள். மக்கள் பிரதிநிதிகளை அழைக்க வேண்டிய அவசியமில்லை. அழைக்க வேண்டாம். அங்கே இருக்கிற விவசாயிகள், விவசாய சங்கங்களுடைய பிரதிநிதிகள், யாரையாவது அழைக்க வேண்டும். யாரோ போலியாகப் பதிவு செய்துகொண்ட ஒருவரை அழைத்துப் பேசியதால், விவசாயிகளுக்கு முற்றிலுமாகப் பாதிப்பு. ஒட்டுமொத்தமாக விவசாயிகள் எதிர்க்கிறார்கள். நிலம் கொடுப்பவர்களெல்லாம் எதிர்க்கிறார்கள். யாரோ ஒருவரை அழைத்துப் பேசுகிறீர்கள். ஆகவே, இதைத் தவிர்க்க வேண்டும். இந்தப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடரவேண்டும். பாட்டாளி மக்கள் கட்சிக்குத் தனிப்பட்ட நிலைப்பாடு அல்ல. ஒட்டுமொத்த விவசாயிகளுடைய நலன். வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு, மாற்றுக் குடியிருப்பு, கூடுதலான வசதிகள், இதைத்தான் கேட்கிறார்கள். ஆகவே, மீண்டும் மாற்றுப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுப் பேச்சுவார்த்தை என்பது இயலுமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டு, பிறகு தி.மு.க. ஆட்சியிலே எப்படியும் நிறைவேற்றவேண்டும் என்று நினைத்த ஜெயங்கொண்டம் மின்சாரத் திட்டம், இப்படித்தான், விவசாயிகள் முதலில் இரண்டு இலட்சம் ரூபாய் கேட்டார்கள். பிறகு ஒருவிதமாகப் பேசி, ஏறக்குறைய 8,000 ஏக்கர் நிலம் ஒப்பந்தம் செய்யப்பட்டு, நிலத்தை ஆர்ஜிதம் செய்து முடித்து விட்டோம். இப்போது அந்தத் திட்டம் வர இருக்கிறது. எப்படி ஜெயங்கொண்டம் திட்டத்திலே நாம் ஒரு இலட்சத்து, 80 ஆயிரம் ரூபாய் வரையிலே கொடுத்தோமோ, அங்கேயிருக்கிற விலை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். 20,000, 30,000 ரூபாய்க்குக்கூடப் போகாத நிலத்தை, ஒரு இலட்சத்து, 80 ஆயிரம் ரூபாய் கொடுத்து, நாங்கள் அந்த நிலத்தை வாங்கியிருக்கின்றோம். அதைப்போலத்தான், கடலூரிலே 50 ஆயிரம் ரூபாய்க்குக்கூட போகாத நிலத்தை, ஐந்து இலட்சம் ரூபாய் என்று

வாங்கியிருக்கின்றோம். இப்படி, நிலத்தை ஐந்து இலட்சம் ரூபாய் வரையிலே கொடுத்து வாங்கினால்தான், மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு, நாம் மின் திட்டங்களை அமல்படுத்த முடியும். இல்லையென்றால், மின் திட்டங்களை நாம் மூடிவிட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இப்போது சொன்ன அந்தக் கருத்துபற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களோடு கலந்துபேசி, நீங்கள் ஒரு முடிவு செய்யுங்கள். பிறகு பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மத்திய அரசு வெளியிட்டிருக்கக்கூடிய ஓர் ஆவணத்தைச் சுட்டிக்காட்டினேன். விவாதம் என்பது நடைபெற்றிருக்கிறது. எந்த இடர்பாடும் இல்லாமல், மின் உற்பத்தி நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசின் திட்டங்கள் குறித்து அறிவிப்புகள் அனைத்தையும் முறையாக நடைமுறைப்படுத்துவதில் அதிக கவனமும், உறுதியான ஏற்பாடுகளும் தேவை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

*பிற்பகல் 12-50*

*** திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வரவேற்கின்றேன். இது வரியில்லாத, பற்றாக்குறையில்லாத ஒரு நிதிநிலை அறிக்கை. அதோடு மாத்திரமல்ல, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்துப் பகுதி மக்களையும் உள்ளடக்கி அவர்களுடைய தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடிய முறையில் அமைந்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் வரவேற்கின்ற அதேநேரத்தில், இந்த அரசுக்கு முதலாவதாக நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.



புதுக்கோட்டை மாவட்டத்தில் இரண்டு புதிய வருவாய் வட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலுள்ள கரம்பக்குடி ஒன்றியத்தையும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்த திருமயம் பொன்னமராவதியையும் வருவாய் வட்டங்களாக அறிவித்ததற்காக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், திரு. ராம. சுப்புராம் அவர்களுடைய சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேநேரத்தில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 12 வருவாய் கிராமங்கள் கோவில்பட்டியோடு இணைக்கப்பட்டன. இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வைக்கப்பட்ட இந்த மூன்று கோரிக்கைகளையும் ஏற்று, நிறைவேற்றித் தந்திருக்கின்ற இந்த அரசுக்கு என்னுடைய நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் கடைசிப் பகுதியில் இந்திய நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை இவை அனைத்தும், காவிரி பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை மற்றும் பாலாறு பிரச்சினையில் ஒரு கேள்விக்குறியாக்கப்பட்டுவிட்டது என்று சொல்லியிருப்பதை, உண்மையிலேயே இந்த அரசு அதைப்பற்றி கவலையோடு பரிசீலிப்பதை, கவலையோடு சொல்வதை ஏற்று, இந்த அரசோடு எங்களையும் இணைத்து, நாங்களும் இதைக் குறிப்பிட விரும்புகின்றோம்.

பல்வேறு நலத் திட்டங்களை, குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையில் 116 திட்டங்களை இந்த அரசு இன்றைக்கு வெளியிட்டிருக்கின்றது. மொத்தத்தில் 116 திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 116 திட்டங்களையும் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், குறிப்பாக வீட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட கடனை, 25,000 ரூபாய்க்குக் குறைவாக உள்ளதை அறவே நீக்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதனை வரவேற்கின்ற அதேநேரத்தில், குறிப்பாக அதற்கு மேலுள்ள தொகை அது எவ்வளவாக இருந்தாலும் அந்தத் தொகைகளுடைய வட்டியையும், அபராத வட்டியையும் அறவே தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகின்றேன். ஏனென்று கேட்டால், வட்டியும், அபராத வட்டியும்

என்று எடுத்துக்கொண்டால் மிக அதிக அளவிலே வருகின்றது. காலையில் ஒருவர் வந்து என்னிடம் ஒரு சீட்டைக் காட்டினார். அதில், அவர் வாங்கிய கடன் ரூ.95,000. ஆனால் இப்பொழுது அவர் கட்ட வேண்டிய கடன் ரூ.2,45,000. வட்டியும், அபராத வட்டியும் இந்த அளவிற்கு சென்று கொண்டிருக்கின்றது. ஆகவே, தமிழக முதல்வர் அவர்கள், அவர்கள்மீது கருணைகூர்ந்து அந்த வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கப்பட்ட. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் எல்லாத் திட்டங்களிலுமே ரூ.25,000-லிருந்து ரூ.7,00,000 வரைக்கும் அபராத வட்டி முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. வட்டியிலேதான் ஒரு விகிதாச்சாரம் போட்டிருக்கிறார்கள். 50 சதவீதம், 75 சதவீதம் என்று விகிதாச்சாரம் போட்டிருக்கிறார்கள். ஆனால், அபராத வட்டியை முழுமையாக அரசு தள்ளுபடி செய்திருக்கிறது.

*பிற்பகல் 12-55*

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. என்னை பொறுத்தவரையில், அந்தக் கடனை மட்டுமே வசூல் செய்ய வேண்டுமே தவிர, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ததைப் போல, வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா என்று வருகின்றபோது 3 இலட்சம் இலக்கு. ஆனால், இன்றைக்கு 3 இலட்சத்து 90 ஆயிரம் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருந்தாலும், இன்னும் தாலுகா அலுவலகங்களிலும், R.D.O. அலுவலகங்களிலும் பல இலட்சக்கணக்கான மனுக்கள் குவிந்திருக்கின்றன. அவர்களுக்குப் பல்வேறு காரணங்களைச் சொல்லி, நிபந்தனைகளைச் சொல்லி, அந்தப் பட்டாக்கள் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு இடத்தில் ஆறு ஓடாது. ஆனால் அந்த இடத்தில் ஆற்றுப் புறம்போக்கு என்று இருக்கிறது. இன்னொரு இடத்தில் குளமே இருக்காது. ஆனால் குளம் புறம்போக்கு என்று இருக்கிறது. வாரியே இருக்காது. அப்படிப்பட்ட இடத்தில் வாரி புறம்போக்கு என்று இருக்கிறது. இதையெல்லாம் உயர் நீதிமன்றத்திலே தடை செய்திருக்கிறார்கள் என்று சொல்லி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. . . (குறுக்கீடு)



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு, குளம், இவைகளுக்குத் தடை இருக்கிறது. நீர் பிடிப்புப் பகுதிகளுக்கு, வரத்து வாய்கால்களுக்கு உயர் நீதிமன்றத்தினுடைய தடை இருக்கிறது என்பது உண்மை. ஆனால், தலைவர் கலைஞர் அரசைப் பொறுத்தவரையில், அங்கே வருவாய்த் துறையினுடைய பதிவேட்டிலே அது ஆற்றுப் புறம்போக்கு என்றோ அல்லது வாய்க்கால் புறம்போக்கு என்றோ குறிப்பிடப்பட்டு, அங்கே ஆறோ, வாய்க்கால்களோ இல்லையென்றால், அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், நேரில் பார்த்து உடனே வகைப்பாடு மாற்றம் செய்வதற்கு வகை இருக்கிறது. வகைப்பாடு மாற்றம் செய்துதான் இப்போது நிறைய பட்டாக்கள் கொடுத்திருக்கிறோம். அந்த நிலத்தை நேரடியாகச் சென்று பார்க்கின்றபோது, அங்கு ஆறு, குளம் அல்லது குட்டை இல்லை என்றால் குடியிருப்பு 10 ஆண்டுகளுக்கு மேலாக, 5 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தால் அந்த வகை மாற்றம் செய்யப்பெற்று, உடனே பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் ஏதேனும், குறிப்பாக, அவருடைய தொகுதியிலே இருப்பதைப் பற்றிய விவரம் கொடுத்தால், நிச்சயமாக அது மாற்றித் தரப்படும்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்ன விளக்கம் சரிதான். இருந்தாலும் வகைமாற்றம் செய்வது என்று எடுத்துக்கொண்டால் வகை மாற்றம் செய்வதற்கு பல ஆண்டுகள் பிடிக்கிறது. ஆகவே, வகைமாற்றம் செய்யாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையோ அல்லது கோட்டாட்சித் தலைவரையோ உள்ளடக்கிய ஒரு குழுவை அமைத்து, அங்கேயே அதை முடிவு செய்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** வகை மாற்றம் செய்யாமல் பட்டாவை நேரடியாகக் கொடுக்கவே முடியாது. ஏன் என்றால், இது நிறைய தவறுகளுக்கு வழி வகுத்துவிடும். அதை நத்தமாக மாற்றித்தான் கொடுக்க முடியும். பாட்டைப் புறம்போக்காக இருந்தாலும், பாறை புறம்போக்காக இருந்தாலும், வண்டிப் பாதையாக இருந்தாலும், எந்த புறம்போக்காக இருந்தாலும் வகை மாற்றம் செய்துதான் கொடுக்க முடியும். நத்தமாக மாற்றாமல் கொடுக்கவே முடியாது. நீங்கள் சொன்ன மாதிரி வருடக் கணக்கிலே இல்லை. உடனே மாற்றம்

செய்து கொடுக்கச் சொல்கிறேன். நேரடியாகப் புலத் தணிக்கை செய்து உடனே கொடுப்பதற்கு, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுத்தான் இப்போது பட்டா கொடுத்து கொண்டிருக்கிறோம். அதனால்தான் இப்போது இவ்வளவு கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆக, உறுப்பினர் அவர்கள், எங்காவது அப்படி காலதாமதம் ஆகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். காலதாமதம் என்று ஏற்கெனவே சொன்னீர்கள். ஏற்கெனவே 4 இலட்சம் வரை பட்டா கொடுத்துவிட்டோம். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சொன்னபடி மூன்று இலட்சத்திற்கு மேலே ஒரு இலட்சம் கொடுத்தாலும், இதையெல்லாம் அந்த வருவாய்த் துறையினுடைய பதிவேட்டில் வகை மாற்றம் செய்கின்ற பணியும் சம காலத்தில் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். இராசசேகரன்:** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. 5 நிமிடம் தேவைப்படுகிறது. ஆகவே, அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்திரா குடியிருப்புத் திட்டம். இந்திரா குடியிருப்புத் திட்டத்திற்கு இதுவரை ரூ.37,500 வழங்கப்பட்டு வந்தது. இப்போது ரூ.55,000-ஆக மத்திய, மாநில அரசுகளுடைய நிதியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை வரவேற்கின்ற அதேநேரத்தில் இன்றைக்கு இருக்கின்ற விலைவாசியில் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு இந்தப் பணம் போதாது. அதனை ரூ. 1,00,000 ஆக உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். ரூ.7,800 கோடி ரூபாய் அளவிற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டைவிட ரூ.2,000 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்டிருப்பதோடு 100 உயர்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படும் என்றும், 100 மேல்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், தமிழக முதல்வரையும், அமைச்சரையும் கேட்டுக்கொள்வது, இந்த ஆண்டு எத்தனை முன்மொழிவுகள் நிபந்தனைக்கு உட்பட்டு வந்ததோ அத்தனையையும் நிறைவேற்ற



வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று கேட்டால், குறிப்பாக என்னுடைய தொகுதியில் இந்த ஆண்டு 5 முன்மொழிவுகள் வந்திருக்கின்றன. இதில் எத்தனை தரம் உயர்த்தப்படும் என்று எனக்குத் தெரியாது. ஆனால், மக்களுடைய விருப்பம், 5 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர் சென்று படிக்க வேண்டி இருக்கின்ற காரணத்தால் இந்த 5 இடங்களுக்கும் உயர்நிலைப் பள்ளி வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த 5 இடங்களுக்கு மட்டும் நான் சொல்லவில்லை, குறிப்பாக, முன்மொழிவுகள் எத்தனை பெறப்பட்டதோ, அத்தனைப் பள்ளிகளையும் தரம் உயர்த்தி வழங்க வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கத்தை மாத்திரம் சொல்லி நான் அமைய விரும்புகிறேன். உறுப்பினர் அவர்கள் முன்மொழிவுகள் அனுப்பப்படக்கூடிய அனைத்துப் பள்ளிகளுக்கும் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். இருந்தாலும்கூட, இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பதைப்போல, அனைவருக்கும் இடைநிலைக் கல்வி "SUCCESS" என்கின்ற ஒரு மிகப் பெரிய திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலே மிக முக்கியமான ஒரு குறிக்கோள் என்னவென்று சொன்னால், 5 கிலோ மீட்டருக்கு உள்ளே அமையக்கூடிய எந்த ஒரு பகுதியிலும், ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் இருக்கும் என்று சொன்னால் அதை ஒரு முக்கியக் குறிக்கோளாக வைத்துக்கொண்டு, அந்தக் கிராமங்கள் அனைத்திலுமே உயர்நிலைப் பள்ளிகளை அமைப்பதற்கான மிகப் பெரிய திட்டத்தை அவர் அறிவித்திருக்கிறார். அந்தத் திட்டம் வருகிறபோது நீங்கள் சொல்லக்கூடிய அத்தனை வாய்ப்புகளையும் நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றித் தரும்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. இராமகிருஷ்ணன். (குறுக்கீடு) சொல்லுங்கள், சீக்கிரம்.

**திரு. எஸ். இராசசேகரன்:** என்னுடைய தொகுதி சம்பந்தமாக நான் எதுவுமே சொல்லவில்லை. ஆகவே அதை மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். என்னுடைய ஆலங்குடியில் பேருந்து பணிமனைத் தொடங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைத்திருக்கிறேன்; அதை நிறைவேற்ற வேண்டும். அதேபோல மக்கள் நல்வாழ்வுத் துறையின்மூலமாக கீரமங்கலத்தில் 24 மணி நேர மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்டதாக ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றதையெல்லாம் எழுதிக் கொடுங்கள். திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனது கருத்துகளை இந்த அவையிலே பதிவு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். சமீபகாலத்தில் பெய்த மழையால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு, அவர்களுக்கு வழங்கக்கூடிய நிவாரண உதவி குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.

தேனி மாவட்டத்தில் கருப்பு திராட்சை அதிகமாகப் பயிரிடப்பட்டு வருகிறது. கருப்பு திராட்சை என்பது நீண்ட காலப் பயிர். அறுவடை நிலையில் இருந்த கருப்பு திராட்சைப் பயிர். பலத்த மழையால் பந்தலிலேயே அழுகி முற்றிலும் வீணாகிவிட்டது. மேலும், மற்ற விவசாயத்தைப்போல அல்லாமல் திராட்சைப் பயிர் என்பது கட்டமைப்பு கொண்ட ஒரு பயிராகும். அதற்குப் பந்தல் போடப்பட வேண்டும். பந்தல் அமைப்பதற்கு ஏக்கருக்கு 2 இலட்சம் ரூபாய் செலவாகும். கம்பம் தொகுதியில் 10 ஏக்கருக்கு மேல் பலத்த மழையால் பந்தல் சரிந்து, அறுவடை நிலையில் இருந்த பழுத்த திராட்சைப் பழங்கள் அழுகியதோடு, பந்தலும், கற்கால்களும் நொறுங்கி இருக்கின்றன. கம்பத்தில் 1-வது வார்டு பொன்னுத்தாய் என்பவருடைய நிலத்திலும், 15-வது வார்டு புதுப்பட்டியில் ஏ.வி. ராமராஜ் என்பவருடைய நிலத்திலும், ஆனைமலைப்பட்டியில் சின்னத்துரை என்பவருடைய நிலத்திலும், நாராயணதேவன்பட்டியில் முத்தையா என்பவருடைய நிலத்திலும் கிட்டத்தட்ட திராட்சைப் பந்தல்கள் முழுமையாக சரிந்து விழுந்திருக்கின்றன. மாண்புமிகு



உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நிவாரணப் பயிர் பட்டியலில் கருப்பு திராட்சையைச் சேர்க்கவில்லை. ஆகவே, கருப்பு திராட்சைக்கும் நீங்கள் உரிய நிவாரணத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கம்பம், போடி பகுதிகளில் உலவு விவசாயம் அதிகமாக நடைபெறுகிறது. இது வெடிப்பு ஏற்படுகின்ற சமயம். வெடித்து இருக்கிற அந்த உலவங்காய்க்குள் மழை நீர் உள்ளே சென்று பஞ்சு கருத்துப்போய் வீணாகியிருக்கிறது. அந்த விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அடுத்ததாக, 1956 ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலம் பிரிக்கின்றபோது, தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் பகுதி, நமது எல்லைக்குட்பட்டதாக இருந்தது. 56 ஆண்டுகளாக ஒகேனக்கல் சுற்றுலாத் தலமாக இருந்து வருகின்றது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் அங்கே சென்று நீராடி மகிழ்ந்து, மீன் உணவு வகைகளை உண்டு வருகின்ற, மகிழ்ச்சியைத் தருகின்ற ஒரு இடமாக ஒகேனக்கல் இருந்து வருகின்றது. இந்த ஒகேனக்கல் எல்லைப் பிரச்சினையின் காரணமாக சமீபகாலத்தில் கர்நாடகத்திலிருந்து சில அரசியல் கட்சித் தலைவர்களும், கன்னட அமைப்பினரும் தருமபுரி எல்லைக்குள் நுழைந்து ஒகேனக்கல் எங்களுடையது என்று சொல்வது நாட்டின் இறையாண்மைக்கு உட்பட்டது கிடையாது. 56 ஆண்டுகளாக நாம் பயன்படுத்தி வந்த ஒன்று. இதை மத்திய அரசு கண்டிக்கவேண்டும். தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் இந்த விஷயத்தில் தமிழக அரசு எச்சரிக்கையாக இருந்து, மத்திய அரசை வலியுறுத்தி, ஆரம்ப நிலையிலேயே கிள்ளி எறிய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற நிலையில் உழவர்கள் வாழ்க்கை இன்று கேள்விக்குறியாக இருக்கிறது. உழுதுண்டு வாழ்பவர்களெல்லாம் வறுமையின் கோரப் பிடியில் சிக்கி, நசிந்து வருகின்றார்கள். ஆண்டுகள் மாறுகின்றதோ இல்லையோ, ஒவ்வோர் ஆண்டும் விவசாயிகள் தாங்கள் விளைவித்த

விளைபொருளுக்கு உயர்வு வேண்டுமென்று வீதியில் இறங்கி போராடுகின்ற காலம். நெல்லுக்கு உரிய விலை வேண்டுமென்று டெல்லிக்குச் சென்று நம்முடைய விவசாயிகள் போராடினார்கள். வடமாநிலத்தைப் பொறுத்தவரை விவசாயிகள் கையில்தான் அரசியல் சிக்கி இருக்கிறது. அதுதான் காரணமோ என்னவோ, கோதுமைக்கு குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் என்று மத்திய அரசு விலை நிர்ணயிக்கின்றபோது, நெல்லுக்கும் குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாயை நிர்ணயிப்பதற்கு மறுக்கிறது. இது விவசாயிகளுக்குச் செய்கின்ற துரோகமாகும். இது வேதனை தரக்கூடிய ஒரு செயலாகும். கோதுமை என்பது மானாவாரிப் பயிர். அதற்கு பூச்சி மருந்து தேவை இல்லை; உரம் தேவை இல்லை. ஆனால் நெல் இறைவைப் பயிர். அதற்கு பூச்சி மருந்து தேவைப்படுகிறது, இடுபொருள் தேவைப்படுகிறது. மேலும், கோதுமையை மாவாக அரைக்கின்றபோது, 2 கிலோ கழிவுதான் வருகிறது, 98 கிலோவை மாவாக அரைக்கின்றபோது ஒரு கிலோ 20 ரூபாய், 25 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. அரைக்கின்ற செலவு என்பது வெறும் 30 ரூபாய்தான். ஆனால், நெல்லை அரிசியாக அரைக்கின்றபோது, 32 கிலோ தவிடு, உமியினால் கழிவாகிறது. 68 கிலோ அரிசிதான் கிடைக்கிறது. அதை ஊறவைத்து, அவித்து, காய வைத்து, மீண்டும் அரைத்து அரிசியாக்குவதற்கு 155 ரூபாய் செலவாகிறது. இவ்வளவு இடர்ப்பாடுகளுக்கிடையே, உற்பத்திச் செய்கின்ற நெல் உற்பத்தியாளர்களுக்கு ஆயிரம் ரூபாயே போதாது. நெல்லுக்கு குவிண்டாலுக்கு 1,200 ரூபாய் பெற்றுத் தருகின்ற வகையிலே தமிழக அரசு, மத்திய அரசை நிர்பந்திக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2007 ஆம் ஆண்டு இரண்டாம் போக நடவின்போது உரத் தட்டுப்பாடு கடுமையாக இருந்தது. குறுகிய காலப் பயிறுக்கு, நெல் போன்ற பயிறுக்கு அடி உரம் இன்றியமையாதது. அந்தப் பயிர் நன்கு வளர்ச்சியடைந்து நல்ல மகசூல் தருவதற்கு இரண்டு காரணிகள் மிக முக்கியம். ஒன்று, இயற்கை உரம், மாட்டு உரம் அல்லது ஆட்டு உரம், பசுந்தாள் உரம் தேவைப்படுகிறது. இல்லையென்றால், இரசாயன உரத்தை நாம் பயன்படுத்தவேண்டும். ஆனால் இப்போது மாட்டு உரத்தை எடுத்துக்கொண்டால், தங்கத்தைக்கூட விலை கொடுத்து வாங்கிவிடலாம், மாட்டு உரம் கிடைக்காத நிலை இருக்கிறது. குறுகிய காலப் பயிர் நடுகின்றபோது, அடி உரமாக தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து போன்ற கலப்பு உரங்களை இட்டால்தான் வேர் நீண்டு, பயிர் செழுமையாக வளர்ந்து, அதிக



சிம்புகள் வெடித்து, நெல் மணிக் கதிர்கள் உருவாகி, அதிக மகசூல் தரும். ஆனால் கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில் தமிழகம் முழுவதும் உரத் தட்டுப்பாடினால், உரம் கிடைக்காத காரணத்தால், ஏக்கருக்கு 40 மூட்டை நெல் விளைகின்ற இடத்தில், வெறும் 15 மூட்டை, 18 மூட்டைதான் விவசாயிகள் விளைவித்திருக்கின்றார்கள். அதனால், ஒரு ஏக்கருக்கு விவசாயிக்கு 10 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில், வெள்ளமும் விவசாயிகளைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. ஆகவே, நெல் விவசாயிகளுக்கு பத்தாயிரம் ரூபாய் தருவதோடு நிவாரணமாக 20 ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

மீனவர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்த அவையில் அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் உரிய பதில் தந்திருக்கிறார்கள். ஆனால், தொடர்ந்து தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்படுகின்றார்கள். சர்வதேச கடல் எல்லையில் நம்முடைய மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கின்றபோது இலங்கை கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்படுகின்றார்கள், கொல்லப்படுகின்றார்கள்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் மாண்புமிகு பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். தமிழக மீனவர்களைச் சுட்டுக்கொல்லுகின்றபோது, இந்திய கடற்படை சோம்பேறித்தனமாக, நொண்டி வாத்தாக, செயலற்ற நிலையில்தான் இருக்கின்றதேயொழிய, தீவிர நடவடிக்கை எடுக்கின்ற இடத்திலே இல்லை என்பதைத் தெளிவாக இந்தியப் பிரதமருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

மேலும், பாரதப் பிரதமருக்கு ஒரு தவறான தகவல் தரப்பட்டுள்ளது. பெரும்பாலான துப்பாக்கிச் சூடுகள் சர்வதேச எல்லையில்தான் நடந்திருக்கின்றன. ஆனால், பாரதப் பிரதமருக்கு தந்த தகவல்களில் இலங்கை நீர் பரப்பில், இலங்கை கடற்பரப்பில்தான் அந்த துப்பாக்கிச் சூடு நடந்ததாக தகவல் தரப்பட்டுள்ளது. அந்தத் தவறான தகவலை நிவர்த்தி செய்கின்ற வகையிலே எங்கள் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுவதோடு, இதுவரை பாதிக்கப்பட்டுள்ள

மீனவர்களுக்கு, துப்பாக்கிச் சூட்டினால் இறந்த மீனவர் குடும்பங்களுக்கு .... (மணியடிக்கப்பெற்றது) 15 நிமிடங்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். எனக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. 15 நிமிடங்கள் இல்லை. முடிந்தது. முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** எனக்கு 15 நிமிடங்கள்தான் ஒதுக்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிங்க சார். (குறுக்கீடு) இல்லைங்க, 15 நிமிடங்கள் இல்லை.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லைங்க. யார் சொன்னது 15 நிமிடங்கள் என்று?

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லைங்க. நேரம் இல்லைங்க. Time இல்லை. இன்னொரு உறுப்பினர் பேச வேண்டியிருக்கிறது. உரையை முடியுங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே மற்ற கட்சிகளுக்கு 15 நிமிடங்கள் கொடுப்பது என்று முடிவெடுத்தது உண்மை. ஆனால், எதிர்பாராத விதமாக இன்றையதினம் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாம் நிறைய நேரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அடுத்து காங்கிரஸ் கட்சி பேசி, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினரும் பேசவேண்டும். தி.மு.க. இன்றைக்கு தியாகம் செய்திருக்கிறது. திரு. பிச்சாண்டி பேசவில்லை. எனவே, அருள்கூர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாளைக்குப் பேசுங்கள். (குறுக்கீடு) நாளைக்கு உங்கள் உறுப்பினர் 15 நிமிடங்கள் பேசி முடிக்கட்டும். இன்றைக்கு கொஞ்சம் ஒத்துழைப்பு தாருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், 10 நிமிடங்கள் பேசியிருக்கின்றீர்கள். 10 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)



**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இந்த விவாத நேரத்திலேயே நான் உரையை முடித்திருப்பேன். இதுவரை சுட்டுக் கொல்லப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு நஷ்ட ஈட்டினை இலங்கை அரசிடமிருந்து இந்திய அரசு பெற்றுத் தரவேண்டுமென்ற கோரிக்கையை நான் தமிழக அரசின் முன்வைக்கின்றேன்.

அதைப்போல, மின்சாரம். இன்றைக்கு தமிழ்நாட்டிலே வரலாறு காணாத வகையில் இருள் சூழ்ந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர். (குறுக்கீடு) உட்காருங்கள் please. திரு. விடியல் எஸ். சேகர் 5 minutes. 5 நிமிடங்கள்தான். (குறுக்கீடுகள்)

***திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை, மிகச் சிறப்பான நிதிநிலை அறிக்கை. இந்த நிதிநிலை அறிக்கை குறித்து எங்கள் சட்டமன்ற கட்சித் தலைவர், பட்ஜெட் எப்படி இருக்கிறது என்று வெளியே வருகின்றபோது நிருபர்கள் கேட்டபோது ஒரு செய்தியைச் சொன்னார்கள். நிதிநிலை அறிக்கை எப்படி இருக்கிறது என்று கேட்டபோது தேனில் ஊறவைத்த பலாச்சுளை போல இருக்கிறது என்று சொன்னார்கள். அதை ஆங்கிலத்தில் சொல்லுங்கள் என்று பக்கத்திலே இருந்த ஆங்கிலப் பத்திரிகை நிருபர் கேட்டபோது, 'Jack fruit with honey' என்று ஆங்கிலத்திலே சொன்னார்கள். அப்படி நல்ல அருமையான நிதிநிலை அறிக்கையை தந்திருக்கிற நிதியமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொண்டு, விவசாயிகளுக்காக மத்தியிலே இருக்கின்ற காங்கிரஸ் அரசு எப்படி சாதனைக்குரிய பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறதோ அதைப்போல, காங்கிரஸ், ஆதரவோடு இருக்கிற தமிழக அரசு இன்றைக்கு வேளாண்மைத் துறைக்கு மிகப் பெரிய சாதனைகளைச் செய்திருக்கிறது. பயிர்க் கடனுக்குரிய வட்டிக் கடனைக் குறைத்திருக்கிறது. ரூபாய் 1,500 கோடிக்குப் புதிய கடனை அறிவித்திருக்கிறது. தமிழகம் முழுவதும் இருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு 152 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அவர்களுடைய நலத் திட்ட உதவிகளுக்காக வழங்கியிருக்கிறது.

பிற்பகல் 1-15

கோதுமைக்கு 1,000 ரூபாய் வழங்குவதைப் போல, நெல்லுக்கும் 1,000 ரூபாய் பெற்றுத் தருவோம் என்ற உறுதிமொழியைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கும் இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல விவசாயத் துறையைப் பொறுத்தமட்டிலே ஆதாரமாக இருப்பது, அமைப்பாக இருப்பது பாசனம். பாசனத்திற்காக முன்னுரிமை அளித்து இந்த பட்ஜெட்டிலே 165 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பது, நதிநீர் இணைப்புக்காக ஒதுக்கி இருப்பது வரவேற்கக்கூடிய விஷயமாக இருக்கிறது.

மத்திய அரசினுடைய தேசிய தோட்டக் கலை இயக்ககத்தின் மூலமாக விரிவுபடுத்தி சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனத்திற்காக 50 சதவிகித மானியம் வழங்குவதற்கு 169 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது வரவேற்கத் தகுந்த விஷயம்.

இலவச மின்சாரம் தொடர்ந்து நிலைக்கும் என்கிற செய்தி இனிக்கிற செய்தியாக இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு பால் விவசாயிகளுக்கு, பால் உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு விலையை உயர்த்திக் கொடுத்து அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளிவிளக்கேற்றி, அவர்களுடைய வயிற்றிலே பால் வார்த்த அரசாக இந்த அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது. சட்டமன்றத்தில் நான் தொடர்ந்து பேசுகிறபோது பல முறை பால் விவசாயிகளுக்கு பால் விலையை உயர்த்த வேண்டும் என்று கேட்டேன். அதைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோல, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கலப்பின கறவை மாடுகள் வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டக் கால்வாயைச் சீரமைக்கும் பணிக்கு வரவேற்பு தெரிவிக்கிறோம். காளிங்கராயன் அணைக்காக 12 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்கு நன்றி தெரிவிக்கிறோம். அதோடு L.B.P. பாசனப் பகுதியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அமைச்சரிடத்திலே பணிவாக வேண்டுகோள் வைக்கிறேன்.

அடுத்து, காலைப் பத்திரிகைகளிலே என்ன செய்தி என்று பார்த்தால் விபத்திலே இந்தியாதான் முதலிடம் என்று



சொல்கிறார்கள். அதுவும் தமிழகம்தான் அதிகமான விபத்து நடக்கிற மாநிலமாக இருக்கிறது. விபத்து பாதுகாப்பிற்காக சிறப்புத் திட்டங்கள் தீட்டப்படும் என்று போக்குவரத்துத் தலைப்பிலே அறிவித்தது பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியது. விபத்துப் காப்பீடு மூலமாக, விபத்துப் பாதுகாப்பிற்காகச் சிறப்புத் திட்டங்களைத் தீட்டி விபத்தைக் குறைப்பதற்கும், விபத்து இல்லாமல் ஓட்டுகிற ஓட்டுநர்களுக்குப் பதக்கம் வழங்கப்படும் என்று அறிவித்ததும் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரிய அறிவிப்பாக இருக்கிறது.

நிதிநிலை அறிக்கையில் பக்கம் 14 வரிசை எண் 30-லே மிகத் தெளிவாக காங்கிரஸ் கட்சியினுடைய வேண்டுகோளை ஏற்று அறிவித்திருக்கிறார்கள். சட்டவிரோதமாகச் செயல்படும் இயக்கங்களைத் தடை செய்வோம், அதைத் தொடர்ந்து இந்த அரசு செயல்படுத்தும் என்ற ஒரு நல்ல செய்தியைச் சொன்னதற்காக காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்து பள்ளிக் கல்விக்காக கிட்டத்தட்ட 7,858 கோடி ரூபாய் ஒதுக்கி பள்ளிக் கல்விக்கு உயர்வைத் தந்திருக்கிறார்கள். 'காண்போம், கற்பிப்போம்' மிகச் சிறந்த கல்வி முறையை அறிமுகப்படுத்தி சிறந்த முறையிலே செய்து கொண்டிருக்கிறீர்கள்.

அதைப்போல, கல்வித் துறையில் கணினி வழங்கப்படுகின்ற திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். முதலிடம் பெறுகின்ற தமிழ் வழிக் கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு கணினி வழங்கப்படும், ஊக்கப் பரிசாக வழங்கப்படும் என்கிற செய்தி மாணவர்களுக்கு இனிக்கிற செய்தியாக இருந்துகொண்டிருக்கிறது.

மேலும், பள்ளிகள் என்று வருகிறபோது ஒரு சிறிய சிக்கல் இருந்து கொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய சத்துணவுக் கூடங்களுக்கான மின்சாரக் கட்டணத்தை இதுவரை அரசு கட்டிக்கொண்டிருந்தது. ஆனால், இதுசம்பந்தமாக ஒரு புதிய அரசாணை கடந்த மாதத்தில் வெளியிடப்பட்டது. அந்த அரசாணையிலே ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய சத்துணவுக் கூடங்கள், அரசுப் பள்ளிகள் மின் கட்டணத்தைத் தாங்களாகவே செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை மின்சாரத் துறை அமைச்சரும், உள்ளாட்சித் துறை அமைச்சரும் கருணை கூர்ந்து கவனித்து, கல்வி அமைச்சரோடு இணைந்து பள்ளிகளுக்கு, சத்துணவுக் கூடங்களுக்கு

மின் கட்டணத்தைத் அரசே தொடர்ந்து செலுத்தும் என்ற அறிவிப்பை வெளியிட்டு பெருமை சேர்க்க வேண்டுகிறேன்.

அதைப்போல, அரசு கல்லூரிகளைச் சீரமைப்பதற்கு ஒதுக்கிய தொகை மிகக் குறைவாக இருக்கிறது. அரசு மேல்நிலைப் பள்ளிகள் ரூ. 8.5 கோடியில் சீரமைக்கப்படும், வசதிகள் மேம்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறது. உயர் கல்வியைப் போதிக்கும் கல்லூரிகளைச் சீரமைக்க இந்த அரசு 8.5 கோடி ரூபாய் ஒதுக்கியது மிகக் குறைவாக இருக்கிறது.

அடுத்து, ஐ.டி.ஐ. படிக்கிற மாணவர்களுக்கான கட்டணத்தை அரசு தானே செலுத்தும் என்ற அறிவிப்பு பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரிய அறிவிப்பாக இருந்துகொண்டிருக்கிறது. மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஈரோட்டிலே மருத்துவக் கல்லூரி இல்லை என்று கேட்டபோது I.R.T.T.-க்கு மருத்துவக் கல்லூரி இருக்கிறது, போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரி இருக்கிறது என்ற செய்தியைச் சொன்னார்கள். (மணியடிக்கப்பெற்றது) அந்த மருத்துவக் கல்லூரியைத் தரம் உயர்த்தி, மக்கள் நல்வாழ்வுத் துறைபோடு இணைந்து, அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மக்களுக்குப் பயன்படுகிற, ஏழையெளிய மக்களுக்குப் பயன்படுகிற பொது மருத்துவமனையாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இனி எங்கள் பகுதியினுடைய முக்கியமான கோரிக்கை, கடந்த ஆளுநர் உரையின்போது நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்த திட்டம், 'சொல்வதைச் செய்வோம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன். (குறுக்கீடுகள்) எழுதிக் கொடுங்கள், எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) சொன்னால் கேட்க வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

பிற்பகல் 1-20

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற பொது விவாதத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்த்தீர்களா, உட்காருங்கள், விடியல் எஸ். சேகர்.



***திரு. ஆ. அருண்மொழிதேவன்:** இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது பொற்பாதங்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேச ஆரம்பித்துவிட்டார். நீங்கள் நாளைக்குப் பேசிக்கொள்ளலாம், உட்காருங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** தற்போது மக்கள் படும் அவதிகளுக்கு எந்தத் திட்டமும், நடவடிக்கையும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை. கலர்தான் மாறி இருக்கிறதே தவிர, வேறு எந்த மாற்றமும் இல்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே தமிழகம் மின் வெட்டு இல்லாத மாநிலமாக, சட்டம் ஒழுங்கு சிறப்போடு இருந்த மாநிலமாக, விலைவாசி கட்டுப்பாட்டிற்குள் இருந்த மாநிலமாகத் திகழ்ந்தது. 2001-ல் கடுமையான நிதிநிலை நெருக்கடியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடுமையான வறட்சி, சுனாமி, கடும் வெள்ளம் ஆகிய இயற்கை இடர்களையெல்லாம் சமாளித்து, அந்த ஆட்சிக் காலத்தில் சிறப்பான திட்டங்களையெல்லாம் கொண்டு வந்து, தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றப் பாதையிலே அழைத்துச் சென்றவர்கள் எங்களுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. தமிழகத்தினுடைய ஜீவாதார பிரச்சினைகளான காவிரி, முல்லை-பெரியாறு, பாலாறு உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எவ்வித நடவடிக்கையும் இல்லை. படித்துப் பார்த்தோம என்று சொன்னால், ஏற்பாடு ஆகிவிட்டது, ஒப்பந்தம் போடப்பட்டு இருக்கிறது, மத்திய அரசுக்கு எழுதப்பட்டு உள்ளது. கோரப்பட்டு உள்ளது, மத்திய அரசு பாராமுகமாக இருக்கக்கூடாது என்ற சொற்கள்தான் இருக்கிறதேயொழிய மக்களுடைய முன்னேற்றத்திற்காக நிதிநிலை அறிக்கையிலே எதுவுமே இல்லை.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட திட்டங்கள்கூட பல திட்டங்கள் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்ற நிலைதான் இருக்கின்றதே தவிர, இந்த வருடம் இது ஒரு வெற்று அறிவிப்பு நிதிநிலை அறிக்கையாகத்தான் இருக்கிறது என்பதை மக்கள் நன்றாக அறிந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டத்தில் உள்ள வெலிங்டன்

ஏரியில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று 23-3-2007 அன்று அறிவித்தீர்கள். அறிவித்து தற்போது 2 ஆம் வருடம் தொடங்கிவிட்டது. இன்னும் டெண்டர்கூட விடப்படவில்லை. அம்மா அவர்கள் சொன்னதுபோல், அறிவிப்புக்கு ஓர் ஆண்டு, ஆய்வுக்கு ஓர் ஆண்டு, நிதியொதுக்க ஓர் ஆண்டு, மதிப்பீட்டிற்கு ஓர் ஆண்டு என்று ஆண்டுகள்தான் கடந்துகொண்டிருக்கிறதேயொழிய எந்தப் பணிகளும் இந்த ஆட்சியிலே நடைபெறப் போவதில்லை என்பதே உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 30-5-2007 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்திலே கடலூர் மாவட்டத்தில் வெள்ளாற்றிலே, திட்டக்குடி, முருகன்குடி, பெண்ணாடம் ஆகிய பகுதிகளிலே பாலம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். நிச்சயம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அறிவித்ததோடு சரி.

பத்தி 3-லே வேளாண் கடன்களுக்கான வட்டி விகிதம் 5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக குறைக்கப்படும் என்று கூறியிருக்கிறீர்கள். ஆனால், சென்ற பட்ஜெட்டிலே, 7 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிதமாகக் குறைக்கப்படும் என்று சொன்னீர்கள். ஆனால், விவசாயிகளிடத்திலே இன்னும் அந்த 7 சதவிகித வட்டிதான் வசூலிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறதேயொழிய அந்த வட்டிக் குறைப்பு இன்னும் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. கேட்டால் ஏதோ குழப்புகின்ற விதத்திலே பதிலைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். 5 சதவிகிதத்தில் இருந்து 4 சதவிகிதமாகக் குறைத்திருக்கின்ற இந்த அறிவிப்பும் மக்களைச் சென்றடையுமா என்பது இன்றைக்கு மக்கள் மத்தியிலே மிகுந்த ஏமாற்றம் அளிக்கக்கூடிய விஷயமாக உள்ளது. பத்தி 6-லே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 சதவிகித வட்டியில் இருந்து 7 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. அது நடைமுறைப்படுத்தப்பட்டது. 7 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமான வட்டிக் குறைப்பு என்பது, வாங்கிய கடனை உரிய காலத்திலே கட்டியவர்களுக்கெல்லாம் 5 சதவிகிதம்தான் வசூலிக்கப்பட்டது. இப்போது 4 சதவிகிதமாக அறிவித்து இருக்கின்றோம். நடைமுறைப்படுத்தப்படும்.



**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** பல கூட்டுறவு சொசைட்டிகளை என்னால் உதாரணமாக சொல்ல முடியும். இன்றைக்கு இயற்கைப் பேரிடர்களால் விவசாயிகள் எல்லாம் வாங்கிய கடனைச் செலுத்த முடியாமல் கடன் தள்ளுபடி என்று அறிவிப்புகள் எல்லாம் வந்து கொண்டிருக்கிற நிலையிலே, இதை வட்டிக் குறைப்பாக அவர்கள் எடுத்துக்கொள்ள முடியாது. எல்லா இடங்களிலும் 7 சதவிகிதம்தான் வசூலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

பத்தி 6-ல் வடகிழக்குப் பருவமழையால் தமிழகத்தில் ஏற்பட்ட பாதிப்பை மத்திய அரசினுடைய குழு பார்வையிட்டது; நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது; 56.5 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்று கூறி இருக்கிறீர்கள். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் கடுமையான மழை பெய்தது. அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, நிவாரண உதவிகளை வழங்குவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் யாருக்கும் எந்த உதவியும் கிடைக்கவில்லை. தொடர்ச்சியாக டிசம்பர் மாதம் கடும் மழை பெய்தது. அந்த நேரத்தில்கூட வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். மக்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை. அப்போது பயிரிடப்பட்டிருந்த இலட்சக் கணக்கான ஏக்கர் நெற்பயிர் அழுகி விவசாயிகளுடைய வாழ்வாதாரம் சீரழிக்கப்பட்ட நிலையிலே, மீண்டும் இப்போது மழை பெய்து அந்த நெற்பயிர்களிலே, ஊடுபயிராகப் பயிரிடப்பட்டிருந்த உளுந்து பயிர் அழுகி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது ஏதோ அறிவித்திருக்கிறீர்கள். அறிவித்த நிவாரணமாவது எந்தவித பாரபட்சமும் இன்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அவர்களது பாதிப்புக்குத் தக்கவாறு வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

அதோடு என்னுடைய தொகுதியிலே வடக்குப்பாளையம், பாளையங்கோட்டை என்ற கிராமத்தின் அருகிலே இருக்கக்கூடிய வடக்கு புத்தேரி என்ற பெரிய ஏரியில் கடந்த அக்டோபர் மாதம் பெய்த மழையிலே உடைப்பு ஏற்பட்டு, அதன் தொடர்ச்சியாக மணல் மூட்டைகள் அடுக்கவந்தபோது மணல் மூட்டைகளை அடுக்கக் கூடாது, மணல் மூட்டைகளை அடுக்கினால் மீண்டும் பாதிப்பு

வருமென்று சொல்லி அந்தப் பகுதி மக்கள் தடுத்துவிட்டார்கள். நானும் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளிடத்திலே அதுபற்றித் தெரிவித்தேன். ஆனால், இப்போது அங்கே இரவு நேரத்திலே மணல் மூட்டைகளை அடுக்கிவிட்டு சென்றுவிட்டார்கள். தற்போது டிசம்பர் மாதம் மழை வந்தபோது அந்த ஏரியில் உடைப்பு ஏற்பட்டது. நூற்றுக்கணக்கான வீடுகள், நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள்—அந்த இரண்டு கிராமங்களும்—பாதிக்கப்பட்டு ஒரு சுனாமியினுடைய பாதிப்பை அந்த மக்கள் சந்தித்தார்கள். இந்த ஆட்சியாளர்களுடைய நிர்வாகச் சீர்கேட்டிற்கு அதை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இப்படிப்பட்ட நிலை இல்லாமல் இப்போது நிவாரண உதவிகளைச் செய்யும்போது, சுய இலாபத்தில் செயல்படக்கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது பெய்த கன மழையால் எங்களுடைய பகுதியிலே, சிதம்பரம் வட்டத்திலே, புவனகிரி பகுதியிலே நேற்றைக்கு நூற்றுக்கணக்கான மாடுகள், கொசுக் கடியால் பாதிக்கப்பட்டுள்ளன. மழையினால் உளுந்து பயிர்களெல்லாம் அழுகி வருகின்ற தண்ணீர் எல்லாம் கருப்பு நிறமாக மாறி வருகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. கொசு உற்பத்தியினால் விஷக்கடி ஏற்பட்டு நேற்று காலை முதல் மாலை வரை அரசாங்க கணக்குப்படி நூற்றுக்கணக்கான மாடுகள் சிதம்பரம் வட்டம், புவனகிரி பகுதியிலே இறந்திருக்கின்றன. விஷக் கொசுக்கள் கடித்து மனிதர்களுக்கும் அந்த நோய் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த நிலை ஏற்படாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

அதேபோல, கரும்பு விவசாயிகள். கரும்பு விவசாயிகளுக்கு உரிய நேரத்திலே வெட்டும் ஆணை வழங்கப்படுவதில்லை. கரும்பு விவசாயிகள் தங்களுடைய பயிரை தீயிட்டு கொளுத்துகின்ற நிலைமை இருக்கிறது. கரும்புக்கு டன்னுக்கு 1,500 ரூபாய் கிடைக்க வேண்டுமென்று விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள். 26-10-2006-ல் இந்த அரசு ஓர் உத்தரவு வழங்கியிருக்கிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு சப்ளை செய்யும் விவசாயிகளுக்கு, 10 கிலோ மீட்டருக்கு என்று இருக்கக்கூடிய அந்த வாடகையை அரசே மானியமாக ஏற்றுக்கொள்ளுமென்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், தனியார் ஆலைகளுக்குச் சப்ளை செய்யும் விவசாயிகளுக்கு அந்தச் சலுகை இல்லை. இதில் அரசு ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்ளாமல், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு



செயல்படாமல், தனியார் ஆலைகளுக்குச் சப்ளை செய்யும் கரும்பு விவசாயிகளுக்கும் அந்த வாடகையைத் தரவேண்டும். இதனால் 2006-2007-லே ரூ. 109 கோடியும், 2007-2008-லே ரூ. 127 கோடியும் அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல, நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,000 கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நிலத்தடி நீர் அளவைக் காப்பதற்காக, புரட்சிகரமான திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதைத் தீவிரமாக அமல்படுத்தினார்கள். பல மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் அந்தத் திட்டத்தை நீங்கள், அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம் என்பதற்காகப் புறக்கணிக்காமல் தொடர்ந்து தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும். பத்தி 24-லே தமிழகத்தில் நிலத்தடி நீர் குறைந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு நிலத்தடி நீர் உயரவேண்டுமென்று சொன்னால் அம்மா அவர்களுடைய புரட்சிகரமான திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை உடனடியாகத் தீவிரமாக அமல்படுத்த வேண்டும்.

பத்தி 28-லே பொது விநியோகத் திட்டத்திலே துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மற்றும் செறிவூட்டப்பட்ட கோதுமையெல்லாம் நியாயவிலைக் கடைகளிலே கிடைப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். தமிழ்நாட்டிலே எங்கும் அப்படி கிடைப்பதாகத் தெரியவில்லை. அறிவித்தபோது ஒரு முறை சப்ளை செய்யப்பட்டது. கடந்த பிப்ரவரி மாதம் இரண்டாவது முறையாகச் சப்ளை செய்யப்பட்டது. அதுவும் ஒரு கடைக்கு 50 கிலோ, 25 கிலோ வீதத்திலே சப்ளை செய்யப்பட்டு, இப்போது அந்த விற்பனையாளர்கள் பொதுமக்களுக்கு அந்தப் பொருட்களை அளித்தால் பிரச்சினை வருமென்று சொல்லி மாற்று ஏற்பாடு செய்து விற்ற கதையெல்லாம் தெரியவந்திருக்கிறது. எந்த ரேஷன் கடைகளிலும் இப்படிப்பட்ட நிலைமை இல்லை. எங்கேயும் துவரம் பருப்பும் சரி, பாமாயிலும் சரி வழங்கப்படவில்லை என்கிற உண்மையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பத்தி 29-ல் ரேஷன் கார்டுகள் காலதாமதம் இல்லாமல் வழங்கப்படுவதாகக் கூறியுள்ளீர்கள். நம்முடைய தமிழ்நாட்டிலே எங்கேயும் அம்மாதிரி இருப்பதாகத் தெரியவில்லை. ரேஷன்

கார்டுகளுக்கு மக்கள் அலையோ அலை என்று அலைந்து கொண்டிருக்கின்ற ஒரு நிலைமைதான் இருக்கிறது. உதாரணத்திற்கு இந்திய ராணுவத்திலே துணைத் தளபதி அந்தஸ்திலே பணியாற்றி ஓய்வு பெற்ற ஜெனரல் எஸ். பட்டாபிராம் என்பவர் 14 மாதங்கள் அலைந்து தலைமைச் செயலாளரிடம் புகார் கொடுத்து ஒரு ரேஷன் கார்டு பெற்றிருக்கிறார். 'ராணுவத்தில் துணைத் தளபதியாகப் பணிபுரிந்த எனக்கே இந்த நிலைமை என்று சொன்னால், பாமர மக்கள் என்ன பாடுபடப்போகிறார்கள்' என்று சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட நிலையைச் சுட்டிக்காட்டி அனைவருக்கும் உடனடியாக ரேஷன் கார்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி காலத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகள் ஏற்கெனவே மாநில அளவிலே அச்சடித்து கொடுக்கப்பட்டன. இப்போது புதியதாகத் தலைவர் கலைஞர் அவர்களின் பெரு முயற்சியால், அவர்களின் ஆலோசனையின்பேரில் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயும் அந்தந்த மாவட்டத்திலேயே ரேஷன் கார்டுகள் அச்சடித்துக் கொடுக்கப்படுகின்றன. சென்னை மாவட்டத்தைப் பொறுத்தமட்டும்தான் கமிஷனர் அலுவலகத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறதேயொழிய, மற்ற அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் கொடுக்கப்படுகின்றன. அப்படி எங்கேயாவது கொடுக்கப்படவில்லையென்று குறை சொன்னால், உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, ரேஷன் கார்டு கொடுக்கப்படும்.

பிற்பகல் *1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. இன்னும் எவ்வளவு நேரம் ஆகும் உங்களுக்கு?

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** இன்னும் *10* நிமிடங்கள். இந்திய இராணுவத்தினுடைய துணைத் தளபதியாக இருந்த ஜெனரல் எஸ். பட்டாபிராமன் என்பவருக்கே இந்த நிலைமை.



அடுத்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கல்வித் துறையிலே மற்ற மாநிலங்களுக்குத் தமிழகம் முன்மாதிரியாக இருந்தது. *2,700* நடுநிலைப் பள்ளிகளைத் துவக்கினார்கள். *2,625* பள்ளிகளைத் தரம் உயர்த்தினார்கள். கல்வித் துறையை ஊக்கப்படுத்த, படிப்பவர்களுடைய சதவீதம் உயருவதற்காக இலவச சைக்கிள், இலவசப் பாடப் புத்தகம் போன்ற புரட்சிகரமான திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். அன்றைக்கு இலவச சைக்கிள் திட்டம் கொண்டுவரப்பட்டதனுடைய நோக்கம், மாணவர்கள் நேரத்திற்குப் பள்ளிக்கு வரவேண்டும், அதனால் அவர்களுடைய தேர்ச்சி சதவீதம் உயரும் என்ற உயரிய நோக்கத்திலே எங்களுடைய அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். ஆனால், இன்றைய நிலைமை, தேர்வுகளெல்லாம் முடிகின்ற இந்தத் தருணத்தில்கூட பல பள்ளிகளிலே இலவச சைக்கிள் வழங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே குற்றச்சாட்டாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்ட சைக்கிள் without saree guard. Saree guard இல்லாமல் அதனுடைய எடை *22* கிலோ *600* கிராம் இருந்தது. ஆனால் இப்போது இந்த ஆட்சியிலே வழங்கப்படுகின்ற சைக்கிள்களினுடைய எடை வெறும் *21* கிலோ. ஒரு கிலோ மற்றும் *600* கிராம் எடை குறைந்திருக்கிறது. ஆனால், விலை உயர்ந்திருக்கிறது, எடை குறைந்திருக்கிறது. இந்த நிலை இல்லாமல்—தரமான சைக்கிளை உரிய நேரத்தில் வழங்கவில்லை—இனி வருங்காலங்களிலாவது உரிய நேரத்திலே தரமான சைக்கிளை அந்த மாணவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திண்டிவனம் தொகுதி, செண்டூரிலே அன்றைக்கு குண்டு வெடித்தபோது, குண்டு வெடித்த சம்பவ இடத்திற்கு அருகிலிருந்த பள்ளி நாசமடைந்தது. உடனடியாகக் கட்டித் தரப்படும் என்று சொன்னீர்கள். வழக்கமாக அதுவும் ஓர் அறிவிப்புபோலத்தான் இருக்கிறதேயொழிய இன்னும் அந்தப் பள்ளியினுடைய நிலைமை அப்படியேதான் இருக்கிறது.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழகம் அமைதிப் பூங்காவாக அன்றைக்குத் தீவிரவாதத்தை ஒடுக்கி,

ரவுடிகளைக் கட்டுப்படுத்தி, கட்டப் பஞ்சாயத்தை ஒழித்து, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக வைத்திருந்தவர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இன்றைக்கு இந்த நாட்டில் இருக்கக்கூடிய நிலைமையை நாங்கள் சொல்லி இந்த அவைக்கோ, மக்களுக்கோ தெரிய வைக்க வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டம்—ஒழுங்கு சீர்கேட்டால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சி என்ற முறையிலே நாங்கள் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்கிறோம். ஆனால், இந்த ஆட்சிக்கு முட்டுக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற கட்சிகளெல்லாம்கூட, அவற்றினுடைய தலைவர்களெல்லாம்கூட தினசரி பேட்டிகளிலே இந்த ஆட்சியினுடைய சட்டம்—ஒழுங்கு சீர்கேட்டை தினசரி பத்திரிகை வாயிலாகச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. ஏனென்று சொன்னால், இந்த விஷயத்திலே அவர்கள் உண்மையைப் பேசியாக வேண்டியது கட்டாயம் என்ற காரணத்தினால், சட்டம்—ஒழுங்கு சீர்கேட்டை அவர்களெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, அதியமான்கோட்டை காவல் நிலையத்திலே துப்பாக்கி திருட்டுப் போனது, பெண்ணாகரத்திலே Sub–Treasury–யிலே நேற்றைக்குத் துப்பாக்கி திருட்டுப் போனது, தென்காசியிலே மதக் கலவரம், மதுரை தினகரன் அலுவலகத்திலே 3 பேர் உயிரோடு எரிப்பு, செண்டூரிலே குண்டு வெடிப்பு, சிவகங்கை நகர் மன்றத் தலைவர், இப்படிப் பட்டியலிட்டால் இன்றைக்கு எனக்குக் கொடுத்திருக்கிற நேரம் பத்தாது. அந்த அளவிற்கு உளுந்தூர்பேட்டை அருகிலேயுள்ள எறையூரிலே ஒரே மதத்திற்குள் கலவரம் ஏற்பட்டபோது அதைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த ஆட்சி, இந்த அரசு துப்பாக்கிச் சூடு நடத்தி இரண்டு பேரைக் கொலை செய்திருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஐந்தாண்டு காலத்திலே ஒருமுறைகூட துப்பாக்கிச் சூடு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதை இந்த நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்று சொல்லிவிட்டு 20 சென்ட், 25 சென்ட் என்று வழங்கிக்கொண்டிருக்கிறீர்கள். அதுவும்கூட தி.மு.க.வினருக்கு மட்டும் வழங்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் குற்றச்சாட்டாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இந்த ஆட்சியிலே எங்கு பார்த்தாலும் குண்டு வெடித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், வழங்கப்படுகின்ற இலவச டி.வி-யும் வெடித்துக்கொண்டிருக்கிறது. இலவச டி.வி. ரேஷன் கார்டு வைத்திருக்கின்ற அனைவருக்கும் வழங்கப்படும் என்று சொன்னீர்கள். எந்த ஊராட்சியிலும் அப்படி வழங்கப்படவில்லை. பல்வேறு கிராமங்களிலே ரேஷன் கார்டுகள் வழங்கப்படாமல் மீதியிருக்கிறது. கேட்டீர்கள் என்று சொன்னால் ஆதாரத்தை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள்தான் சுற்றிக்கொண்டிருக்கிறீர்கள், நான் சுற்றவில்லை. சுனாமி சமயத்திலே மக்களுக்கு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** அன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே சுனாமியினுடைய வேகத்தைவிட வேகமாக நிவாரணப் பணிகளைச் செய்து சாதனை படைத்த சாதனைத் தலைவியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு மீனவ மக்களுக்கு உதவிய நிலைமை உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலேயும் எங்கள் அம்மாவினுடைய நிர்வாகத் திறமையை அமெரிக்காவினுடைய முன்னாள் அதிபர் பில் கிளின்டன் அவர்களே பாராட்டிச் சென்றார்கள். அப்படிப்பட்ட நிலையிலே அன்றைக்கு கட்டுமரத்திற்கு 32,000 ரூபாய், Fibre boat-க்கு 75,000 ரூபாய், மீனவர்களின் விசைப் படகுகளின் சேதத்திற்குத் தகுந்த மாதிரி 5 இலட்சம் ரூபாய் வரையிலும் வழங்கினார்கள். மேலும் கல்விக் கட்டணத்தையும் அம்மா அவர்களே ஏற்றார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? கல்விக் கட்டணத்தை ஏற்பதாகச் சொன்னீர்கள். ஏற்கவில்லை. அதோடு மட்டுமல்ல, இடைக்கால நிவாரணம் என்ற பெயரிலே 42,000 ரூபாய் வழங்கினீர்கள். இன்றைக்கு 5,000 ரூபாய் மதிப்புள்ள சைக்கிள், டார்ச் லைட், first aid box . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27-03-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

[2008 மார்ச் 26

# 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (திரை-2) துறையின் 10-7-2007 ஆம் நாளிட்ட 1054 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊர் அமைப்பு திட்டமிடல் (உள் கட்டமைப்பு-அடிப்படை வசதிகள் கட்டணம் விதித்தல்) விதிகள் இயற்றியது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (நவ4-1) துறையின் 25-1-2008 ஆம் நாளிட்ட 22 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊர் அமைப்பு திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊர் அமைப்பு திட்டமிடல் (மாநில உள் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி) விதிகள் இயற்றியது குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (நவ4-1) துறையின் 7-2-2008 ஆம் நாளிட்ட 30 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊர் அமைப்பு திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

5. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



2008 மார்ச் 26]

6. 2006-2007 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) முப்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

7. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை) முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

8. 2006-2007 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2008-2009 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கைகள் எண்கள் 1 முதல் 51 வரை. (51 புத்தகங்கள்)

2. நிதிநிலை குறித்த வெளியீடுகள் எண் 53 முதல் 63 வரை. (வெளியீடு எண் 52-பல்வகை தவிர). (11 புத்தகங்கள்)

3. 2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

4. 2008-2009 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல். (தமிழ், ஆங்கிலம்)

5. 2008-2009 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

6. 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதியமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

7. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228400
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner
of Stationery and Printing,
Chennai-600 002.